# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 24 திங்கட்கிழமை (09.08.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 256


# அரசமைப்புத் திருத்த யோசனையை பகிரங்கப் படுத்தக் கோருகிறது ஐ.தே.க.

## பேச்சுக்கான நிபந்தனையாகத் தெரிவிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 09

உத்தேச அரசமைப்புத் திருத்தம் மற்றும் 17ஆவது திருத்தம் தொடர்பான அரசின் ஆலோசனைகளைப் பகிரங்கப்படுத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

"அரசுடன் இனிமேல் பேச்சு நடத்தப்போவதில்லை என்ற எமது தீர்மானத்தை மீளாய்வு செய்ய வேண்டுமானால், அரசமைப்புத் திருத்தம் தொடர்பான ஆலோசனைகளை அரசு பகிரங்கப் படுத்த வேண்டும்'' - என நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா நேற்று 'உதயன்'க்குத் தெரிவித்தார்.

அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக பேச்சு நடத்தவரும்படி அழைப்பு விடுப்பதற்கு முன்னர் அரசமைப்புத் திருத்தங்கள் தொடர்பான அரசின் ஆலோசனைகள் முன்வைக்கப்படவேண்டும் என ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

எனினும், அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக பேச்சு நடத்த வரும்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்தமையை அடுத்து, ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அதையேற்று பேச்சு நடத்த முன்வந்தார். ஜனாதிபதி முறை மாற்றம், (24ஆம் பக்கம் பார்க்க)

## தம்புள்ள மலையில் தீ!

கொழும்பு, ஓக. 09

தம்புள்ள தஹய்யா கந்த மலைப் பகுதி நேற்று மாலை இனந்தெரியாதோரால் தீயிடப்பட்டதாகத் தம்புள்ளப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டார் எனவும் மேலும் இருவரைத் தேடிவருகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்கள் பயணம் செய்ததாகச் சந்தேகிக்கப்படும் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

## கனகாம்பிகை ஆலயத் தேர் ஓடும் வீதியை இராணுவ முகாமாக்கும் முயற்சியில் படையினர்

### எதிர்காலத்தில் மத முரண்பாடு ஏற்படலாம் என்கிறார் சரா எம்.பி.

கிளிநொச்சி, ஓக. 9

கிளிநொச்சி, கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் தேர் ஓடும் வீதியின் பெருமளவு பகுதியில் முட்கம்பிகளை அடைத்து இராணுவ முகாமாக்கும் முயற்சியில் படையினர் ஈடுபட்டுள்ளனர். தமிழ் மக்களின், குறிப்பாக கிளிநொச்சி வாழ் மக்களின் வாழ்வோடு ஒருமித்திருக்கும் இந்த ஆலயத்தினை இராணுவ மயமாக்குவதன் மூலம் எதிர்காலத்தில் அரச மரங்களுக்கும் கோயில்களுக்கும் இடையிலான முரண்படுநிலை - மத ரீதியான மோதல் - தோன்றுவதற்கு வித்திடப்பட்டுள்ளதோ என்ற சந்தேகம் (24ஆம் பக்கம் பார்க்க)

## மாணவச் செல்வங்களை வாழ்த்துகின்றான் உதயன்

கல்வியே கருத்தனம். அதுவே வாழ்வின் உயர்ச்சியுமாகும்.

இன்று ஆரம்பமாகும் கல்விப் பொதுத்தராதர உயர்தர (ஜி.சீ.ஈ. உயர்தர) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை அடைந்து கல்வியில் மேலும் உயர்ச்சி பெறவேண்டும் என்று உதயன் மனம் நிறைந்து வாழ்த்துகின்றான்.

## பஸில் ராஜபக்ஷ தலைமையில்

## அரச உயர்மட்ட மூவர் குழு புதுடில்லிக்கு ஞாயிறன்று விஜயம்

கொழும்பு, ஓக.8

இந்திய உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக உயர் மட்டக் குழுவொன்று இலங்கையில் இருந்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை புதுடில்லி செல்லவிருக்கின்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் செல்லவிருக்கும் இக்குழுவில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் இடம்பெற்றிருப்பார்கள்.

இரு தரப்புக்கும் கரிசனையுடைய பல விடயங்கள் இக்குழுவினரால் இந்திய அதிகாரிகளுடன் பகிர்ந்து கொள்ளப்படும் என்றும்-

உள்ளூரில் இடம்பெயர்ந்துள்ள பிரச்சினை மற்றும் பலகோடி ரூபா பெறுமதியான அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் இரு தரப்பினரும் விவாதிப்பார்கள் என்றும் தெரிகின்றது. (ப)

## அமெரிக்க நாட்டு அதிகாரிகளை தொடர்பு கொண்டது சன் - சீ. கப்பல்

கொழும்பு, ஓக. 09

இலங்கை அகதிகள் 219 பேருடன் கனடா நோக்கிச் செல்லும் எம்.வீ. சன்-சீ என்ற கப்பல் அமெரிக்க அரசுடன் தொடர்பு கொண்டது என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் பிலிப் ஜே.கிரௌலி தெரிவித்தார்.

தற்போது இந்தக் கப்பல் கனடாவின் வன்கூவர் பகுதியை நோக்கிச் செல்கிறது எனவும் சரியான (24ஆம் பக்கம் பார்க்க)

## இன்று ஆரம்பமாகும் ஜி.சீ.ஈ. உயர் பரீட்சைக்கு யாழ். மாவட்டத்தில் தோற்றும் 9,911 மாணவர்

யாழ்ப்பாணம், ஓக. 9

நாடுமுழுவதும் இன்று ஆரம்பமாகும் ஜி.சீ.ஈ. (உயர்தரப்) பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் இருந்து 9,911 மாணவர்கள் தோற்றுகின்றனர்.

வலிகாமம், தென்மராட்சி, கோப்பாய் கோட்டம் ஆகியன உள்ளடங்கிய பிரதேசங்களில் இருந்து 4,900 மாணவர்கள் 40 பரீட்சை நிலையங்களிலும் -

யாழ்ப்பாணம், தீவகம், தென்மராட்சி ஆகிய வலயங்கள் உள்ளடக்கிய பிரதேசங்களில் இருந்து 5,011 மாணவர்கள் 37 பரீட்சை நிலையங்களிலும் - தோற்றுகின்றனர் என்று பரீட்சைக்குப் பொறுப்பான வலயக் கல்விப் (24ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் 76 பேர் மெக்ஸிக்கோவில் கொள்கலனிலிருந்து மீட்பு

### இலங்கையர்களும் அடங்குவர் எனத் தகவல்

கொழும்பு, ஓக. 09

இலங்கையர் உட்பட 76 சட்டவிரோத குடியேற்றவாசிகள் மெக்ஸிக்கோ நாட்டில் கைவிடப்பட்டிருந்த சரக்குக் கொள்கலன் ஒன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர்.

மெக்ஸிக்கோ, கியாபஸ் மாநிலத்திலுள்ள நெடுஞ்சாலை ஒன்றுக்கு அருகே இவர்கள் (24ஆம் பக்கம் பார்க்க)

## கொஹன்னவை ஐ.நாவிலிருந்து திருப்பி அழைக்கிறது அரசு

கொழும்பு ஓக. 09

ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி பாலித கொஹன்ன விரைவில் திருப்பி அழைக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெற உள்ள ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தின் பின்னர் பாலித திருப்பி அழைக்கப்படுவார் என வெளிவிவகார அமைச்சு வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் கூறுகின்றன.

(24ஆம் பக்கம் பார்க்க)




அபான்ஸ் பினான்சியல் சேவிசஸ் லிமிட்டட்டின் சேவைகள் யாழ் மக்களுக்கு, சுன்னாகம் கிளையில் 12.08.2010 முதல்

அபான்ஸ் பினான்சியல் சேவிசஸ் லிமிட்டட் 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்திற்கமைவாக இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் நிதிக் கம்பனியாக பதிவு செய்யப்பட்ட அபான்ஸ் குழுமத்தின் ஓர் அங்கமாகும்.

எமது சேவைகள்

- ★ நிலையான வைப்பு
- ★ சேமிப்பு வைப்பு
- ★ குத்தகை, வாடகைக் கொள்வனவு
- ★ தவணைக் கடன்
- ★ சொத்து வியாபாரம்
- ★ ஏனைய நிதிச் சேவைகள்

Abans FINANCE

தொடர்புகளுக்கு : 160 1/1 & 1/2, கே, கே, எஸ் வீதி, சுன்னாகம். தொ.பே: 021 3207686 தொ.ந: 021 224 1124


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பீற்றர்ஸனின் பொறுப்பான ஆட்டம் இங்கிலாந்து அணி முன்னிலையில்

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி முன்னிலை பெற்றுள்ளது

இங்கிலாந்து சென்றுள்ள பாகிஸ்தான் அணி, 4 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. நாட்டிங்காமில் நடந்த முதலாவது போட்டியில் இங்கிலாந்து வெற்றிபெற்றது. இரண்டாவது டெஸ்ட் போட்டி, பேர்மிங்ஹாமில் நடந்து வருகிறது.

நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவுசெய்தது. அதன்படி களமிறங்கிய பாகிஸ்தான் அணி 39.3 ஓவர்களில் 72 ஓட்டங்களை மாத்திரமே பெற்ற நிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பின்னர் ஆடிய இங்கிலாந்து அணி, முதல் நாள் ஆட்டநேர முடிவில், 2 விக்கெட்டுக்களை இழந்து 112 ஓட்டங்களை எடுத்திருந்தது. 17 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் ஹூக் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து ஸ்டிராஸும் ஆட்டமிழந்தார். இதனால் 44 ஓட்டங்களுக்குள் 2 விக்கெட்டுக்களை இழந்து தத்தளித்தது இங்கிலாந்து அணி.



இந்த நிலையில் பீற்றர்ஸனும், டிராட்டும் ஜோடி சேர்ந்த னர். நிதான மாக ஆடி ஓட்டக் குவிப்பில் ஈடுபட் டனர். முதல் நாள் ஆட்ட நேர முடிவின் போது, பீற்றர்ஸன் (78), டிராட் (55) ஆட்டமிழக்காமல் இருந்த னர்.

நேற்று முன் தினம் 2ஆவது நாள் ஆட்டம் நடந்தது. பொறுப்புடன் ஆடிய பீற்றர்ஸன், டெஸ்ட் அரங்கில் 20ஆவது அரைச் சதத்தையும், டிராட் 3 ஆவது அரைச் சதத்தையும் பெற்றனர். இந்த ஜோடி 3ஆவது விக்கெட்டுக்கு 133 ஓட்டங்களைச் சேர்த்திருந்த நிலையில், டிராட் (55) அமீனின் பந்துவீச்சில் யாசீர் ஹமீது விடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதையடுத்து கொலிங் வூட், பீற்றர்ஸனுடன் இணைந்து ஆட்டத்தை ஆரம்பித்தார். பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களின் பந்துகளை 'பவுண்டரி' எல்லையை நோக்கிய அடித்தார் பீற்றர்ஸன். பின் னர் அஜ்மல் சுழலில் மிரட்டினார். இவ ரது பந்து வீச்சில் பீற்றர்ஸன் (80), கொலிங் வூட் (28), பிரையர் (15), சுவான் (4), பிராட் (0) ஆகியோர் வெளியேறினர். அதிகம் எதிர்பார்க்கப்பட்ட மார்கன் (6) இந்த முறை சோபிக்கவில்லை.

இங்கிலாந்து அணி 83.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 251 ஓட்டங்களை எடுத்தது. இதன் மூலம் முதல் இன்னிங்ஸில் 179 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது.

அடுத்து இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட்டை மாத்திரமே இழந்து 19 ஓட்டங்களை எடுத்திருந்தது.

## லக்ஷ்மனுக்கு டோனி புகழாரம்

கொழும்பு, ஒக. 09

இலங்கைக்கு எதிரான கடைசி டெஸ்டில் இந்திய அணியை வெற்றிக்கு அழைத்துச்சென்ற வி.வி.எஸ்.லக்ஷ்மனுக்கு அணித்தலைவர் டோனி புகழாரம் சூட்டியுள்ளார்.

"வி.வி.எஸ்.லக்ஷ்மன் திறமையாக - சிறப்பாக ஆடக்கூடிய வீரர். அவரது ஆட்டம் போட்டியில் எப்போதும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும். அவர் சில போட்டிகளில் ஓட்டங்களைக் குவிக்காமல் இருந்தார். இதனால் ஓட்டங்களை வரும் போட்டிகளிலாவது குவிக்கவேண்டும் என்பதில் குறியாக இருந்தார். அவரது முக்கியமான பங்களிப்பு அணிக்கும் தேவையாக இருந்தது. அவரது இந்த இன்னிங்ஸில் தனிச்சிறப்பு வாய்ந்த ஆட்டங்களை வெளிப்படுத்தினார். அவர் மென்மேலும் சிறப்பாக ஆடுவார் என்று நம்புகிறோம். வேகப்பந்து வீச்சை அவர் எதிர்கொண்ட விதம் உண்மையிலேயே அபாரமாக இருந்தது - இவ்வாறு டோனி கூறினார்.

## அரையிறுதிக்குள் நுழைந்தது போபண்ணா-குரோஷி ஜோடி!

வோஷிங்டன், ஒக. 09

'லெக் மேசன் கிளாசிக்' டென்னிஸ் தொடரின் அரையிறுதிக்கு முன்னேறி அசத்தியது இந்தியாவின் போபண்ணா, பாகிஸ்தானின் குரேஷி ஜோடி.

அமெரிக்காவின் வோஷிங்டனில் லெக் மேசன் கிளாசிக் டென்னிஸ் தொடர் நடக்கிறது. இத்தொடரின் காலிறுதியில், இந்தியாவின் போபண்ணா, பாகிஸ்தானின் குரேஷி ஜோடி, உலகின் 2ஆம் நிலை வீரர்களான பாப் - மைக் பிரையன் ஜோடியை எதிர்கொண்டது.

விறுவிறுப்பாக நடந்த இப்போட்டியின் முதல் செற்றில் கடைசிவரை அனல் பறந்தது. கடைசியில் போபண்ணா ஜோடி 7-6 என்ற புள்ளிக் கணக்கில் வென்றது. இரண்டாவது செற்றிலும் ஆதிக்கம் செலுத்திய போபண்ணா ஜோடி, 7-5 புள்ளிக் கணக்கில் வென்று தொடரைத் தன்வசப்படுத்தியது. இறுதியில் போபண்ணா - குரேஷி ஜோடி, பாப், மைக் பிரையன் ஜோடியை வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

அரையிறுதியில் போபண்ணா ஜோடி, அமெரிக்காவின் மார்டி பஷ், பகாமஸின் மார்க் நோவல்ஸ் ஜோடியை எதிர்கொள்கிறது.


### உடன் தேவை

சமகால அரசியலில் ஈடுபாடும் பரந்த அறிவும் அத்துறையில் விமர்சிப்பதில் தேர்ச்சியும் உள்ளவர்கள் உகந்த பணி நிலைக்குத் தேவை.

ஆவணப்படுத்தலிலும் அது சார்ந்த பணிகளிலும் அரசியல் கட்டுரைகள் எழுதுவதிலும் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை தரப்படும்.

ஆங்கிலத்தில் தகுந்த தேர்ச்சி அவசியம். பட்டதாரிகள் பெரிதும் விரும்பப்படுவர். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

முழுநேர வேலையாகவோ பகுதி நேரப் பணியாகவோ ஆற்றலாம்.

11.08.2010 முன்னர் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பிக்கவும்.

விளம்பர இலக்கம்: 4052,
மே/பா. உதயன்
ஈ-மெயில்: mmslanka@gmail.com

### கணிதம் (MATHEMATICS)

உங்கள் பிள்ளைகள் கணித பாடத்தில் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனரா? கவலையை விடுங்கள் தரம் 6 தொடக்கம் 11 வரை தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும். O/L பரீட்சார்த்திகளுக்கு இன்னுமுள்ள 4 மாதங்களில் A தரச்சித்திபெறக் கற்பிக்கப்படும்.

J.K.VASAN T.P.: 0776679564/021 320 7202




அமெரிக்காவின் சான்டிகோவில் 'மெர்குரி இன்சூரன்ஸ்' ஓபன் டென்னிஸ் தொடர் நடந்துவருகிறது. இதன் காலிறுதியில், இஸ்ரேலின் சகர் பியரை வீழ்த்திய (6-2, 6-0) போலந்து நாட்டின் வீராங்கனை ரட்வான்ஸ்கா பந்தை திருப்பியடிக்கிறார்....

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



**மகேஸ்வரன் சுதாகரன் (தீபன்)**
(சிங்கர் நிறுவன ஊழியர்)

பிறப்பு 03.02.1982 இறப்பு 10.07.2010

கடந்த 10.07.2010 சனிக்கிழமை சிவபதம் அடைந்த எமது சகோதரன் மகேஸ்வரன் சுதாகரன் (தீபன்) அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (09.08.2010) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதுடன் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*14, B.S. லேன், மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.*

குடும்பத்தினர்.
*(தம்பி தேநீர்ச்சாலை)*

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



*தோற்றம் 11-10-1928*

*மறைவு 11-07-2010*

**திருமதி கந்தையா றஞ்சிதம்மா**
(நாரந்தனை கிழக்கு, ஊர்காவற்றுறை)
திதி: 10.08.2010

இப்புவியில் பிறந்து தியாகச் சுடராய் ஒளிர்ந்து
பதினாறும் பெற்று, பெற்றது போதும்
என்றோ பிரிந்தாய் எம்மை விட்டு
எம் அன்னையே!

*83/15, அரசடி வீதி, யாழ்ப்பாணம். 0212221076.*

(101736)

தங்கள் பிரிவால் துயருறும்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


### வீடு விற்பனைக்கு

நீராவியடி, கடையிற்சுவாமி ஒழுங்கையில் நல்ல சூழலில் அமைந்த ஐந்து அறைகள் கொண்ட மாடி வீடு ஒன்று உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777508444
0770600065

### வீடு, காணி விற்பனைக்கு

சகல வசதிகளுடன் கூடிய 5அறை கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

ST Johns, Chundukuli Girls.
பாடசாலைகளுக்கு அருகில்.

தொடர்புகளுக்கு T.P.: 077 2900033
E.mail. smariyan@hotmail.com

### வேலையாள்கள் தேவை

★ றொட்டி மேக்கர் ★ ரீ மேக்கர்
★ சமையலாளர்

போன்ற வேலைகளுக்கு ஆள்கள் தேவை.

தொடர்பு: கஜேபசா உணவகம்,
No.19, [illegible] வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 0770773264, 021 7914215


## மரண அறிவித்தல்

### கமலாதேவி நடராஜா

யாழ்ப்பாணம், சுண்டிக்குளியைச் சேர்ந்த கமலாதேவி நடராஜா 07.08.2010 சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் முன்னாள் சட்டத்தரணி நடராஜா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஆர்.கே.தம்பையா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், சாமளா, ரவீந்திரன், ரட்ணசிவா ஆகியோரின் அன்புத் தாயாரும் சர்மிளா, தவம் (சிறீஸ்கந்ததாஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், துர்க்கா, டிரின் ஆகியோரின் அன்புப் பாட்டியாரும் சிவநேசம், குமாரலிங்கம், லீலாவதி குமரேந்திரன், சிவஞானதேவி, கணேசமூர்த்தி, சரோஜினிதேவி, திருச்செல்வம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 11/2 Schofield place Colombo 3 என்ற இடத்திலிருந்து நாளை (10.08.2010) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு புறப்பட்டு, பிற்பகல் 2 மணியளவில் பொறளை கனத்தை மயானத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெறும்.

தகவல்:
சியாமளா (மகள்).

## மரண அறிவித்தல்

### அரசன் பழனியாண்டி



கம்பளையைப் பிறப்பிடமாகவும், அம்பாள்குளம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும், இல.99/13, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணத்தை தற்போதைய முகவரியாகவும் கொண்ட அரசன் பழனியாண்டி நேற்று (08.08.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரட்ணம்மாவின் அன்புக் கணவரும் இந்திராணி (கனடா), யோகா (உரிமையாளர், நியூ ஸ்டைல் சலூன், கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும் வசந்தன் (கனடா), சாந்தி ஆகியோரின் அன்பு மாமனும் வனுஷா, விதுஷா, அமிர்தா, சுவிர்தா, சம்பத், சுவேதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் தற்காலிக வசிப்பிடத்தில் இடம்பெற்று, பூதவுடல் நாளை (10.08.2010) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் நல்லடத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*99/13, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0214906863*

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## கண்ணிவெடி அகற்றுவதில் அவதானமும் பொறுப்பும் தேவை

யாழ்ப்பாணக் குடாநாடு அடுத்த மாதத்தில் கண்ணி வெடியற்ற பிரதேசமாகிவிடும் என்று யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்திருக்கிறார். குடாநாட்டின் பெரும்பாலன பிரதேசங்களில் கண்ணி வெடிகள் அகற்றுப்பட்டு விட்டன. ஏனைய பகுதிகளிலும் அந்தப் பணி வேகமாக நடைபெற்றுவருகின்றது என்று அவர் கூறியுள்ளார்.

இது நல்லசெய்தி. வலிகாமம் வடக்கு அகண்ட பிரதேசம் 1990 ஆம் ஆண்டில் பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட காலத்தில் இருந்து, குடாநாட்டின் பெரும்பகுதி கண்ணிவெடி நிலமாகியது; மயமாகியது. போரில் ஈடுபட்டிருந்த இருசாராரும் தத்தமது பாதுகாப்புக் கருதியும் அடுத்த தரப்பு மீதான தாக்குதலுக்கான ஒரு சாதனமாகவும் கொண்டு கண்ணி வெடிகளைப் புதைப்பதை தாராளமாக மேற்கொண்டனர்.

இதனால் குடாநாட்டின் நிலப்பரப்பில் பெரும் பகுதியில் 'விளைபொருள்' களாக கண்ணி வெடிகளே விளங்கின. அதன் கொடூர விளைவாக பல நூற்றுக்கணக்கான பொதுமக்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. மேலும் ஆயிரக் கணக்கானோர் தமது அவயவங்களை இழந்து அங்கவீனர்களாகி பாதிக்கப்பட்டனர். அதனால் அவர்களின் வாழ்க்கையில் இருள் கவிந்து இதுவரையும் இன்னல் பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

கண்ணிவெடிகளால் மக்களுக்கு உண்டான உயிரிழப்புகளையும் அவைகளால் பாதிக்கப்பட்டோர் வாழ்க்கையில் கவிந்த இருளையும் எத்தகு பெரும் உதவிகளாலும் மீள்விக்கமுடியாது. பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கையை இனி மீள்விக்க சீராக்குவதும் கடினமே; அவர் தம் சோகமும், வேதனையும் எழுத்தினால் சொல்லி மாளாதவை.

எப்படியோ குடாநாட்டின் பல பகுதிகளில் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டிருப்பதும், அந்தப் பணி அடுத்த மாதத்துடன் நிறைவேற்றப்பட இருப்பதும் வரவேற்கத்தக்கன. ஆனால் அந்தப் பணி உரிய தொழில்நுட்பத்துடன் மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான உறுதி வழங்கப்படுவதும் அத்தியாவசியம்.

குடாநாட்டைவிட கடந்த வருடத்தில் வன்னிப் பகுதியிலேயே போர் மிக உக்கிரமாக நடைபெற்றது. அந்தப் பகுதியில் இப்போது மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். கண்ணி வெடிகளை அகற்றும் பணிகள் தீவிரமாக்கப்பட்டு, அங்கு குடியேறுவது அபாயமற்றது என்ற உத்தரவாதத்துடனேயே மீள்குடியேற்றம் நடைபெறுவதாக அரசு அறிவிக்கிறது.

ஏன், மீள் குடியேற்றத்தில் தாமதம் ஏற்பட்டதற்கும், ஏற்படுவதற்கும் கண்ணி வெடிகள் அகற்றப்படாமையும் ஒரு காரணம் என்று ஜனாதிபதி தொட்டு அரச அதிகாரிகள் வரை கூறியதையும் மறந்துவிடுவதற்கு இல்லை. அது மட்டுமன்றி கண்ணிவெடி பாதிப்பு இல்லை என்று உறுதி செய்யப்பட்ட பகுதிகளிலேயே மக்கள் மீள்குடியேற்றப்படுவெதாகவும் உத்தரவாதம் தெரிவிக்கப்படுகிறது.

கண்ணிவெடி அகற்றும் பணிக்காக பல வெளிநாடுகளில் இருந்தும் சர்வதேச அமைப்புக்களில் இருந்தும் அரசுக்கு நிதி உதவி கிடைக்கிறது. தொழில்நுட்ப உதவியும் கூட விரைவுபடுத்தப்பட்டிருக்கிறது.

இத்தனைக்கும் மத்தியில், கிளிநொச்சி, புதுமுறிப்பில் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் அதிபரின் அலுவலகம் அமைந்திருக்கும் பகுதிக்கு சற்றுத் தொலைவில் மிதிவெடிகள் இருப்பதைக் கண்டு, மாணவர்கள் தகவல் கொடுத்ததால் பாடசாலை மூடப்பட்டிருக்கிறது. அதிர்ஷ்டவசமாகத் தலைக்கு வந்த ஆபத்து தலைப்பாகையோடு போனது என்ற கதையாகி இருக்கிறது.

கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடிகள் உயிர் கொல்லிகள்; மக்களை ஊனமுற்றவர்களாக்கி அவர்தம் வாழ்க்கையை ஊறு செய்வன.

வன்னிப் பகுதியில் கண்ணிவெடி மற்றும் மிதிவெடி அகற்றல் என்பன மக்களின் உயிரோடு சம்பந்தப்பட்டவை. அந்தப் பணி மிகுந்த பொறுப்புணர்ச்சியுடனும் அவதானத்துடனும் மேற்கொள்ளப்பட வேண்டியது. இதில் அரசு கூடுதல் அக்கறையுடனும் பொறுப்புணர்ச்சியுட னும் செயற்பட வேண்டும். போரில் தப்பிய தமிழர்களை உடனிருந்து கொல்லும் ஏதுவாக அக்கறையற்ற கண்ணி வெடி அகற்றுதல் மாறி விடக்கூடாது.

### அரசமைப்பு சீர்திருத்தங்கள் பற்றி

# அரசுடன் ஐ.தே.க. நடத்திய பேச்சுக்கள் தொடர்ந்து நடக்கும் சாத்தியம் இல்லை

நேற்று (08.08.2010 அன்று) சண்டே ரைம்ஸ் எழுதியிருந்த அரசியல் விமர்சனத்திலிருந்து ஒரு பகுதி இங்கு தரப்படுகின்றது.

கடந்தவாரம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் சில அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் விவாதங்களின் போது வருகை தந்திருக்கவில்லையெனக் கண்டித்திருந்தார். இந்த விடயத்தைக் கட்சி மட்டத்தில் எழுப்புமாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறி சேனவை அவர் கேட்டுக் கொண்டார்.

அரச நாடாளுமன்ற உறுப்பினர்களின் வருகை சபையில் திருப்திகரமாக இருக்கவில்லையென்று கவலை தெரி வித்த ஜனாதிபதி அரசியல் ரீதியில் முக்கியத்துவமான குறிப்பு ஒன்றையும் கூறிவைத்தார்.

'மற்றவர்களை எம்மோடு இணைந்து செயல்படும்படி கேட்டுக் கொள்வது பற்றி நான் தீவிரமாக ஆலோசிக்க வேண்டியிருக்கும். அப்படியானவர்கள் பெரும் எண்ணிக்கையில் இருக்கிறார்கள்' என்று ராஜபக்ஷ அறிவித்தார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்தின் முக்கியத்துவம் அடுத்த நாளே வெளிப் படையாயிற்று. வியாழக்கிழமையன்று ஐ.தே.மு. கட்சியின் கொழும்பு மாவட்ட எம்.பி பிரபா கணேசனும் நுவரெலியா மாவட்ட எம்.பி. பழனி திகாம்பரமும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் இணைந்து கொண்டார்கள்.

அலரிமாளிகைக்கு அவர்கள் அன்று காலையில் வந்து சேர்ந்த போது அமைச் சர் பசில் ராஜபக்ஷவும் நாமல் ராஜபக்ஷ எம்.பியும் அவர்களை வரவேற்றார்கள். ஜனாதிபதி ராஜபக்ஷ பின்னர் அவர்களுடன் சேர்ந்து கொண்டார்.

இது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதிர்ச்சியையே கொடுத்திருக்க வேண்டும்.

ஜனாதிபதி அமைச்சர்களுக்கு எச்ச ரிக்கை விடுத்தமையும், பின்னர் இரு எதிர்க்கட்சியினரை அரசுக்குள் ஈர்த்தமையும் அரசியல் மட்டத்தில் அதிக அர்த்தமுள்ள விடயங்களாகக் கருதப்படுகின்ற கட்சிக்குள்ளேயே ஒத்துழைப்பு வழங் கத்தயங்குபவர்களுக்கும்,எதிர்ப்பு கோஷ்டிகளாகச் செயற்பட முனைபவர்களுக்கும் இந்த நடவடிக்கை கடும் எச்சரிக்கையாக இருந்திருக்க வேண்டும். அப்படியானவர்களைப் புறக்கணித்துவிட்டு எதிர்க்கட்சியிலிருந்து உறுப்பினர்களை வென்றெடுத்து செயலாற்ற முடியும் என்பதை அவர் உணர்த்தியுள்ளார் என்று கொள்ளலாம்.

சில அமைச்சர்கள் தனிப்பட்ட முறையில் தெரிவித்துள்ள முறைப்பாடுகளில் தங்களுக்கு தமது அமைச்சுகளை நடத்துவதற்கு அதிகாரம் இல்லா மலிருப்பதாகத் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகின்றது. கூட்டுத் தாபனங்கள் மற்றும் அதிகார சபைகளுக்கு தலைவர் களை தாங்கள் விரும்பியவர்களை நிய மிக்க முடியாமல் இருப்பதாக சிலர் புகார் கூறியிருந்துள்ளார்கள். இன்னும் சிலர் தங்கள் பணிகளில் 'வெளியார்' தலையீடு இருப்பதாகவும் தெரிவித்திருந்தனர்.

ஏப்ரல் 8 ஆம் திகதி தேர்தலுக்குப் பின் ஏப்ரல் 22 ஆம் திகதி முதல் தடவையாக நாடாளுமன்றம் கூடியதிலிருந்து ஐ.தே.க.வின் நடவடிக்கைகளில் பிரபாகணேசன் அதிருப்தி கொண்டவராக இருந்து வந்துள்ளார். கண்டி மாவட்டத்தில் அவரது சகோதரர் மனோகணே சன் தோல்வியுற்றதையடுத்து அவரை ரணில் விக்கிரமசிங்க தேசியபட்டியல் உறுப்பினராக நியமிக்கத் தவறிவிட் டார் என்பதிலிருந்து இந்தப் பிரச்சினை உருவாகியிருந்தது. விக்கிரமசிங்கவுடன் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டிருந்தவரான திகாம்பரமும் ஐ.தே.க.வுக்கு எதிராக குரல் கொடுக்கத் தொடங்கியிருந்தார்.

ஆனால் இந்த கட்சி மாற்றம் இடம் பெற்றுள்ள சூழ்நிலை குறிப்பிடக் கூடியதாக இருக்கின்றது. அரசியல் சீர்திருத்தங்கள் தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஐ.தே.கவுடன் முக்கிய பேச் சுக்களை ஆரம்பித்துள்ள சந்தர்ப்பத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரண்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களை உள்ளே ஈர்த்துக் கொண்டும் இன்னும் பலர் வருவதற்கு இருக்கிறார்கள் என்றும் அறிவித்திருப்பதன் மூலம் தமது சொந்த தரப்பினருக்கு அவர் பலமான ஒரு செய்தியை வழங்கியிருக்கிறார் என்று கொள்ள முடிகின்றது.

## வாக்குறுதியை ஜனாதிபதி மீறிவிட்டார் எனக் குற்றச்சாட்டு

அரசுடன் நாம் இணைந்து செயற்பட்டால் இந்த அபிலாஷைகளை எம்மால் வென் றெடுக்க முடியும் என்றார்.

தமது பேச்சுவார்த்தைகளின் போது நிபந்தனை எதுவும் விதிக்கப்படவில்லை யென்றும் பதவிகள் எதனையும் எதிர்பார்க்கவில்லை யென்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

ஆனால், பிரபாவின் சகோதரர் ஜன நாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் அந்தச் சமயத்தில் இந்தியாவில் இருந்துள்ளார். கட்சியின் ஒரே ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் தமது சகோதரருமான பிரபா அரசில் சேர்ந்து விட்டார் என்ற தகவல் பரவியதும் கொழும்புக்குப் பல தடவைகள் தொலை பேசியில் அவர் அழைப்புக்கள் விடுத்தார். தமது கட்சியோ தாமோ பிரபாவை அரசில் சேரும்படி அதிகாரம் வழங்கவில்லை என்றும், நிலைமையை விளக்கிக் கொழும் பிலுள்ள இந்திய தூதரகத்துக்கு ரெலிபோன் செய்திருப்பதாகவும் நம்பிக்கை யானவர்களிடம் அவர் கூறியுள்ளார்.

பிரபா அரசாங்கத்தில் சேர்ந்துள்ளார் என்பது விஷமத்தனமாகும். உள்ளூராட்சி தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான தமது கட்சியின் ஆலோசனைகளை வழங்கவே அவர் ஜனாதிபதியைச் சந்தித்துள்ளார் என்றும் மனோகணேசன் கொழும்பிலுள்ள பத்திரிகையாளர்களுக்குத் தெரி வித்துள்ளார். அரசில் சேர்வதற்கு எமது கட்சிக்கு எதுவித காரணமும் கிடையாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். இரு சகோதரர்களுக்கும் இடையில் விரிசல் விழுந்துவிட்டது என்ப தையே இந்த நிகழ்வு காட்டுகின்றது.

முடிகின்றது.

பேருவளை ஏடன் ஹோட்டலில் இரண்டு நாள் பணிப்பட்டறையொன்றில் அமைச்சர்களும் அரசின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவிருந்த வேளையில் இக்கருத்து வெளியாகியிருந்தமை முக்கியத்துவம் பெறுகின்றது. பணிப்பட்டறை கடந்த சனிக்கிழமை ஆரம்பித்து நேற்று ஞாயிறன்று முடிவுறுவதாகவிருந்தது.

இந்த நிகழ்வானது தனது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் சரளமாகக் கலந்து பழகுவதற்கும் அரசு எதிர்கொள்ளும் பல பிரச்சினைகள் தொடர்பாகத் தமது சமகால சிந்தனைகளை அவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கும் ஜனாதிபதிக்கு நல்ல சந்தர்ப்பமாகவிருக்கும் என்று கருத முடியும்.

இந்த செயல்பாடானது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பலமான ஒரு உறுப் பினரான மங்கள சமரவீரவை தன்பக்கம் ஈர்த்துக் கொண்ட ஐ.தே.கவுக்கும் ஒரு செய்தியை வழங்குவதாக அமைந்துள்ளது எனலாம். மங்கள சமரவீர ஐ.தே.க. சார்பில் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி ஈட்டியவர். உண்மையாகப் பார்த்தால் அவர் ஐ.தே.க. எம்.பி தான். ஆனால் அவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மகாஜன பிரிவுக்குத் தலைமை வகித்தார். அவர் அரசில் இருந்து விலகிய காலத்திலிருந்தே அரசுக்கு ஒரு எரிச்சலூட்டுபவராகவும் கட்சிக்கு அரசியல் அச்சுறுத்தலாகவும் இருக்கிறார் என்றே ராஜபக்ஷ கருதி வந்துள்ளார் என்பது இரகசியமன்று.

அரசியல் மட்டத்தில் தந்திரவாதி என்று கருதப்படுகிறவரான மங்கள சமரவீர, வரும் காலத்தில் அவர் அரசியல் துறையில் முன்னேறிவிடுவார். என்பது ஐ.தே. கவினருக்கு மட்டுமல்ல ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின ருக்கும் கவலையளிக்கும் விடயமாகவே இருக்கும். சில அரச தரப்பினருடன் அவர் தொடர்ந்து ஆலோசனை கலந்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

### பிரபா கணேசன் கூறும் காரணம்

அரசாங்க பக்கம் பாய்ந்துள்ள பிரபா கணே சன் பின்வருமாறு தமது நிலைப்பாடு குறித்து தெரிவித்துள்ளார். 'எமது கட்சி எதிர்க்கட்சியிலேயே தொடர்ந்து இருப்பதனால் இந்திய வம்சாவளியினரான எமது மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்க முடியாது என்று கருது கின்றது. கல்வி, சுகாதாரம், தொழில் வாய்ப்பு மற்றும் பல விடயங்களில் எமது மக்கள் ஓரங்கட்டப்பட்டு வருகின்றனர்.

திகாம்பரம் தம் தரப்பில் வேறு காரணங்களை வெளியிட்டுள்ளார்.

போர் உச்சக்கட்டத்தில் இருந்த போது சர்வதேச சமூகம் மனித உரிமை மீறல்கள் குறித்து அரசாங்கத்தின் மீது அழுத்தங் களைப் பிரயோகித்துக் கொண்டிருந்தது. இப்பொழுது போர் முடிவடைந்துவிட்ட நிலையில் தமிழ் மக்களுக்கு உதவ சர்வதேச சமூகம் முன்வரக்காணோம். எமது மக்களை அரசாங்கத்தினால் மட்டுமே பாதுகாக்க முடியும் என்று நாம் கருதுகின்றோம் என்று கூறியுள்ளார் அவர்.

இந்நாட்டில் தமிழ் மக்கள் பிரச்சினைக்கும் மலையக மக்கள் பிரச்சினைக்கும் வேறுபாடு உண்டு. நாம் மேலதிகமாக எந்த உரிமைகளையும் கோரி நிற்கவில்லை. இந்திய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும். குறிப்பாகத் தோட்டத் தொழில் துறையில் வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரத்தையென்று கூறினார்.

**தமிழில்: கோகுலன்**

வியாழக்கிழமை இரு உறுப்பினர்களும் அரசாங்கத்தரப்புக்கு கட்சி மாறிச் சென்ற போதிலும் சபையில் மாற்று ஏற்பாடுகள் செய்யப்படும் வரை தமது முன்னைய ஆசனங்களுக்கே திரும்பிவர வேண்டியிருந்தது.

இந்த இரு உறுப்பினர்களையும் அரச தரப்புக்கு வரச் செய்வதில் அமைச்சர் பசில் ராஜபக்ஷவே பெரும் பங்கேற்றிருந்தார் என்று அரச தரப்பில் பாராட்டப்பட்டுள்ளது.

ஐ. தே.கவிலிருந்து மேலும் இரு உறுப்பினர்களும் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து இருஉறுப்பினர்களும் கட்சி மாறுவதற்கு இருப்பதாக செய்திகள் அடிபடுகின்றன. அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைப்பதற்கு இன்னமும் மூன்று ஆசனங்களே தேவைப்படுவதாகத் தெரிகின்றது. 225 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றில் இப்போது 147 உறுப்பினர்கள் அரசு பக்கம் இருக்கிறார்கள்.

(23 ஆம் பக்கம் பார்க்க)

### நாளை

| | |
|---|---|
| ஆடி25 | 10.08.2010 செவ்வாய்க்கிழமை |
| திதி: | அமாவாசை மு.ப.09.13 வரை |
| நட்சத்திரம் | ஆயிலியம் மு.இ. 08.54 வரை |
| சுபநேரம் | 10.34-12.04 வரை |
| ராகுகாலம் | 03.04-04.34 வரை |

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கொடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவகாளியம்மன் ஜோதிட நிலையம்

இந்தியாவின் பிரபல ஜோதிடர்

**கங்காதர ஆச்சாரி சுவாமிகள்**

திருப்பதியில் இருந்து வந்துள்ள சுவாமிகள்

*இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள சுவாமிகள் அவர்கள் வம்சாவழியாக காளியம்மனின் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, தொழில் வியாபாரம், லட்சுமிகர விடயமான பொருத்தம், பிள்ளைகளின் படிப்பு, பிள்ளைகள் குடும்ப ஒற்றுமையாகப் பெற்றோர்களுடன் நிலைத்திருத்தல் போன்ற விடயங்களையும் கணவன் மனைவி ஒற்றுமையின்மை, கோட்டு வழக்கு, உடல் நலமின்மை போன்றவற்றிற்குப் பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்று கூடல், வெளியூர் பயணங்கள், நாம நட்சத்திரம், கல்வி, உத்தியோகம், இலட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், வாஸ்து சாஸ்திரம், வதிவிடப் பிரச்சினைகள், எதிரிகள் கண் திருஷ்டி இவற்றுடன் எதிர்காலப் பலாபலன்களைத் தெரிவிப்பார். ஒருமுறை சந்தியுங்கள்.*

தொ.பே.: 077 6337702 / 077 6335621

கைரேகை, ஜோதிடம் பார்க்கும் நேரம்:

காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை.

பீப்பில்ஸ் இன்

இல.112/1, மானிப்பாய் வீதி,
(பிள்ளையார் சோடாக் கம்பனி முன்பாக)
யாழ்ப்பாணம்.

(100666)


## தசாகாதி க்ரகஹக் ஞ அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் விகிர்தி வருடம் ஆடி மாதம் 13ஆம் நாள் (29.07.2010) வியாழக்கிழமை பிற்பகல் இல.19, கண்டி வீதி, மாத்தளையில் சிவபதமடைந்த

**சிவஸ்ரீ காசிநாதசர்மா**

**கிருஷ்ணராஜசர்மா** *(இராசன் ஐயா)*

அவர்களின் ஆத்ம சாந்தியை முன்னிட்டு கீழ்க் குறிப்பிடும் திகதிகளில் நடைபெறும் கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்தியை வேண்டி பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.

| | | |
|---|---|---|
| தசாகம் | 10.08.2010 | செவ்வாய்க்கிழமை |
| ஏகோதிஷ்டம் | 11.08.2010 | புதன்கிழமை |
| சபிண்டிகரணம் | 12.08.2010 | வியாழக்கிழமை |
| கிரஹயக்ஞம் (சமாராதனை) | 13.08.2010 | வெள்ளிக்கிழமை |

**குருக்கட்டு சித்தி விநாயகர் ஆலய சிவாச்சாரியாரும், பரிபாலன சபையினரும்.**

வல்லிபுரம், புலோலி.


Pastors Conference

போதகர் மகாநாடு

**Building the Kingdom through the Local Church**

சபைக்கூடாக தேவராட்சியம் கட்டுதல்

10th - 11th August 2010

9.00 am - 2.00 pm

(மதிய உணவு வழங்கப்படும்)

ASSEMBLY OF GOD JAFFNA

No.14 Rasavin Thoddam, Jaffna

இடமாற்றம் → தேவசபை யாழ்ப்பாணம்

இல.14 ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்

Cost: Rs100/-

கலந்துகொள்ளக்கூடியவர்கள்

போதகர்கள், ஊழியர்கள், முழுநேர ஊழியம் செய்பவர்கள்.

Registration பதிவுகள்:

Roni - 0779352372

Organised by Calvary Worship Centre

Speakers:



**Ps. David Fernandes**
Snr Pastor Calvary Worship Centre Melbourne, Australia



**Rev. Mohan Blessing**
Snr Pastor Assembly of God Kandy


# வன்னி ஆசிரியர் டெங்குக்குப் பலி

யாழ்ப்பாணம், ஓக.9

வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் நேற்று முன்தினம் டெங்குக் காய்ச்சலினால் மரணமாகியுள்ளார்.

கொக்கிளாய் அ.த.க.பாடசாலை மற்றும் கிளிநொச்சி தமிழ்ச் சோலை வித்தியாலயம் ஆகியவற்றில் தொண்டராசிரியராகக் கடமையாற்றியவரான அ.றோமன் (வயது 33) என்பவரே மரணமானவராவார்.

செட்டிகுளம் இராமநாதன் நலன்புரி நிலையத்தில் கடந்த 6 நாள்களாக காய்ச்சலினால் அவதிப்பட்ட இவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனின்றி அங்கு மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-319)

# தேசிய பாடசாலை ஆசிரியருக்கு இடமாற்றம்

தேசிய பாடசாலையில் இருந்து தேசிய பாடசாலைக்கான வருடாந்த இடமாற்ற விண்ணப்பங்கள் கல்வி அமைச்சினால் கோரப்பட்டுள்ளன.

இதற்கு விண்ணப்பிக்க விரும்பும் ஆசிரியர்கள், அதிபருக்கு அனுப்பி வைக்கப்படும் மாதிரி படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தை அதிபரின் பரிந்துரையுடன் வலயக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரையையும் இணைத்து அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (ஆசிரிய தாபனக் கிளை), கல்வி அமைச்சு, 'இசுறுபாய', பலவத்தை, பத்திரமுல்ல எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இடமாற்றம் பெற விரும்பும் பாடசாலையில் வெற்றிடம் இல்லாத சந்தர்ப்பங்களில் அண்மையில் உள்ள வெற்றிடமுள்ள பாடசாலைக்கு இடமாற்றம் வழங்கப்படும் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன தெரிவித்துள்ளார். (ஓ-16)

**திருத்தி வாசிக்கவும்**

நேற்றைய பதிப்பில் 8ஆம் பக்கத்தில் வெளியான சீவிந்தம்பி இராஜேஸ்வரியின் (குரும்பசிட்டி) நினைவஞ்சலியில் நோர்வேலி என்று குறிப்பிடப்பட்டுள்ள சொற்களை நோர்வே எனத் திருத்தி வாசிக்கவும்.

## காரைநகரில் இருந்து மடுவுக்கு பஸ் சேவை

மன்னார் மடு தேவாலய உற்சவத்தை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை முதல் இலங்கை போக்குவரத்துச் சபை காரைநகர் டிப்போவில் இருந்து நேரடி பஸ் சேவை இடம்பெற உள்ளதாக காரைநகர் டிப்போ முகாமையாளர் அறிவித்துள்ளார்.

தினமும் காலை 5.15 மணிக்கு காரைநகரில் இருந்து இந்த பஸ் புறப்படும் என்று அவர் தெரிவித்தார். (ஓ-250)

## சாரணர் பயிற்சிகள் ஒத்திவைப்பு

மானிப்பாயில் நாளையும் மறுநாளும் இடம்பெறவிருந்த சாரணர் பயிற்சிகள், ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சை காரணமாக பிற்போடப்பட்டுள்ளன என்று மாகாண சாரணர் ஆணையாளர் ரி.என். போஜன் தெரிவித்துள்ளார்.

3ஆம் தவணை ஆரம்பத்தில் இந்தப் பயிற்சி இடம்பெறும் என்றும் அவர் கூறினார். (ஓ)


## தவறிவிட்டது

வெலிக்கண்டல், கண்டாவளை என்னும் முகவரியுடைய சுந்தரலிங்கம் செல்லம்மா என்பவரின் தேசிய அடையாள அட்டை (516110309 V) பருத்தித்துறைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 077 0777128 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (101724)

## மோட்டார் சைக்கிள் விற்பனை

பஜாஜ் எம் 80
ஒரு கை பாவனை
நல்ல நிலையில் உள்ளது.
1லீ = 75 கி.மீ
பாரம் இழுக்க உகந்தது.

தொடர்பு:
50/5, சங்கிலியன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

## வீடு வாடகைக்கு

கிளிநொச்சி சந்தைக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய இரண்டு வீடுகள் வாடகைக்கு உண்டு. (களஞ்சியமாகவோ அல்லது அலுவலகமாகவோ பயன்படுத்தலாம்.)

தொடர்பு: தொ.பே.: 0778864360


# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு 18.03.1917



உதிர்வு 11.07.2010

## திருமதி பூலோகராஜா திரவியம்

கடந்த 11.07.2010 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நாளை (10.08.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத்தலைவியின் மரணச் செய்திகேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறி அஞ்சலி செலுத்தியோருக்கும், கடிதங்கள், தொலைபேசி, பத்திரிகையூடாக அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், மேலும் பல வழிகளிலும் எமக்கு உதவி செய்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*3 ஆம் கட்டை,*
*பருத்தித்துறை வீதி,*
*கல்வியங்காடு.* (101729)

மகன்மார் : சிவனேசராசா (சுவீடன்),
விஷ்ணுதாஸன் (அவுஸ்திரேலியா),

# மரண அறிவித்தல்

## *கந்தசாமி விமலசோதிராஜா*



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், மன்னாரை வதிவிடமாகவும் கொண்ட விமல் என்று அழைக்கப்படும் கந்தசாமி விமலசோதிராஜா நேற்றுமுன்தினம் (07.08. 2010) சனிக்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி-ராஜேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும் அனுசியாவின் அன்புக் கணவரும் ராகவனின் அன்புத் தந்தையும் ரூபன் (றொசான் ஐசிங் கேக்), பிரபா, மாலினி, குமுதினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (11.08.2010) புதன் கிழமை மு.ப. 10 மணியளவில் கோண்டாவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பலாலி றோட்,*
*கோண்டாவில் சந்தி.*
T.P. : *0214909002*
*0716528652*

தகவல் :
ரூபன் *(றொசான்கேக்)*, பிரபா.
*(சகோதரர்கள்).*

(101727)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுப் புகழ்பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் சண்முகப் பெருமான் அடியார்கள் புடைசூழ தேரில் வீதியுலா வருவதையும் தேரில் ஆரோகணித்து அருள்பாலிப்பதையும் முதலிரு படங்களிலும் பக்தர்கள் அங்கப்பிரதட்டை செய்யும் காட்சியை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: நேசன்)

# சுயவிருப்பின் அடிப்படையில் வருமான வரி செலுத்துவோர் கடந்த காலத் தொகையை செலுத்த வேண்டியதில்லை

## இறைவரித் திணைக்கள யாழ். பிராந்தியப் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக.9

சுயவிருப்பின்பேரில் வருமானவரி செலுத்துவதற்கு முன்வருபவர்களுக்கு அவர்களால் ஏற்கனவே செலுத்தத் தவறியுள்ள ஆண்டுகளுக்கான வரித்தொகையை செலுத்த வேண்டியதில்லை என உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்தியப் பொறுப்பதிகாரி க.இராசையா, 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த காலங்களில் வருமானவரி செலுத்தத் தவறியுள்ளோர் சுயவிருப்பின் பேரில் நடப்பாண்டுக்குரிய வரியைச் செலுத்த முன்வர வேண்டும். அவர்களது நலன்கருதிச் சில சலுகைகளை வழங்கவே கடந்தகால வரிகளைச் செலுத்தத் தேவையில்லை எனத் தீர்மானித்துள்ளோம்.

ஆண்டொன்றுக்கு வரி மதிக்கத்தக்க வருமானம் தனிநபர் ஒருவருக்கு மூன்று இலட்சத்துக்கு அதிகமாகவும், பங்குடைமையாயின் ஆறு இலட்சத்துக்கு அதிகமாகவும் வருமான வரி செலுத்த வேண்டும்.

வருமான வரி காலாண்டு அடிப்படையில் செலுத்தப்பட வேண்டும்.

இது சுய மதிப்பீட்டின் அடிப்படையில் செலுத்தப்பட வேண்டும். வரி செலுத்தும் போது முதலாவது காலாண்டுக்கு ஒகஸ்ட் 15 ஆம் திகதிக்கும், இரண்டாம் காலாண்டுக்கு நவம்பர் 15 ஆம் திகதிக்கும், மூன்றாம் காலாண்டு அடுத்த வருடம் பெப்ரவரி 15 ஆம் திகதிக்கும் இறுதிக் காலாண்டுக்கு மே 15 ஆம் திகதிக்கும் முன்னரும் செலுத்த வேண்டும்.

இந்தக் காலாண்டுத் திகதியில் 30 நாள்களுக்கு முன் செலுத்தப்படும் கொடுப்பனவுகளுக்கு 10 வீத கழிவும், குறிப்பிட்ட காலப்பகுதிக்கு பின்னர் செலுத்தப்படும் கொடுப்பனவுகளுக்கு தன்னியக்கத் தண்டமும் விதிக்கப்படும். உச்ச அளவு 50 வீதமாக இருக்கும்.

வருமான வரி செலுத்துபவர்கள் சில சலுகைகளைப் பெறுவதற்கு சட்டத்தில் இடமுண்டு. வரி செலுத்துபவர்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் அவர்களுக்கு வழங்கப்படும் அட்டையில் தங்க அட்டை, வெள்ளி அட்டை என வகைப் படுத்தப்பட்டுள்ளது. இந்த அட்டைகளை வைத்திருப்போர் வங்கிகள், விமான நிலையங்களில் சில விசேட சலுகைகளை அனுபவிக்க முடியும். அத்துடன் வாகன இறக்குமதியின் போதும் சலுகை உண்டு.

இதேவேளை ஆண்டொன்றுக்கான தனிநபரின் வருமான வரியில் 2009/2010 ஆம் ஆண்டுக்கான முன்னேற்றக் கொடுப்பனவு வீதம் வருமாறு:

முதல் நான்கு இலட்சத்துக்கு ஐந்து வீதமும், அடுத்த 4 இலட்சத்துக்கு 10 வீதமும், அடுத்த 4இலட்சத்துக்கு 15 வீதமும், அடுத்த 5இலட்சத்துக்கு 20 வீதமும், அடுத்த 5 இலட்சத்துக்கு 25 வீதமும், அடுத்த 5இலட்சத்துக்கு 30 வீதமும் ஆகும். ஏனைய மிகுதித் தொகைக்கு 35 வீதமாகும்.

இந்த அதிகூடிய வருமானமானது கடந்த வருடங்களில் 70 வீதமாக இருந் தது. அத்துடன் 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதியிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு விவசாய நடவடிக்கை கூட்டுறவுத் துறை மூலம் கிடைக்கும். வருமானத்துக்கு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது - என்றார். (6-14)




# இழுவைப் படகுகளைப் பயன்படுத்துவதில் பிரதேசத்துக்குப் பிரதேசம் பாரபட்சம்

## வல்வெட்டித்துறை கடற்றொழில் கூ. சங்கத் தலைவர் விசனம்

யாழ்ப்பாணம், ஒக.9

இழுவைப் படகின் உதவியுடன் கடற்றொழில் மேற்கொள்வது தொடர்பாக உள்ள நடைமுறைகள் பிரதேசத்துக்குப் பிரதேசம் பாரபட்சம் காட்டப்படுகின்றது. இதன் காரணமாக வல்வெட்டித் துறைப் பிரதேசக் கடற்றொழிலாளர்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என வல்வெட்டித் துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க வடபகுதித் தலைவர் நவமோடி விசனம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வல்வெட்டித்துறை கடற்பரப்பில் நேற்றுக் காலை இழுவைப் படகின் உதவியுடன் கடற்றொழிலில் ஈடுபட்ட மூவர், வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

சுனாமிப் பேரலையின் தாக்கத்துக்குப் பின்னர் இழுவைப் படகின் உதவியுடன் கடற்றொழில் செய்வதனை எமது பகுதி கடற்றொழிலாளர்கள் தவிர்த்து வந்தனர்.

ஆனால் குருநகர் பகுதியிலும் தென்பகுதியில் நீர்கொழும்பு கடற்பகுதியிலும் தற்போது இழுவைப்படகு மூலம் கடற்றொழில் செய்யப்படுகின்றது.

முன்னர் குருநகர்ப் பகுதியில் இழுவைப் படகு பயன்படுத்த தடை விதிக்கப்பட் டது. எனினும் தற்போது குருநகர் கடற்பரப்பில் சுமார் 140 இற்கும் மேற்பட்ட இழு வைப் படகுகள் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளன. - என்றார் (6-14)

# பிதிர்க்கடன்களை நிறைவேற்ற புலம்பெயர் மக்கள் யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஒக.9

பிரசித்திபெற்ற கீரிமலை புனித தீர்த்தத்தில் நீராடித் தமது தந்தையர்களின் பிதிர்க்கடன்களை நிறைவேற்ற வெளிநாடுகளில் புலம்பெயர்ந்திருந்திருக்கும் தமிழ் மக்கள் பலரும் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளனர்.

தற்போதைய சூழ்நிலையில் தமது பிறந்த மண்ணுக்கு வந்து ஆடி அமாவாசை விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்ற அவாவிலேயே தாம் இங்கு வருகை தந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

இதனைவிட நாட்டில் தென்பகுதி மற்றும் ஏனைய இடங்களில் தங்கியிருக்கும் யாழ். குடாநாட்டு மக்களும் ஆடி அமாவாசை விரதத்தை கீரிமலைக்குச் சென்று அனுஷ்டிப்பதற்கு வந்துள்ளனர்.

மக்களின் வருகையால் கீரிமலைப் புனித தீர்த்த வாரி இம்முறை களைகட்டி காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-26)

# நல்லூருக்கு வரும் பக்தர்கள் பாதணிகளை வைப்பதற்கு விசேட நிலையங்கள்

## நகைகளை அணிய வேண்டாம் என்றும் அறிவுறுத்து

நல்லூர் , ஒக.9

நல்லூர் கந்தசுவாமி கோயில் உற்சவ காலங்களில் பாதணிகளுடன் வரும் பொதுமக்கள் முன்னரங்க வீதித் தடைகளைக் கடந்து பாதணிகளுடன் உட்செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள். பொதுமக்கள் தமது பாதணிகளைக் கழற்றி வைக்கவென இந்த வீதித் தடைகளுக்கு அருகில் யாழ். மாநகரசபை விசேட நிலையங்களை அமைக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆலய உற்சவத்தையொட்டி மேற்கொள்ளப்படவுள்ள முக்கிய நடவடிக்கைகள் வருமாறு:

* சுவாமி வெளிவீதியுலா வரும் நேரத்தில் காவடிகள் வீதித்தடைகளுக்கு உள்ளே அனுமதிக்கப்படமாட்டது. எனவே காவடி எடுத்துவரும் அடியார்கள் இந்த நேரங்களில் ஆலயச் சுற்றாடலினுள் செல்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.


* நவநாகரிக - கவர்ச்சி உடைகளுடன் ஆலய வீதிகளில் நடமாட அனுமதிக்கப்படமாட்டாது. முன்னரங்க வீதித்தடைகளிலும் ஆலய உள்,வெளி வீதிகளிலும் பொலிஸார் 24 மணிநேர கடமையில் இருப்பதுடன் ரோந்து நடவடிக்கையிலும் ஈடுபடுவர்.

* இம்முறை பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் உற்சவத்தில் கலந்துகொள்வார்கள் என்பதால் சுகாதார சேவைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதுடன் உணவு நிலையங்கள் உட்பட அனைத்து சுகாதார நடவடிக்கைகளும் திடீர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படும்.

* வர்த்தகர்கள் தமது பொருள்களை எடுத்து வருவதற்கு வசதியாக நண்பகல் 12.30 மணி முதல் பி.ப. 1.30 மணிவரை வாகனங்கள் உட்செல்ல அனுமதிக்கப் படும். இந்த நேரங்கள் தவிர்ந்த ஏனைய நேரங்களில் வாகனங்கள் உட்செல்ல அனுமதிக்கப்படமாட்டாது .

* நகைகளை அணிந்து வருவதை தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளது. ஆண்கள் வேட்டி அணிந்து வருமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-111)

# சமுர்த்தி வங்கிக்குப் புதிய கட்டடம்



யாழ்ப்பாணம், ஒக.9

யாழ். பிரதேச செயலக சமுர்த்தி வங்கிக்கென தனியான கட்டடம் ஒன்று பண்ணையில் அமைக்கப்பட்டு வருகின்றது.

'ரெலிக்கொம்' நிறுவனத்துக்கு அருகில் இக் கட்டடம் அமைக்கும் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

பெரும்பாலும் இக்கட்டடத்தின் பணிகள் பூர்த்தியாகி இந்த மாத இறுதிக்குள் சமுர்த்தி வங்கியைத் திறந்து வைப்பதற்கு யாழ். பிரதேச செயலகம் நடவடிக்கையை மேற்கொண் டுள்ளது.

ஏற்கனவே கே.கே.எஸ் வீதியில் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடப் பகுதியில் தற்காலிகமாகச் செயற்பட்டு வந்த இப் பிரதேச செயலகத்தின் யாழ்.நகர் மேற்கு சமுர்த்தி வங்கியே இந்தப் புதிய கட்டடத்தில் இயங்கவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சுடர்

உதயன் நாளிதழ் ஊடாக நடத்தும்

நமக்கு நாமமே முன்னோடிகள்

தொடர் 01

## தரம் 05 புலமைப் பரிசில் இறுதிக் கருத்தரங்குத்தொடர் 2010

வளவாளர்:
மாணவர்களின் பாராட்டைப் பெற்ற
ஆசிரியர் U.L.M.சாஜித், அம்பாறை.



45 நிமிடங்கள் | பகுதி I

சுட்டெண் ______ புள்ளிகள் ______

### எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

* தரப்படும் படத்துடன் நெருங்கிய தொடர்புடைய விடையின் கீழ்க் கோடிடுக.

01. 

1) வெள்ளை, சாதுவானது, ஊனுண்ணி.
2) இறைச்சி, சாதுவானது, இலையுண்ணி.
3) சாதுவானது, இலையுண்ணி, ஓடும்.

02. 

1) குரைக்கும், ஊளையிடும், சாதுவானது.
2) நன்றியுள்ளது, இலையுண்ணி, காவலுக்கு.
3) காவலுக்கு, நன்றியுள்ளது, குரைக்கும்.

* மிக நெருங்கிய தொடர்புடைய இரு உருக்களைக் குறிக்கும் விடையின் கீழ்க் கோடிடுக.

03.




04.




* சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

05. கடிதம் ஒன்றை எழுதும் சரியான ஒழுங்கைக் காட்டும் விடையின் கீழ்க் கோடிடுக.
1) விளிப்பு, திகதி, முகவரி, உடல், முடித்தல்.
2) முகவரி, திகதி, விளிப்பு, உடல், முடித்தல்.
3) முடித்தல், முகவரி, உடல், விளிப்பு, திகதி.

06. கட்டுரை ஒன்று எழுதப்படும்போது கடைப்பிடிக்கவேண்டிய சரியான ஒழுங்கு,
1) தலைப்பு, முகவுரை, உடல், பந்திபிரித்தல், முடிவுரை.
2) முகவுரை, பந்தி, உடல், தலைப்பு.
3) உடல், தலைப்பு, முகவுரை, பந்தி, முடிவுரை.


* பின்வரும் பழமொழிகளில் ஒத்த தன்மையற்ற பழமொழியின் கீழ்க் கோடிடுக.

07. 1) இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.
2) அலைமோதும் போதே தலை முழுகு.
3) கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவானேன்?
4) தூரத்துச் பச்சை கண்ணுக்குக் குளிர்ச்சி.

08. 1) செல்வம் என்பது சிந்தையின் நிறைவே.
2) நாய் குரைத்தால் நமக்கென்ன குறை.
3) நிலவைப் பார்த்து நாய் குரைத்தால் என்ன?
4) காகம் திட்டி மாடு சாகுமா?

* கீழே உள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள எட்டுப் படங்களின் மூலமும் எட்டுச் சம்பவங்கள் காட்டப்பட்டுள்ளன. அச்சம்பவங்கள் எட்டும் தொடர் ஒழுங்கில் வரையப்படவில்லை. கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள வசனங்களுக்கு அமையத் தொடர் ஒழுங்கில் வரையப்பட்டுள்ள சம்பவங்கள் நான்கையும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளில் இருந்து தெரிந்து, அதன் கீழ்க் கோடிடுக.

09. ஒருவர் முதலாளியிடம் செவ்விளநீர் ஒன்றை வாங்கிக் குடித்துவிட்டு, பணம் கொடுக்கிறார்.




1) FDAG 2) HBCE
3) CHAE 4) GBDA

* சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

10. பறவையிடம் என்றுமே இல்லாத ஆற்றல்,
1) பறப்பது. 2) கதைப்பது.
3) படிப்பது. 4) நடப்பது

11. நாயிடம் எப்போதும் காணக்கூடியது,
1) பற்கள். 2) வால்.
4) நன்றியுணர்வு. 4) குரைத்தல்.

12. சிறுவர்கள் கற்கண்டை விரும்பி உண்ணக் காரணம்,
1) சுவை. 2) ஆசை.
3) விருப்பு. 4) இரசனை.

* பொருத்தமான ஆலோசனையின் கீழ்க் கோடிடுக.

13. தூர இடமொன்றில் இருந்து பேருந்தின் மூலமாகப் பாடசாலைக்கு வரும் வறிய மாணவனான இப்தி பேருந்தைத் தவறவிடுவதால் அடிக்கடி பாடசாலைக்குத் தாமதமாக வருகின்றான்.
1) இப்தி புகையிரதத்தில் வரலாம்.
2) இப்தி கார் ஒன்றை வாங்கலாம்.
3) இப்தி நேரத்துடன் வீட்டில் இருந்து புறப்படலாம்.


14. சப்னியின் எழுத்துக்கள் வாசிக்கமுடியாத அளவுக்கு அசிங்கமாக உள்ளதென ஆசிரியர் குறை கூறுகின்றார்.
1) எழுதும் பேனையை மாற்றலாம்.
2) நண்பர்களிடம் எழுதிக் கேட்கலாம்.
3) உறுப்பமைய எழுதும் பயிற்சியில் ஈடுபடலாம்.

* பின்வரும் வாக்கியங்களில் கருத்துப் பிழையாவதற்குக் காரணமான விடையின் கீழ்க் கோடிடுக.

15. புகையிரதம் ஒன்று படகு ஒன்றுடன் மோதியதால் படகில் பயணம் செய்த 6 பேர் படுகாயமடைந்தனர் என சுடர் ஒளி செய்தி வெளியிட்டுள்ளது.
1) ஒரு படகில் 6 பேர் பயணம் செய்ய முடியாது.
2) படகிற்குச் சக்கரம் இல்லாததால் மோதல் நடைபெறச் சாத்தியமில்லை.
3) படகு, புகையிரதத்துடன் மோதுவதற்குச் சந்தப்பம் இல்லை.

16. அவனது பற்கள் கடலையைப் போன்று வெண்மையாக இருந்தன. இந்த உவமை பொருத்தமற்றதாக இருக்கக் காரணம்,
1) கடலையை விடப் பற்கள் தடிப்பாக இருக்கின்றன.
2) கடலை வெண்ணிறமாக இருக்காது.
3) பற்கள், கடலையை விடப் பெறுமதியானது.

* முகம்பார்க்கும் கண்ணாடியில் தெரிகின்ற கடிகார முகங்கள் தரப்படுகின்றன. இவை காட்டும் சரியான நேரம் எதுவெனத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

17. 

1) 9.00 மணி.
2) 3.00 மணி.
3) 12.00 மணி.


18. 

1) 4.05 மணி.
2) 1.25 மணி.
3) 10.35 மணி.


* தரப்படும் உரையாடல்களைத் திருத்தமாக ஒழுங்கமைக்கும்போது மூன்றாவதாக வரும் வாக்கியம் குறிக்கும் எழுத்தின் கீழ்க் கோடிடுக.

19. மழை நாள் ஒன்றில் இருவரிடையே நிகழ்ந்த உரையாடல்.
அ. காற்றுப் பலமாக வீசுகிறது.
ஆ. சென்ற வருடம் மழைபெய்து ஊரே வெள்ளக் காடாகியது.
இ. இறைவனே! அப்படியொரு சம்பவம் இம்முறையும் நிகழக்கூடாது.
ஈ. பெருமழை பெய்யப்போகிறது போலுள்ளது.
உ. மேகம் கறுத்துள்ளது.
1) அ 2) இ 3) ஈ

* மூன்று தாயக்கட்டைகளும் ஒரே தாயக்கட்டையைக் காட்டுவதாயின் ''சரி'' எனவும், இல்லை எனின் ''பிழை'' எனவும் அடையாளமிடுக.


21. 


(..............................)

22. 

(..............................)

* வித்தியாசமான உருவின் கீழ்க் கோடிடுக.

23. 

24. 

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



30ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த செல்வச்சந்நிதிக்குச் செல்லும் அச்சுவேலி-தம்பாலை வீதி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. வீதியைத் திறப்பதற்கு முன்னர் ஆலய வழிபாட்டில் பொதுமக்கள் ஈடுபட்டிருப்பதையும் ஈ.பி.டி.பி.அமைப்பின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரனும் தொண்டைமானாறு பிரதேச இராணுவக் பொறுப்பதிகாரியும் இணைந்து வீதியைத் திறந்து வைப்பதையும் திறந்து வைக்கப்பட்ட வீதியில் ஈ.பி.டி.பியின் அமைப்பாளர், பொதுமக்கள் நடந்து செல்வதையும் படங்களில் காணலாம்.

# கைதடி முதியோர் இல்லத்தின் தேவைகளை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பூர்த்திசெய்ய வேண்டும்

## இல்ல அத்தியட்சகர் கோரிக்கை

கைதடி அரச முதியோர் இல்லத்தில் பல்வேறுபட்ட தேவைகள், குறைகள் என்பன உள்ளன. இவற்றை நிவர்த்தி செய்வதற்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வரவேண்டும்.

இல்லத்தின் அத்தியட்சகர் என்.இராஜசிங்கம் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளார்.

வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட முதியோர்கள் அவர்களது இறுதிக்காலத்தில் அன்பாகப்பராமரித்துப் பாதுகாக்கும் அரச முதியோர் இல்லமாக இது விளங்குகின்றது.

கைதடி முதியோர் இல்லத்தில் யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மாவட்டங்களைச் சேர்ந்த முதியோர்கள் தங்கியுள்ளனர்.

எனினும் இந்த முதியோர் இல்லத்தில் பலதரப்பட்ட குறைபாடுகள் வசதியீனங்கள் காணப்படுகின்றன.

இந்தக் குறைகளை நீக்குவதற்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு தடைவையாவது இல்லத்திற்கு விஜயம் செய்துஅதற்குப் பரிகாரம்காண முன்வர வேண்டும்-என்றும் அவர் கோரியுள்ளார்.

இதே சமயம் ஈ.பி.டி.பி கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் கடந்த வாரம் மேற்படி இல்லத்திற்கு விஜயம் மேற்கொண்டு இல்ல பணியாளர்களுடனும் மற்றும் அங்கு தங்கியிருக்கும் முதியோர்களுடனும் கலந்துரையாடியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-26)

## திருநெல்வேலிச் சந்தையில் புதிய கட்டடப் பணிகள் ஆரம்பம்

திருநெல்வேலி மரக்கறிச் சந்தையின் புதிய கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சந்தையின் பழைய கட்டடம் இடிக்கப்பட்டு, தற்போது நவீன வசதிகளுடன் கூடிய புதிய சந்தைக் கட்டடத்தை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சந்தைக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் ஒருபுறம் நடைபெற மறுபுறத்தில் வியாபாரிகள் பெரும் சிரமப்பட்டு தமது மரக்கறிகளை விற்பனை செய்து வருகின்றனர்.

அத்துடன் சந்தைப் பகுதியில் நுகர்வோரின் எண்ணிக்கையும் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றது. (எ-26)

## மலிவைக் கண்டு மயங்காதீர்

நாள்பட்ட-அழுகிய செவ்விளநீர் யாழ்.நகரப் பகுதியில் விற்கப்பட்டு வருவதாக நுகர்வோர் புகார் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய பாவனைக்கு ஒவ்வாத செவ்விளநீர் குறைந்த விலையில் விற்கப்படுகின்றது.

மலிவாகக் கிடைக்கும் இளநீரைப் பெருமளவானோர் வாங்கி அருந்துகின்றனர்.

எனினும் பழுதடைந்த செவ்விளநீரைக் குடிப்பதன் மூலம் மக்கள் நோய்த் தாக்கத்துக்கு இலக்காகும் அபாயமுள்ளதென்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

தென்பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட செவ்விளநீர்கள் விற்பனை இன்றித் தேங்கி இருந்ததாலேயே அவை பழுதடைந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-26)

# இலகு வேலைத்திட்ட உலர் உணவு விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக 09

உலக உணவுத்திட்டத்தின் கீழ் இலகு வேலை மேற்கொள்ளும் பயனாளிகளுக்கு மே மாதத்துக்கான உலர் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்த உலர் உணவுப் பொருள்கள் விநியோகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பயனாளி ஒருவர் ஒருநாளைக்கு மேற்கொள்ளும் வேலைக்கென விநியோகிக்கப்படும் பொருள்களின் விவரம் வருமாறு-

அரிசி ஒருகிலோ, மா ஒரு கிலோ, பருப்பு 300 கிராம், 100 கிராம் சீனி, சமையல் எண்ணெய் 108 மில்லிலீற்றர். (எ-26)

## ஆங்கிலமொழி மூல மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் நாளை

கோப்பாய், ஓக.9

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் ஆங்கிலமொழி மூலம் கல்வி பயிலும் தரம் 11 மாணவர்களுக்கான வினா விடை-மீட்டல் பயிற்சி வகுப்புக்கள் நல்லூர் சி.சி.ரி.எம்.எஸ். ஸ்தான பாடசாலையில் பின்வரும் நேர அட்டவணைக்கு ஏற்ப நடைபெறவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமையும் மறுநாள் புதன்கிழமையும் கணித பாடமும் 17ஆம், 18ஆம் திகதிகளில் விஞ்ஞான பாடமும் 25ஆம், 26ஆம் திகதிகளில் வரலாறு பாடமும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 2.30 மணிவரை நடைபெறும் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயம் அறிவித்துள்ளார். (6-72)




# தமிழில் வெளிவந்த நூல்களை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் முயற்சியே 'நூலக இணையம்'

## தமிழ் எண்ணிம நூலக இலங்கைப் பணிப்பாளர் பெருமிதம்

யாழ்ப்பாணம், ஓக 09

அழியும் நிலையிலுள்ள எழுத்தாளர்களின் நூல்கள் அடுத்த தலைமுறைக்கும் கிடைக் கும் வண்ணம் பாதுகாத்து, தமிழர்களின் வரலாறு, இலக்கியம், பண்பாடு ஆகிய வற்றை ஆவணப்படுத்தும் பெரும் முயற் சியில் தமிழ் எண்ணிம நூலகத்தார் ஈடுபட்டுள்ளனர்.

www.noolaham.org இன் சேவைகள் அதன் பயன்பாடுகள் என்பன யாழ்ப்பாணத்துக்கு அறிமுகம் செய்யும் நிகழ்வொன்று அண்மையில் யாழ்.பல்கலைக் கழகத்தில் இடம்பெற்றபோதே அதன் இலங்கைக்கான பணிப்பாளர் சசீவன் இப்படித் தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது:-

தமிழில் வெளிவந்த, தமிழரால் எழுதப்பட்ட, தமிழ்-தமிழர் தொடர்பான வெளியீடுகள் இணையத்தில் கிடைக்கும். இவை அனைத்தையும் ஓரிடத்தில் தேடியடையக்கூடிய வகையில் பாடசாலை மாணவர், பல்கலைக்கழக மாணவர், ஆய்வாளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், எழுத்தாளர்கள் என அனைவரும் பயனடையும் விதத்தில் ஆவணப்படுத்தி வருகின்றோம்.

தமிழில் சமகால அறிவு மிகப் பெருமளவில் பகிரப்பட்டுள்ள மிக முக்கிய வலைத் தளங்களில் ஒன்றான noolaham.org இனைத் திறம்பட செயற்படுத்தியிருக்கின்றோம்.

இதுவரையில் எம்மிடம் 7,000 வரையிலான நூல்கள் உள்ளன. 1833ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை வெளிவந்த நூல்கள், பத்திரிகைகள், சிறு பிரசுரங்கள், ஆய்வேடுகள், பாடசாலை மலர்கள் உள்ளிட்ட சகல விதமான எழுத்தாவணங்களும் உள்ளடக்கப்படுகின்றன. எழுத்தாளர் பெயர் கொண்டும், ஆண்டு ரீதியாகவும், வெளியிட்ட பதிப்பக விவரங்கள் கொண்டும், நூல்வகைகள் ரீதியாகவும் ஆவணங்களைத் தேடியடையலாம். மற்றும் எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள் அனுமதியுடன் யாரும்இதற்கு நூல்களைஅனுப்ப முடியும்-என்றும் அவர் கூறினார். (6-319)

# அரசசார்பற்ற நிறுவனங்களின் திட்டங்களுக்கு அரசாங்கமே முட்டுக்கட்டையாக விளங்குகின்றது

## -அரசசார்பற்ற இணையத் தலைவர் உரை-

யாழ்ப்பாணம்,ஓக.9

உள,சமூகத் தேவைகள் இன்று எம்மவர்களிடையே அதிகரித்துக் காணப்படுகின்றன. எனினும் அத்தேவைகளை நிறைவேற்ற அரசாங்கம் முட்டுக்கடையாக இருந்து வருகின்றதென யாழ்.மாவட்ட அரசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் வி.கேசவன் தெரிவித்தார்.

நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற துளிர்கள் நிறுவனத்தின் 6ஆவது ஆண்டு நிறைவு விழா மற்றும் சமூக சீர்திருத்தக் குறுந்திரைப்பட வெளியீட்டு விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது சமூகம் யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இன்று எமக்கு உள, சமூகப் பயிற்சிகள் தேவை. அதையே துளிர்கள் நிறுவனம் செய்து வருகின்றது. குறிப்பாக சிறுவர், பெண்களுக்கான சமூக மேம்பாட்டுக்காவே துளிர்கள் உழைத்து வருகின்றது

இன்று எமது அரசாங்கத்துக்கும் அரசசார்பற்ற நிறுவங்களுக்கும் இடையே இழுபறி நிலவுகின்றது. [illegible] அமைப்புகளுட[illegible] இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டவை உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களே. அதிலும் குறிப்பாகப் பாதிக்கப்பட்டவை மாவட்ட மட்ட அரசசார்பற்ற நிறுவனங்கள்தான்.

கடந்த வருடம் மேமாதம் யுத்தம் முடிவடைந்த பின்னரே இவ்வாறான இழுபறி நிலைகள் தோன்றியுள்ளன. அரசாங்கம் உள்ளூரில் அரசசார்பற்ற நிறுவனங்கள் செயலாற்றுவதற்கு அதிகளவான கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றது. கடந்த காலங்களில் மிகச் சிறப்பாகச் செயற்பட்டுவந்த அரசசார்பற்ற நிறுவனங்கள் பலவும் அரசாங்கத்தின் இத்தகைய கட்டுப்பாடுகள் மூலம் சிறப்பாகச் செயலாற்ற முடியாமலிருக்கின்றன.

யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்ற மீளக்குடியேறிய மக்கள், மீளக்குடியேறத் துடிக்கும் மக்கள், யுத்தத்தின் வடுக்களால் பாதிக்கப்பட்ட மக்கள் என மூன்று தரப்பினர் உள்ளனர். இவர்களுக்கு உள-சமூக ஆறுதல்கள் தேவை. இவற்றை நிறைவேற்ற அரசார்பற்ற நிறுவனங்கள் தயாராக உள்ளபோதும், அரசாங்கம் தடையாகவே உள்ளது.

அரசாங்கம் உள்ளூரில் செயற்படும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு தற்காலிக வீடுகள் அமைத்தல், மலசலகூடம் அமைத்தல், வாழ்வாதார உதவிகள், அவசர நிலைமைகளின்போது மக்களுக்கு உதவல் என்பவற்றுக்கே அனுமதி வழங்கியுள்ளது. ஏனைய கல்வி வசதிகள் அவர்களின் உள-சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் என்பவற்றுக்கு அனுமதிகள் மறுக்கப்பட்டுள்ளன. இதேவேளை உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் நிதிமூலமாகவே வெளிநாட்டு நிதி நிறுவன அமைப்புக்களே காணப்படுகின்றன. இவற்றிடமிருந்தே இந்நிறுவங்கள் தமது திட்டங்களுக்கு நிதியினைப்பெற்று வந்தன. இந்நிறுவனங்கள் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு நிதி வழங்கும்போது ஜனாதிபதி விஷேட செயலணியினால் வழங்கப்படும் அனுமதியை காண்பித்த பின்னரே நிதி வழங்கும். கடந்த வருட மே மாதத்துக்குப் பின்னர் ஜனாதிபதி விஷேட செயலணி இந்த உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் அனுமதிக்காகச் செல்லும்போது அவர்களிடம் நிதி நிறுவனங்கள் நிதி நிச்சயமாக தரும் என்ற உறுதிமொழி தந்தால் மட்டுமே தாம் அனுமதி தரலாம் என்று சொல்கின்றன. இதனால் இரண்டு தரப்பாலும் பாதிக்கப்படுவது உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களே-என்று தெரிவித்தார். (எ-319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளைத் தொடர்ந்து தடுத்து வைக்கவே அவசரகாலச் சட்டத்தை அரசு நீடிக்கின்றது

## நாடாளுமன்றில் விநாயகமூர்த்தி எம்.பி



கொழும்பு,ஓக.9

அவசரகால ஒழுங்கு விதிகளை நீடிப்பதற்கு அரசாங்கம் இரகசியத் திட்டங்களை வைத்திருக்கின்றது. இதன்மூலம் சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளை தொடர்ந்தும் தடுத்து வைக்கவே அரசு முயற்சிக்கின்றது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி.

அவசர காலச் சட்டம் மீதான வாக்கெடுப்பில் கலந்து கொண்டு அதனை எதிர்த்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது.

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் பிரிவு 2 (1) இற்கமைய பொது அவசர கால நிலை ஏற்படக்கூடும் எனக் கருதுமிடத்தும் சமூக வாழ்விற்கு அத்தியாவசியமான சேவை வழங்கல்களை சரியான முறையில் மேற்கொள்வதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு, பொதுக்கட்டளைப் பாதுகாப்புத் தொடர்பில் நிலமைக்கேற்ப அவசியமென ஜனாதிபதி கருதுமிடத்தும் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு (2), ஜனாதிபதியின் அதிகாரபூர்வ பிரகடனத்தின்படி வலுவிற்கு வரும். ஆனால் ஜனாதிபதியால் அவசரகாலப் பிரகடனத்தை மேற்கொள்வதற்கு ஏதுவாக மேற்சொல்லப்பட்ட சூழ்நிலை ஏதும் தற்போது இலங்கையில் இல்லை.

அவசரகால ஒழுங்கு விதிகள், பயங்கரவாதத்தடைச்சட்டம் ஆகிய இரண்டும் பயங்கரவாதத்தைத் தடைசெய்வதற்காகக் கொண்டுவரப்பட்ட போதிலும் அதற்கு மாறாக எதிர் விளைவுகளே உருவாகி இருப்பதை நாம் காண்கின்றோம்.

### அரச பயங்கரவாதம் பலரைப் பலியெடுத்தது

பயங்கரவாதத்தைத் தடைசெய்வதற்குப் பதிலாக அரச பயங்கரவாதத்தையே இவை உருவாக்கியுள்ளன. குமார் பொன்னம்பலம், ஜோசப் பரராஜசிங்கம், விக்னேஸ்வரன், சிவனேசன், ரவிராஜ், மகேஸ்வரன், பத்திரிகையாளர் லசந்த விக்ரமதுங்க மேலும் 10 பத்திரிகையாளர்களது கொலைகளிற்கு அரச பயங்கரவாதமே பொறுப்பாகும் என்பதுடன் மேற்படி கொலைகளுக்குப் பொறுப்பான கொலையாளிகள் யாரென்பது பொலிசாரால் இதுவரையில் கண்டறியப்படவில்லை. சிரேஷ்ட பத்திரிகையாளர் எக்னிலிகொட அவர்கள் கடந்த ஒருமாதகாலமாகக் காணாமற் போயுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சிரச தொலைக்காட்சி நிறுவனம் சில காலத்திற்கு முன்பு தாக்குதலுக்குள்ளானது. கடந்த வருடம் உதயன் பத்திரிகை நிறுவனம் தாக்குதலுக்குள்ளானதுடன் அங்கிருந்த தொழில் நுட்ப சாதனங்களும் சேதமாக்கப்பட்டன. சண்டே லீடர் பத்திரிகையின் தொழில் நுட்பசாதனங்களும் தாக்கி அழிக்கப்பட்டதுடன் ரூபவாஹினி கூட்டுத்தாபனமும் தாக்கப்பட்டது.

சர்வதேச மன்னிப்புச் சபையினுடைய அறிக்கையின்படி 2006ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை ஊடகத்துறையைச்சார்ந்த 14 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 20இற்கும் மேற்பட்டோர் நாட்டை விட்டுத் தப்பி ஓடி உள்ளனர்.

### ஓய்வு பெற்ற பின்னர் சரத்துக்கு நெருக்குதல்

இந்த சபையின் உறுப்பினரான ஜெனரல் சரத் பொன்சேகா அவர்கள் இன்னும் ஏன் நெருக்குதல்களுக்கு உள்ளாக்கப்படுகிறார் என எனக்குத் தெரியவில்லை. சாட்டப்பட்ட குற்றங்களை இராணுவத்தளபதியாக இருக்கும்போது அவர் புரிந்திருந்தால் அந்த நேரத்திலேயே இராணுவ நீதிமன்றத்தின் முன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும் மாறாக அவர் ஓய்வு பெறுவதற்கு அனுமதித்த பின்பு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட பின்பு இவ்வாறு தொந்தரவுகளுக்கு உட்படுத்துதல் ஏற்புடையதல்ல.

நான் மேலே குறிப்பிட்ட நடவடிக்கைகள் அரசபாதுகாப்புப் படைகளாலும் அவற்றை ஆதரிக்கின்ற துணைஇராணுவப் படைகளாலுமேயே மேற்கொள்ளப்படுகின்றனவே தவிர எதிர்க்கட்சியினுடைய எந்த அங்கத்தவரினதும் செயற்பாடல்ல.

தற்போது அமுலிலுள்ள அவசரகால ஒழுங்கு விதிகளில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சில ஒழுங்கு விதிகள் நீக்கப்பட்டுள்ளன. 19ஆம் பிரிவிற்குக் கீழ் வரும் தடுப்புக் காவல் கால எல்லை ஒருவருடத்திலிருந்து 3 மாதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஒழுங்கு விதி 63 (1)யும் நீக்கப்பட்டுள்ளது. இந்த நீக்குதலகளை நாங்கள் வரவேற்கின்றோம். உறுதியற்ற அல்லது நம்பகத்தன்மையற்ற குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்களின் விளைவால் பெரும் எண்ணிக்கையானோர் சிறைகளில் வாடுகின்றனா.

இந்த ஒழுங்கு விதிகளின்படி குற்ற ஒப்புதல வாக்குமூலம் சுயவிருப்பத்தின் பேரில் வழங்கபட்டதல்ல என்பதை நிரூபிக்கும் பொறுப்பு குற்றம சாட்டப்பட்டவரின் மேலேயே விதிக்கப்படுகின்றது. ஐக்கியநாடுகள் சபையின் மனிதஉரிமைக் குழுவானது பயங்கரவாதச் தடைச்சட்டத்தின் இககுறிப்பிட்ட ஏற்பாடுகளைக் கடுமையாக விமர்சித்துள்ளது. பயங்கரவாதச் தடைச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் அடிப்படையாக வைத்து குற்ற நிருபணம் ஒப்பேற்றப்பட்டமை அவசியமாக மீளாய்வு செயயப்பட வேண்டியன.

### இறுதியுத்தத்தில் பலர் பலி

சர்வதேச நெருக்கடிக் குழுவால் சேகரிக்கப்பட்ட ஆதாரங்களின்படி இறுதிக்கட்ட யுத்தத்தில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் வயோதிபர்கள் உள்ளிட்ட 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இறுதி ஐந்து மாத சிவில் யுத்த நடவடிக்கைகளில் கொல்லப்பட்டிருக்கிறார்கள். என சந்தேகிக்கப்படுகின்றது. எண்ணிலடங்காதவர்கள் அங்கவீனர்களாக்கப்பட்டுள்ளனர் என்பதுடன் லட்சக்கணக்கானோர் போதிய உணவு, மருத்துவ வசதியின்றி தவித்த நிலையில் அவர்களில் பலர் மரணமாகியுள்ளனர்.

இன்று கடத்தல்களும் கைதுகளும் தொடர்கின்ற அதேநேரத்தில் கடந்த வாரம் வவுனியாவைச் சார்ந்த வர்த்தகர் ஒருவர் கடத்தப்பட்டு 5 இலட்சம் ரூபா கப்பமாகச் செலுத்தப பட்ட பின்னரே விடுவிக்கப்பட்டிருந்தார். இதன் விளைவாக வவுனியாவைச் சார்ந்த வர்த்தகப் பிரமுகர்கள் ஜூலை 27 ஆம் திகதி செவ்வாயக் கிழமையன்று கடைகளை மூடி எதிர்ப்பினை வெளிக்காட்டியிருந்தனர்.

இறுதிநேர யுத்தத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் மனிதஉரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச ரீதியில் விசாரணை நடாத்தப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் கௌரவ ஜி.எல்.பீரிஸ் அவர்கள் இந்நாட்டின் உள்விவகாரங்களில் தலையிட வேண்டாம் என செயலாளர் நாயகத்திற்கு கூறியுள்ளார். இவர் ஒரு சட்டத்துறைப் பேராசிரியர் என்றவகையில் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின்படி ஒரு நாட்டில் மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்படும் சந்தர்ப்பங்களில் எந்தஒரு நாடும் அதனை கவனத்தில் கொள்ள முடியும் என்பதை இவர் அறிந்திருக்க வேண்டும்.

### வன்செயல்களும் கொலைகளும் வடக்கில் தொடர்கின்றன

வடக்கைப் பொறுத்தவரையில் வன்செயல்களும் அநீதியான கொலைகளும் இன்னும் நிறுத்தப்பட்டதாகத் தெரியவில்லை.

ஒருமாதத்துககு முன்பு கிளிநொசசி கணேசபுரத்தில் உள்ள வீடொன்றில், பொலித்தீனால் சுற்றப்பட்டு மலசலகூடக் குழியில் போடப்பட்டிருந்த நிலையில் ஐந்து உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இச்சம்பவம் தொடர்பில் கிளிநொசசி நீதவான் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டுளளார். இவ்விளைவுகளால் கிளிநொச்சிக்குச் சென்று மீளக்குடியமர மக்கள் பீதியடைந்துள்ளனர்.

சாவகச்சேரியில் கபில்நாத் என்ற மாணவனின் கொலை விசாரணையை நடத்திவரும் சாவகச்சேரி நீதவான் அச்சுறுத்தப்பட்டிருக்கிறார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சட்டத்தரணிகள் நீதிமன்றப் பகிஷ்கரிப்பிலும் ஈடுபட்டிருந்தனர்.

### தர்சிகா கொலையில் மர்மங்கள் உள்ளன

கடந்த மாதம் வேலணை தளவைத்தியசாலையில் பணியாற்றிய தர்சிகா சரவணை எனும் மருத்துவ மாது மர்மமான முறையில் கருக்கிட்ட நிலையில் வைத்தியசாலையில் இறந்து கடக்கக் காணப்பட்டார். அவருடைய பிரேத பரிசோதனையில் திருப்தியின்மை காரணமாக ஊர்காவற்றுறை நீதவானினுடைய விசேட உத்தரவின் பேரில் சடலம் கொழும்பிற்குக் கொண்டு வரப்பட்டு மீள்பிரேத பரிசோதனை நடத்தப்பட்ட வேளையிலே முக்கியமான சில உடற்பாகங்கள் காணாமல் போயுள்ளமை தெரிய வந்துள்ளது.

இதன் பின்னணியில் ஒரு சிங்கள டாக்டர் சந்தேகிக்கப்பட்ட நிலையில் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தபோது யாழ்.மேல் நீதிமன்றில் மேற்கொள்ளப்பட்ட பிணைமனுவில் உடனடியாகவே பிணை வழங்கப்பட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாகப் பொலிஸார் உரிய நேரத்தில் உரியவர்களிடம் வாக்குமூலங்களைப் பெற்று சரியான நடவடிக்கைகள் எடுத்திருப்பர்களேயாயின் பாதிக்கப்பட்டவர்களுடைய நலன்கள் ஓரளவிற்காவது பேணப்பட்டிருக்கும் என்பதை மிகமனவருத்தத்துடன் தெரிவிக்கின்றேன்.

இவ்விடயம் தொடர்பாக யாழ்.பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் திருப்தியற்ற முறையிலும், குற்றச் செயல்களை மூடிமறைக்கும் செயல்களாகவுமே காணப்பட்டதாக விமர்சனங்கள் எழுந்ததையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

2002 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை வெளிக்கொணரப்பட்டவற்றை கண்டறிவதற்காக அரசாங்கம் நியாய இணக்கக்குழு ஒன்றை நியமித்துள்ளது.

### தமிழர் பிரிதிநிதிகளுடன் கலந்தாலோசிக்க வேண்டும்

இநதக்குழு உண்மையான இணக்கத்தைக் கொண்டுவருவதற்காக இலங்கையில் உள்ள தமிழர் பிரதிநிதிகளுடனும் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர் பிரதிநிதிகளுடனும் கலந்து ஆலோசித்து தீவிரமடைந்துள்ள இனப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வுகாண வேண்டும். அவசரகால ஒழுங்குவிதிகளை நீடிப்பதற்கு இவ்வரசாங்கம் இரகசியத்திட்டங்களை வைத்திருக்கிறது என நான் நினைக்கிறேன். இவ் அவசரகால விதிகளை நீடிப்பதன்மூலம் சிறைகளில் வாடும் கைதிகளை தொடர்ந்தும் தடுத்து வைக்கவே இவ்வரசாங்கம் முயல்கிறது.

### தமிழ்க் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்க வெண்டும்

1980களில் ஜே.வி.பி கிளர்ச்சியாளர்களுக்கு மன்னிப்பு அளித்து விடுதலை செய்ததைப் போல தற்போது சிறையிலிருக்கும் அனைத்துத் தமிழ் அரசியல் கைதிகளிற்கும் மன்னிப்பு அளித்து அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென இவ்வரசாங்கத்தை நான் மிக விநயமுடன் கேட்டுக் கொள்கின்றேன். இவர்களில் சிலர் 10 வருடங்களுக்கு மேலாகச் சிறைகளிலே வாடுகின்றனர் என்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும்.- என்றார்.

# தமிழ் மக்களின் தாயகத்தில் 10 ஆயிரம் ஏக்கரை ஆயுதப் படையினருக்கு வழங்குவதை எந்தத் தமிழனும் பார்த்துக்கொண்டிருக்க மாட்டான்

## நாடாளுமன்றில் சுவாமிநாதன் எம்.பி.சீற்றம்

அவசரகால நீடிப்பு சம்பந்தமான பல பேச்சுக்களை இன்று மதியத்திற்குப் பிறகு கேட்டிருக்கிறோம். நாம் கடந்த சில மாதங்களாகவும் ஒவ்வொரு மாதமாகவும் விவாதித்து இருக்கிறோம். சபையின் ஒரு பக்கத்தினர் அதாவது ஆளும் தரப்பினர் அவசரகால நிலமையை ஆதரித்தும் எதிர்க்கட்சி எதிர்த்தும் பேசியிருக்கிறார்கள்.

எதிர்க் கட்சியினர் கூறுகிறார்கள் எதிர்ப்பது தம் கடமை என்று. எதிர்க்க வேண்டிய காரணங்கள் இருக்கும் போது எதிர்ப்பது நியாயமானது தான். இச்சூழ்நிலையில் நாம் எல்லோரும் தேர்தலில் அரசு பெற்ற வெற்றியைப் பற்றிப் பேசுகிறோம். அது அரசின் கொள்கைகளுக்கு மக்களின் அங்கீகாரமாக இருந்தது. மறுபுறம் மக்களின் உரிமைகளை, நாட்டின் சுபீட்சத்தை ஜனநாயக விதிமுறைகளையும் பாரம்பரியத்தையும் பேணி தன்பொறுப்புக்களை நிறைவேற்றுவது அரசின் கடமை.

இவ்வடிப்படை தத்துவ நெறி கள் தற்போதைய அரசால் செயற்படுத்தப் படுகின்றதா? என்பதை நான் புரிந்துகொள்ள இயலாது இருக்கிறேன். நிழற்பட நிலையம் 1.30 இற்கும் 1.45 இற்கும் இடையில் சில நாள்களுக்கு முன் தாக்கப்பட்டது. அந்நிலையம் உயர்பாதுகாப்பு வலயம், யூனியன் பிளேஸில் அமைந்திருக்கிறது.

நாம் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றி பேசிக் கொண்டிருக்கும்போது நிகழ்கின்ற நிகழ் வுகள் இதுதானா? இதுதான் சமுதாயத் திற்கு இப்போது தேவைப்படுவதா? அமெ ரிக்க அரசு 'சியத்த' தாக்குதலை வன்மையாகக்கண்டிக்கிறது.

கலையகத்தின் தலைவர் தீய ணைக்கும் படைக்கும் காவல்துறைக்கும் தொலைபேசி செய்தார். காவல்துறைக்கு அவ்விடம் வர 35 நிமிடம் பிடித்தது. தலைவர் றொசந்த கரியப் பெரும தீயணைக்கும் படையைக் காண்டு வர தன் சொந்த வாகனத்தை அனுப்ப வேண்டியிருந்தது. அவசரகால நீடிப்பின் மூலம் இதைத்தானா நாம் உங்களிடம் கேட்கிறோம்.

10,000 ஏக்கர் காணியில் பாரம்பரியமாக வாழ்ந்த அவர்கள் தாயக பூமியில் இருந்து அரசு கபளீகரம் செய்யப் போகிறது என்றால் விவசாயத்தை நம்பிவாழும் விவசாய சமூகத்தின் கதி என்ன? நாம் ஒரு குறிப்பிட்ட சமூகத்தை நிலைப்படுத்தவும் ஒரு குறித்த சமூகத்தை நிலைகுலையச் செய்யவும் நாம் இவ் வெற்றியை பெற்றிருக்கிறோம்.

எவரொருவருக்கு எவ்வுரிமை இருக்கிறதோ அவரவருக்கு அவ்வுரிமைக்கான சந்தர்ப்பத்தை நாம் வழங்குவோம். சம்பிக்க ரணவத்த தேரர் அவர்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் 21,000 சிங்களக் குடும்பங்கள் வாழ்ந்ததாகக் கூறினார். சிங்களக் குடும்பங்கள் இங்கே வாழ்ந்த கருத்தை நாங்கள் மறுதலிக்கவில்லை. அதே நேரத்தில் ஆயுதப் படையினரின் குடும்பங்களுக்கு வாழ்வதற்கும் தொழில் செய்யவதற்கும் 10,000 ஏக்கர் நிலத்தை தமிழ் மக்களின் சொந்தத் தாயாகப் பூமியில் இருந்து பறித்தெடுத்து அவர்களுக்கு வழங்கத் திட்டமிடுகின்ற அந்த அராஜக செயற்பாட்டினை எந்தத் தமிழனும் கண்டு கொண்டிருக்க முடியாது.

நாங்கள் அவசரகால நிலைமை பற்றி பேசுகின்றோம். அரசைப் பொறுத்தவரையில் அவசரகால நிலைமை நீடிப்பதற்கு என்ன தேவை இருக்கின்றது என்பதை சொல்ல வேண்டியதேவை உண்டு. போர் முடிந்துவிட்டது. பிரிவினை வழிகள் பூண்டோடு அழிக்கப்பட்டு விட்டன என்று வெற்றி விழாக்களும் கொண் டாடியாயிற்று. அதன் பிறகும் வட, கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்தும் சிறிய அளவிலும் பெரியளவிலும் இராணுவ முகாம்களை நிறுவுவதிலும் அவற்றை விஸ்தரிப்பதிலும் என்ன அக்கறை காட்டுகின்றது?

தமிழ்ப் பிரதேசங்களை என்றும் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களாக தொடர்ந்தும் பேணுவதற்கா? இப் போது நாம் கவனம் செலுத்த வேண்டிய பிரச்சினை போரி னால் பாதிக்கப் பட்டவர்களின் பிரச்சினை.



தென்னிலங்கையிலும் இராணுவ வீரர் களின் தரப்பினாலும் விதவையாக்கப்பட்ட பெண்களும் உள்ளனர். ஆனால் அவர்கள் அரச பராமரிப்பில் சகல வசதிகளோடும் வாழ்கிறார்கள். ஆனால் வடமாகாணத்தில் வித வையாக்கப்பட்ட பெண்கள் கையறு நிலை யில் கதறிக் கொண்டேயிருக்கிறார்கள்.

வட, கிழக்கு மாகாணத்திலே 81,000 இற்கும் மேற்பட்ட பெண்கள் இருக்கிறார்கள். அவர்கள் உண்பதற்கும் உடுப்பதற்கும் எதுவும் இல்லை. அவர்களுடைய பிள்ளைகளுக்குக் கல்வி இல்லை, தொழில் இல்லை. அவர்கள் எப்படி வாழ முடியும்? அவர்களின் பிரதான உழைப்பாளியான கணவர் உயிரோடு இல்லை. இந்தப் பிரச்சினைகளை அரசு உணர்வு பூர்வமாகச் சிந்திக்கின்றதா? இந்த விதவைப் பெண்களில் பெரும்பாலானவர்கள் 25 வயதை எட்டியவர்கள்.

இதை நான் சொல்வதற்குக் காரணம் அரசு கவனத்தில் கொள்ள வேண்டிய பிரச்சினைகளில் முக்கியமானவை இவை தான். அதாவது பெண்கள் விவகார குழந்தைகள் அபிவிருத்தி அமைச்சு இந்த விடயத்தை ஒருவேளை பரிசீலிக்கலாம். அதாவது வட மாகாணத்திலுள்ள அனைத்துக் குடும்பங்களும் குறிப்பாக வவுனியா, கிளிநொச்சி, மன்னார் போன்ற மாவட்டங்களில் உள்ள குடும்பங்கள் அனைத்திலும் பொருளாதார ரீதியில் உறுதியற்றவர்களாக இருக்கிறார்கள்.

கிளிநொச்சியில் தங்கியிருக்கின்ற மக்களுக்கு நிரந்தரமான வசிப்பிடம் இல்லை. அப்படித்தான் வசிப்பிடம் வழங்கப்பட்டாலும் அவர்களுக்கு நிலையான பொருளாதார வளமில்லை. அடுத்து என்ன நடக்குமென்று அவர்களுக்குத் தெரியாது. அவர்களுக்கு உணவு இல்லை, உடை இல்லை.

நாம் பல ஆண்டுகளாக வட பகுதியில் துன்புற்றிருக்கிறோம். வரும் ஆண்டு களிலும் துன்புறலாம். 10,000 ஏக்கர் காணியை இராணுவம் கபளிகரம் செய்வதாக அறிந்தோம். காரணம் இராணுவத்தினரையும் இராணுவத்தினர்களின் குடும்பங்களுயும் அங்கு குடியேற்றப்போகிறார்கள் என்பதாகும். 10,000 ஏக்கர் காணி தமிழர்களிடம் இருந்து பறிக்கப்பட்டால் அவர்களுக்கான வாழ்வாதாரம் என்ன? எங்கே விவசாயம் செய் யப் போகிறார்கள்? இப்பிரச்சினைகளைச் சிந்தியுங்கள். ஒரு குறித்த சமூகத்தை நிலைப்படுத்தவும் இன்னொரு குறித்த சமூகத்தைச் சீரழிக்கவுமா குறித்த யுத்தத்தை வென்றெடுத் தோம். அவர்களுக்கு உரிய சந்தர்ப்பதை வழங்குங்கள். இவைதான் அரசு பரிசீலிக்க வேண்டிய விடயங்கள்.

தமிழ் சமூகத்தின் முன்னேற்றத்தை முடமாக்கிய பல பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளோடு மேலும் புதிதாகத் தோன்றியிருக்கின்ற தமிழ், சிங்கள, முஸ்லிம், கிறிஸ்தவப் பெண்களின் விதவைக் கோலம்தான். ஒவ்வொரு சமூகப் பண்பாட்டு நடத்தையினை இந்த விடயத்தில் ஈடுபடுகின்றவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இந்த அவசரகால நீடிப்பு விவகாரத்தில் நான் மீண்டும் வலியுறுத்துவது நல்லாட்சிதான். தென்கிழக்கு ஆசியாவில் இலங்கையை மிகச் சிறந்த நாடுகளுள் ஒன்றாக ஆக்கப் போவதாகக் கூறுகின்றார்கள்.

நாட்டை ஒரு வலுவான நிலையில் கட்டியெழுப்ப அரசு முயற்சிக்காமல் இப்படிப்பட்ட விரோத நடவடிக்கைகள் மூலம் ஏன் நாட்டின் உறுதிப்பாட்டைக் குலைக்க அரசு முயற்சிக்கின்றது? எப்படிச் சிங்கப்பூர் வளர்ந்தது? எப்படி மலேசியா வளர்ந்தது? எப்படி யப்பான் ஒரு பெரிய அழிவிலிருந்து மீண்டெழுந்து ஒரு புதிய சகாப்தத்தை தோற்றுவித்தது? எப்படி அவுஸ்திரேலியாவும், அமெரிக்காவும் வளர்ந்தன? அங்கே பொருளாதார வளர்ச்சி இருந்தது. அங்கே ஜனநாயகம் இருந்தது. ஜனநாயகம் இல்லையென்றால் பொருளாதார வளர்ச்சி இருக்க முடியாது. பொருளாதார வளர்ச்சியை நாங்கள் கணக்கிலெடுத்துக் கொள்ளவேண்டுமாயிருந் தால் அதற்கான அடித்தளம் பொருளாதார வளர்ச்சியிலிருந்து உதயமாக வேண்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊவா மாகாண சபையில் தமிழ்மொழி புறக்கணிப்பு

## மாகாணசபை உறுப்பினர் காட்டம்

பதுளை, ஓக. 09

''ஊவா மாகாணசபையின் மொழியுரிமை மீறப்பட்டுக்கொண்டிருக்கின்றது. இது குறித்து ஊவா மாகாணசபையில் பல தடவைகளில் எடுத்துக்கூறியும் அதனை அசட்டை செய்து வருகின்றது. இது சம்பந்தமாக சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடலாமென்று ஆலோசித்து வருகின்றேன்.''

-இவ்வாறு ஊவா மகாணசபையின் ஐ.தே.க.உறுப்பினரும், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கப் பொதுச் செயலாளருமான க. வேலாயுதம் கூறினார்.

பதுளை 'ஹொலிடே இன்' ஹோட்டலில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் கலந்துகொண்டு பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அரசமைப்பு கற்கை நிறுவனத்தினால் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது பற்றிய மாகாணக் கருத்தரங்கு இடம்பெற்றபோதே ஊவா மாகாணசபை உறுப்பினர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

அண்மையில் ஊவா மாகாண விளையாட்டுத்துறை அமைச்சால் பதுளையில் மாபெரும் மாகாண விளையாட்டு விழா நடத்தப்பட்டது. அவ்விழாவில் முற்று முழுதாக தமிழ் விளையாட்டு வீரர்கள் புறக்கணிக்கப்பட்டிருந்தார்கள். தமிழ் மொழியும் புறக்கணிக்கப்பட்டிருந்தது. அவ்விளையாட்டுத்துறை அமைச்சிற்குப் பொறுப்பான அமைச்சரும் தமிழராவார். அப்படியிருந்தும் ஊவா மாகாணசபை திட்டமிட்டு தமிழ்மொழியை புறக்கணிப்புச் செய்திருக்கின்றது. விளையாட்டு விழா தொடர்பான சகல அறிவிப்புகளும், அறிவித்தல்களும் சிங்கள மொழியிலேயே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

தமிழ் மக்களும் ஊவாவில் இருப்பதை அவ்வமைச்சு முற்றுமுழுதாக மறந்த நிலையிலேயே மாகாண விளையாட்டு விழா இடம்பெற்றது. மேலும் ஊவா மாகாணசபையினால் விடுக்கப்படும் அழைப்பிதழ்கள் அனைத்துமே சிங்கள மொழியிலேயே உள்ளன. இதுபோன்ற நிலை ஊவாவின் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான எம்மால் ஜீரணிக்க முடியாது.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்கிரமரட்ன, ''அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது அதற்கெதிராக வழக்குத்தாக்கல் செய்து வருகின்றோம். அதுபோன்று மொழியுரிமை மீறப்பட்டாலும் 126 ஆம் சட்டவாக்க சரத்தின் பிரகாரம் வழக்குத் தாக்கல் செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அத்துடன், 13 ஆவது அரசமைப்பின் பிரகாரம் தமிழுக்கும், சிங்களத்திற்கும் சமமான உரிமைகள் மாகாணசபைகள் மூலம் வழங்கப்பட்டேயாக வேண்டும். ஆனால், இச்சம மொழியுரிமை மத்திய அரசினாலும் முழு மையாக முன்னெடுக்க முடியாத இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.போதியளவு மொழி பெயர்ப்பாளர்களை நியமித்துக் கொள்ளவும், அரசு தயங்கிக் கொண்டிருக்கின்றது'' - என்றார்.

''ஊவா மாகாணத்தில் ஆசிரியர் இடமாற்றக்கொள்கைகள் தொடர்பாக கமலாவதி என்ற ஆசிரியை வழக்கொன்றையும் தாக்கல் செய்துள்ளார். இதுபோன்ற வழக்குத் தீர்ப்புகளும் அதிகாரங்கள் பரவலாக்கலுக்குப் பேருதவியாக அமையும்''- என்றார். (ளி)




# குளவி கொட்டியதில் 25 மாணவர்கள் பாதிப்பு

எபோட்ஸிலி தமிழ் வித்தியாலயத்தில் கடந்த வியாழக்கிழமை மாணவர்களைக் குளவிகள் சூழ்ந்து கொட்டியதால் 25 மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் கடும் பாதிப்புக்கு உள்ளான நான்கு மாணவர்கள் டிக்கோயா கிளங்கன் மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மாணவர்கள் கடந்த வியாழக்கிழமை இடைவேளையின்போது வகுப்பறைக்கு வெளியில் விளையாடிக்கொண்டிருந்தபோதே குளவி கொட்டியுள்ளது. அதிபர், ஆசிரியர்கள் சமயோசிதமாக செயற்பட்டு மாணவர்களில் பெரும் எண்ணிக்கையாளவர்களை பாதுகாப்பான இடத்துக்கு அனுப்பி வைத்தனர். காயம் அடைந்தவர்கள் உடனடியாக தோட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் 21 மாணவர்களுக்கு உடனடியாக அங்கு சிகிச்சை வழங்கப்பட்டது. மேலதிக சிகிச்சை தேவைப்பட்ட நான்கு மாணவர்கள் டிக்கோயா கிளங்கன் மாவட்ட வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். (ளி)

# தேசிய விளையாட்டுப் போட்டியில் மத்திய மாகாணம் முதலிடம் பெறவேண்டும்

## மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

கண்டி, ஓக. 09

'' தேசிய விளையாட்டு போட்டியில் மத்திய மாகாண வீரர்கள் மன உறுதி பூண்டு முதலிடம் பெறவேண்டும். அடுத்த ஒலிம்பிக்கில் மத்திய மாகாண வீரர் ஒரு தங்கப்பதக்கத்தைப் பெற வேண்டும்.''

- இவ்வாறு மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

மத்திய மாகாணத்தினது கெட்டம்பவில் அமைந்துள்ள விளையாட்டு அமைச்சின் கேட்போர் கூடத்தில் விளையாட்டு அமைச்சர் அனுஷியா சிவராஜா தலைமையில் நடைபெற்ற மாகாண வீரர்களுக்கான விளையாட்டு உடை வழங்கும் வைபவத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அனுஷியா சிவராஜா, அமைச்சின் செயலாளர் சிரானி வீரகோன் ஆகியோரும் உரையாற்றினர்.

முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தமதுரையில் கூறுகையில்,

''இவ்வருடம் கண்டியில் தேசிய விளையாட்டு போட்டி நடைபெறுவதால் எமது வீரர்களுக்குத் தேவையான ரசிகர்களின் ஆதரவு கிட்டும். உளரீதியாக வெற்றிக்கு இது வழிவகுக்கும். அமைச்சு மூலம் நாம் தேவையான ஆதரவை வழங்குவோம்''- என்றார். (ளி)

# ஏந்து பிரதேச தோட்டத்துக்கு இலாப பங்கு வழங்கப்படவில்லை

நுவரெலியா, ஓக. 09

நுவரெலியா மாவட்டத்தின் ஹற்றன் புசல்லாவை, ஏந்துப்பிரதேசத்துக்குட்பட்ட தோட்டங்களுக்கு ஆடிமாதத்தில் வழங்கப்படும் இலாப பங்கு இதுவரை வழங்கப்படவில்லை என்று தோட்டப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக ஏந்துப் பிரதேச தோட்டத்துரைமாருக்கு தொழிலாளர் தேசிய சங்கத்தின் உதவிச் செயலர் எஸ். வீரப்பன் முறையிட்டுள்ளார். ரொச்சல்ட், டெல்டா, எல்பொட, மெல்போட, ஸ்டெலண், போமண்ட ஆகிய தோட்டங்களுக்கே இந்த இலாப பங்கு வழங்கப்படவில்லை என குறித்த தோட்ட மக்கள் கூறுகின்றனர்.

2008, 2009 ஆண்டுகளின் இலாப பங்கு அடி மாதங்களில் வழங்கப்பட்டது. ஆனால், இம்முறை வழங்கப்படவில்லை. இதனால் தாம் ஆடிப்பெருக்கு கொண்டாட்டத்தை கொண்டாட முடியாமல் போயுள்ளது என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ளி)

# எமது வாழ்க்கையே ''போனஸ்'' தான் அமைச்சர் அதாவுல்லா பேச்சு

அம்பாறை, ஓக. 09

''நாம் இவ்வுலகில் வாழ்கின்ற வாழ்க்கை போனஸ் வாழ்க்கையாகும். இது நிரந்தரமானதல்ல. மரணம் மாத்திரம் தான் திட்டமானதும் நிரந்தரமானதுமாகும். மரணத்தின் பின்னரான வாழ்க்கைதான் உண்மையானதாகும்''

- இப்படி உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்தார்.

மருதமுனை இஸ்லாமியக்கல்வி நிலையத்தின் 3ஆவது காபிழ் பட்டமளிப்பு விழா அண்மையில் 'ஷம்ஸ் மத்திய கல்லூரி உள்ளக அரங்கில் நடைபெற்றது.பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் அதாவுல்லா இதனைத் தெரிவித்தார்.

இஸ்லாமியக்கல்வி நிலையத்தின் தலைவர் ஏ.எல்.மீராமுஹைதின் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் காத்தான்டி ஜாமியதுல் பலாஹ் அரபுக் கல்லூரியின் அதிபர் மௌலானா மௌலவி சேகுவ்பவாஹ் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு புனித அல்குர்ஆனை மனனம் செய்த 12 மாணவர்களுக்கும் தலைப்பாகை அணிவித்து காபிழ் பட்டம் வழங்கினார்.

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஏ.அப்துல் மஜீத், கல்முனை மாநகர முதல்வர் எஸ்.இஸட், எம்.மசூர் மௌலானா மாகாண அமைச்சர் எம்.எவ். உதுமாலெவ்வை, மாகாணசபை உறுப்பினர் எம்.எல்.துல்கர் நஸீம், இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் பணிப்பாளர் ஐ.ஏ.ஹமீட் ஆகியோர் உட்படப் பள்ளிவாசல் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், ஊர்ப்பிரமுகர்கள் எனப் பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர்.

இங்கு அமைச்சர் அதாவுல்லா தொடர்ந்து பேசுகையில், ''இஸ்லாத்தைப் பூரணப்படுத்துவதற்காக அல்லாஹ் இறக்கியதுதான் புனித அல் குர்ஆன். இதை யாரும் மாற்றம் செய்யவும், திருத்தவும் முடியாது. இதுமனிதர்களுக்கான வழிகாட்டியாகும்.

குர்ஆனை உள்ளத்திலே சுமந்துகொண்டிருக்கின்ற அல்ஹாபிழ்கள் மிகவும் உயர்வானவர்கள், உன்னதமானவர்கள், இறைவனின் விருப்பத்திற்குரியவர்கள். இவர்களை சமூகம் கௌரவப்படுத்த வேண்டும்.'' எனத் தெரிவித்தார். (ளி)




# வெளிநாட்டிலிருந்து விடுமுறைக்கு திருமலை வந்தவருக்கு கத்திக்குத்து

திருகோணமலை, ஓக. 09

வெளிநாட்டிலிருந்து விடுமுறையில் திருகோணமலைக்கு வந்திருந்த குடும்பஸ்தர் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை வேட்பாளர் நடேசபிள்ளையின் தம்பியான எஸ்.சிவபாலா என்பவரே கத்திக்குத்துக்கு இலக்கானார்.

மனையாவெளிப் பகுதியில் சென்று கொண்டிருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த இனம்தெரியாத நபர்கள் இவரைக் கத்தியால் வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனத் துறைமுகப் பொலிஸார் கூறினர்.

சுவிற்சர்லாந்து நாட்டில் இருந்து ஒருமாத விடுமுறையில் வந்திருந்த போதே இந்த அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது.

சுவிற்ஸர்லாந்து திரும்புவதற்கு அவர் ஆயத்தமான நிலையிலேயே தாக்கப்பட்டுள்ளார். இதனால் அவரது பயணம் பிற்போடப்பட்டுள்ளது.

துறைமுகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ளி)

# 8 கோடி ரூபா செலவில் கிண்ணியா வீதி புனரமைப்பு

திருகோணமலை, ஓக. 09

'மஹிந்த சிந்தனை' வேலைத்திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சினால் 8கோடி 60 லட்சம் ரூபா செலவில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிண்ணியா வீதி புனரமைப்புக்கான வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமாலெவ்வை அண்மையில் வைபவ ரீதியாக இந்த வேலையைத் தொடக்கி வைத்தார்.

காக்காமுனையிலிருந்து குறுஞ்சாகேணி வரையிலான வீதியே அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. இவ்வீதியில் உள்ள பாலம் மற்றும் வடிகான்கள் என்பனவும் புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

புனரமைப்பு வேலைகளை ஆரம்பித்து வைத்த கிழக்கு மாகாண நீர்ப்பாசன, வீதி அபிவிருத்தி, வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெவ்வை தெரிவித்தவை வருமாறு:-

கிழக்கு மாகாண சபையினால் எந்தவித அபிவிருத்தி வேலைகளும் இடம்பெறுவதில்லையென எதிர்க்கட்சிகள் பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றன. கிழக்கு மாகாண சபையால் அநேக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

30வருட காலமாக புரையோடிப்போயிருந்த கொடிய பயங்கரவாதத்தை நாட்டிலிருந்து ஒழித்து மூவின மக்களையும் ஒற்றுமைப்படுத்திய ஜனாதிபதியை மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள்.

குறிப்பாக கிழக்கு மாகாண முஸ்லிம்கள் ஜனாதிபதிக்கு என்றென்றும் நன்றி கூறக் கடமைப்பட்டவர்கள். (ளி)

# சிறுவர் பூங்கா இல்லா கல்முனை மாநகரம்

## அமைத்துத்தர வலியுறுத்து

அம்பாறை, ஓக.09

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் 'சிறுவர் பூங்கா' இல்லாததன் காரணமாக தமது சிறுவர்களுக்கு பொழுது போக்கு வசதிகள் கிடைப்பதில்லை என்று இப்பகுதிப் பெற்றோரும் சமூக உளவியலாளர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

கல்முனை நகரில் சிறுவர் பூங்காவாகப் பாவிக்கப்பட்ட காணி தற்போது கல்முனை பஸ் நிலையமாக மாற்றப்பட்டுள்ளது. இதற்கு மாற்றாகக் கல்முனை நகரில் சிறுவர் பூங்கா எதுவும் இதுவரை புதிதாக அமைக்கப்படவில்லை.

சிறுவர்கள் தமது உடல், உள, சுகாதார நலன்களைப் பேணுவதற்கு சிறுவர் பூங்கா அவசியம் என்பதால் கல்முனை மாநகர சபைப் பிரிவிலுள்ள சகல தமிழ், முஸ்லிம் கிராமங்களிலும் பொருத்தமான இடங்களில் சிறுவர் பூங்கா அமைக்கப்படல் வேண்டும் எனப் பெற்றோர்களும் சமூக உளவியலாளர்களும் வலியுறுத்துகின்றனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவனம் கட்டாக்காலி நாய்கள்!

யாழ்ப்பாணம், ஓக9

யாழ்.மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் தற்போது கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருகின்றது.

வீதியோரங்களில் பெருகியுள்ள கட்டாக்காலி நாய்களினால் வீதிகளில் பொதுமக்கள் நடமாட முடியாமல் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள் வீதிகளில் கூட்டமாகச் செல்லும்போது நாய்கள் அவர்களைத் துரத்திச் செல்வதால் வாகனங்களுடன் மோதி விபத்துக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. (எ-313)

## குடிபோதை இளைஞர்களின் தொல்லைகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக9

கொக்குவில் கே.கே.எஸ்.வீதிப் பகுதியில் கடந்த சில நாள்களாக இளைஞர்கள் சிலர் மதுபோதையில் 'ரகளையில் ஈடுபட்டுவருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பிரபல பாடசாலை, இந்துக்கோயில் மற்றும் வர்த்தக நிலையங்கள் என்பன அமைந்துள்ள சனநடமாட்டம் அதிகமுடைய இப்பகுதியில் தினமும் மாலை நேரங்களில் மதுபோதையில் கூட்டமாகவரும் இளைஞர்கள் போதையின் உச்சத்தில் கோஷ்டி மோதல்களில் ஈடுபடுவதும் வீதியால் செல்பவர்களை நையாண்டி செய்வதும் தவறான வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபடுவதுமாக உள்ளனர். இதனால் பொதுமக்கள் பெரும் இன்னல்களை அனுபவிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-310)




டயிடஸ் ஸ்டோஸ்
புறக்கோட்டை லிப்டி பிளாசா
2439422


## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி காசிப்பிள்ளை சின்னம்மா



| அன்னை மடியில் | அம்மன் திருப்பாதத்தில் |
|---|---|
| 02-05-1935 | 03-08-1997 |

அம்மா உன் பிரிவுத் துயரால்
ஆண்டுகள் பதின்மூன்று ஓடி மறைந்திடினும்
உங்கள் அன்பு முகம் மறந்திடுமா?
மறைந்திடுமோ?

ஆண்டுகள் எத்தனை கடந்தாலும் - உங்கள்
நினைவலைகள் நெஞ்சைவிட்டு நீங்காதே - அம்மா!
அன்பால் எம்மை வளர்த்தெடுத்த அம்மாவே!
அன்புமுகம் பார்த்தே படுத்துறங்கிப் பழகிய - நாம்
இப்போது தூக்கமின்றித் துடியாய்த் துடிக்கின்றோம்
எத்தனை யுகங்கள் மலரட்டும் - எம்
நெஞ்சமதில் உங்கள் ஞாபகம் நிலைத்திருக்கும்
உங்கள் நினைவுகள் என்றும் சுகமானவையே!

உங்கள் ஆத்மசாந்திக்காய் இந்த ஆடி அமாவாசை நன்னாளில் வட்டுவினிப் பிள்ளையார், வட்டுவினி வைரவர், வட்டுவினி கண்ணகி அம்மன், இணுவில் கந்தன் துணை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்மார், மைத்துனர்மார்.

பொ.காசிப்பிள்ளை,
பொன்னப்பாபதி, வட்டுவினி லேன்,
இணுவில் மேற்கு.

(சி/559667)

## நிவாரணம் வழங்கல்

யாழ்ப்பாணம், ஓக9

மானிப்பாய் பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் வசிக்கும் இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் வழங்கப்பட உள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கோப்பாய், தெல்லிப்பழை ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த 340 குடும்பங்களுக்கும் வன்னியில் இருந்து இடம்பெயர்ந்தோருக்கான 270 பேருக்குமே இந்த நிவாரணம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது. (எ-314-318)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள் — 1214 சிவப்பு

துலாம் — 30 31 35 54 — 06-08-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 5,038,450/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 227,607 | 20/- | 4,552,140/- |
| 2 இலக்கங்கள் | 20,874 | 40/- | 834,960/- |
| 1 இல. + லக்கினம் | 20,637 | 60/- | 1,238,220/- |
| 2 இல. + லக்கினம் | 1,887 | 200/- | 377,400/- |
| 3 இலக்கங்கள் | 561 | 1000/- | 561,000/- |
| 3 இல. + லக்கினம் | 52 | 10,000/- | 520,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 5,038,450/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 8,483,720/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 611 | | 604,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 272,231 | | 9,087,720/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 5,546,550/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

மேடம் — 27 29 49 52

ஜக்பொட் பரிசு ரூபா. 800,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 608 | 500/- | 304,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 800,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 611 | | 604,000/- |

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா.900,000/-

# ஈராண்டு நினைவலைகள்

## அமரர் இராஜேஸ்வரி செல்லத்துரை

திதி: 19.07.2010

அன்னை மடியில்: 26.04.1935

ஆண்டவன் அடியில்: 09.08.2008



அன்புள்ள அம்மாவிற்கு.....

பகல் இரவு பாராது
பாசத்தால் அரவணைத்து
பல நன்மைகள் காட்டிவைத்து
பார் சிறக்க வாழுகையில்
காலனவன் கவர்ந்தானோ!

கதைகள் பல உள்ளதம்மா
கதைத்துப் பேசி மகிழ்ந்திருக்க
வீடு வந்து போங்களம்மா - வீடும்
வெறிச்சோடிப் போய்க்கிடக்கு
உமைக்காணாது தேடிய எம் விழிகளுக்கு
நிழற்படம் விடையானதுவோ!

ஆண்டுக்கு ஒரு மடலும்
அனுப்பி வைக்கின்றோம்
மடல் இது இரண்டாவதம்மா
பதில் இன்னும் காணவில்லை
இம்மடல் கண்டேனும்
பதில் ஒன்று போட்டுவிடுங்களம்மா.

பாசத்துடன்:
குடும்பத்தினர்.

தாமோதரம்பிள்ளை வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் எனும் இரங்கு



புத்தம் புதுத் துணி உடுத்தி இருந்தால் சின்னக் குழந்தைகள் மிகவும் சந்தோசமாக இருப்பர். அது மட்டுமல்ல... சில குழந்தைகள் அந்தத் துணி அழுக்குப் படக் கூடாது என்று கவனமாகக் கூட நடந்து கொள்வர். முதல் முறை அழுக்கு அல்லது கறை துணியில் பட்டுவிட்டால் முகம் சுருங்கி விடும். கவலையாகி விடும். ஆனால் இரண்டாவது, மூன்றாவது முறை அழுக்குப் பட்டால் பெரிதாக அலட்டிக் கொள்ளாது பழகப் பழக அழுக்கு என்கிற அவமான உணர்ச்சி அற்றுப் போய் விடும்.

மனசும் அப்படித்தான். முதல் முறை தவறு பண்ணப் பயப்படும். தவறு பண்ணக் கூடாது என்று படபடக்கும், முகம் வியர்க்கும். யாருக்காவது தெரிந்து விடுமோ என்று அவமானத்தால் கூச்சம் அடையும். ஆனால், முதல்முறை தவறு நடந்துவிட்டால் அதன் பிறகு பயம், வெட்கம், குற்ற உணர்வு எல்லாம் போய் மரத்துப் போய்விடும்.

மோட்டார் சைக்கிளோ, காரோ வாங்கிப் புதுசாக ஓட்டும் போது முதல் முறை இடித்தால் மிக மிகக் கஷ்டமாக இருக்கும். கொஞ்சநாள் ஆகிவிட்டால், சில தடவை வண்டி அடிபட்டுவிட்டால் வருத்தப்படுகிற இயல்பு மரத்துப் போய்விடும். வாழ்க்கையும் அப்படித் தான். கெட்டுப் போகிற முதல் விபத்து நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு தடவை கெட்டுப்போய் விட்டால் அடுத்த தப்பு செய்யத் தயக்கம் வராது. வெட்கம் இல்லாமல் நிறையத் தப்பு செய்வோம். எனவே முதலில் தவறு செய்துவிட்டு வாழ்க்கையில் பிறகு திருத்திக் கொள்வோம் என்று இளைஞர்கள் முடிவு செய்யக் கூடாது. முதல் தவறே உங்கள் முடிவுக்குக் காரணம் ஆகிவிட்டால் பிறகு எப்படித் திருத்திக் கொள்ள முடியும்?

வாரியார் சுவாமிகள் சின்னப் பையனாக இருந்த போது நடந்த நிகழ்ச்சி.. அவரே சொல்ல நான் கேட்ட நிகழ்ச்சி.... அவரது தாயார் புதுத்துணி [ வேட்டி தான் எல்லோருக்கும் ] கொடுத்ததும் உடுத்திக் கொண்டு போய் அம்மா முன் நின்றார். "உட்கார்" என்று அம்மா சொன்னதும் வேட்டியை வழித்து இடுப்புக்கு மேலே உயர்த்திக் கொண்டு தரையில் உட்கார்ந்தார். அம்மா சிரித்துக் கொண்டு.. 'இதென்ன.. கெட்ட பழக்கம்.... வேட்டியை வழித்துக் கொண்டு வெறும் உடம்போடா உட்காருவார்கள். வேட்டியை இறக்கி விட்டு விட்டு உட்கார்" என்றார்.

ம்ஹூம்.. வேட்டி அழுக்காப் போயிடும்.. புதுசு வீணாப் போயிடும்" என்றான் சிறுவன் கிருபானந்தவாரி. "வேட்டி புதுசு அழுக்காகக் கூடாது என்று நினைக்கிறியே.. மனசு அழுக்காகக் கூடாதுன்னு தெரியுமா? மனசிலே பொய், பொறாமை அழுக்குப் படியாமல் பாத்துக்க" என்று தாய் சொல்ல,வாரியார் சுவாமிகள் இளைய மனத்தில் அது ஆழமாய்ப் பதிந்து விட்டது. தூய்மையான வாழ்க்கை தாம் வாழ்ந்தமைக்கு அம்மாவின் அறிவுரைதான் காரணம் என்பார் வாரியார் சுவாமிகள்.

வீடு குப்பையாகி விட்டால் விளக்குமாறு வைத்துப் பெருக்கி விடுவோம். கூரை ஓட்டடையானால் ஓட்டடைக் குச்சியை வைத்துச் சுத்தம் செய்வோம். மனசெல்லாம் ஓட்டடை... சிலந்தி வலை... தெருப்புழுதி மாதிரி கலாசாரக்குப்பை.. ஆபாசமான ஆசா பாசங்கள்... மனசை எப்படி ஓட்டடை துடைப்பது, எந்தத் தண்ணீர் விட்டுக் கழுவுவது?

இதயத்தில் படிந்துள்ள குப்பையைப் பெருக்கித் தள்ள வழி சொல்லட்டுமா? விளக்குமாறு எடுத்து உங்கள் கையில் தரட்டுமா? நமது மூச்சுக் காற்றை நன்கு கவனியுங்கள். நாம் ஆசைப்படுகிற போது காம உணர்ச்சி அடைகிறபோது வெப்பமாக வரும். கோபப்படுகிற போது தஸ்... புஸ்... என்று விட்டு விட்டு அறுந்து அறுந்து வரும். பசி வந்தால் மெல்லிய நூல் இழை மாதிரி வரும்.

அதாவது உணர்ச்சி வயப்படுகிற போதெல்லாம் சுவாசக் காற்று குழம்பித் தாறுமாறாக வந்து போகும். மனம் அமைதியாகிற போது சுவாசம் ஒரே சீராக வரும். நமது சித்தர்கள், மகான்கள் இந்த நுட்பத்தை உணர்ந்து ஒரு வழி கண்டார்கள். மனசை அடக்க வேண்டும் என்றால் சுவாசத்தை ஒழுங்குபடுத்த வேண்டும் என்கிற அதி ரகசியமான வித்தையை உணர்ந்தார்கள். இதைக் கொண்டு, சுவாசக் காற்றை ஒழுங்கு படுத்துவதன் மூலம் மனதை ஒழுங்குபடுத்த முடியும் என்கிற எதிர்மறை உண்மையைக் கண்டார்கள்.

தவறு செய்தபின் தண்டிப்பதால் பயன் இல்லை! செய்யாதபடி கண்டிப்பதும் ஒடுக்குவதும் முக்கியம். மனம் ஒரு பேய்க் குரங்கு. அதனால் தான் மகான்கள் அடிக்கடி அதனைக் கண்டித்து ஒடுக்கி உயர்ந்தார்கள். தவறு செய்யாதபடியே மனசைப் பாதுகாத்துக் கண்டித்து வைத்தனர். மனசை வசப்படுத்தினால் மனிதன் தெய்வமாக முடியும் என்பது பெரியோர்களின் அனுபவம்... நாமும் முயற்சி செய்யலாமே!★

நன்றி:- சுகிசிவம்.

# இருவகை மன்னர்கள்



ஒரு ராஜா இருந்தார். அவரும் அவருடன் இன்னொருத்தரும் குதிரை மேலே ஏறி நாட்டின் எல்லைப்புறத்தை சுற்றிப் பார்த்துவிட்டு வருவோம் என புறப்பட்டார்கள்.

குதிரைகள் களைத்துப் போய்விட்டன அதனாலே ஒரு குளத்து ஓரமாக நிறுத்தி தண்ணீர் காட்டினார்கள்.

அந்த குளத்துக்கு அருகே ஒரு குடிசை அந்தக்குடிசைக்குள் ஒரு பெண் அழுகிற சத்தம் கேட்டது.

உள்ளே போய்ப் பார்த்தால் அந்தப் பெண் தூக்கில் தொங்குவதற்காக கயிற்றை கட்டிக் கொண்டு இருந்தது. ராஜாவுடன் கூட இருந்தவர் உடனே ஓடிப்போய் கயிற்றை வெட்டி விட்டு. "ஏனம்மா இப்படி ஒரு முடிவுக்கு வந்தாய்?" என்று கேட்டார்!

"என் மானத்தைக் காப்பாற்றுவதற்காகத்தான் இப்படிச் செய்தேன்!" என்றாள் அந்தப் பெண்!.

"உனக்கு அப்படி ஒரு நிலைமை வராதம்மா! ஏனெனில் இப்பொழுதுள்ள எம் அரசர் மிக நல்லவர். அது மட்டுமல்ல! மிகத் திறமையான ஒருவர் எமது படைகளுக்கு தளபதியாக இருக்கிறார். அதனால் உனக்கு ஒரு கஷ்டமும் வராது? தைரியமாக இரு!" என்றார்.

"அப்படி இல்லை! எனக்கு கஷ்டம் கொடுப்பதே நீங்கள் சொல்லும் அந்தத் தளபதி தான்" என்றாள் அப்பெண் இதை வெளியே நின்று கேட்ட ராசா கையும் களவுமாக தளபதியை பிடித்தார். பின், "தளபதியே! என் ஆட்சியிலே அதிகாரிகளே இவ்வாறு நடப்பதை என்னால் சகிக்க முடியாது. இந்த நிமிடமே உன்னை வேலையால் இருந்து நீக்குகிறேன் இந்த நாட்டின் எல்லையிலிருந்து உடனே வெளியேறு!" என உத்தரவிட்டார். பக்கத்தில் இருந்தவர் "மன்னா! இந்த தளபதி நல்ல திறமைசாலி. அப்படிப்பட்டவரை இழப்பது நல்லதில்லை! யோசியுங்கள்" என்றவுடன், மன்னன்" நீ சொல்வதும் சரி! இருந்தாலும் இந்த தளபதியை இழந்தால் நல்ல தளபதியை கண்டு பிடிக்கலாம்! ஆனால் ஒரு பெண்ணுக்கு அநீதி வந்தால் அதற்குப் பிறகு நமது புகழ் என்னத்திற்கு ஆகும்?" என்றார். அப்படிப்பட்ட ராஜாதான் வீர சிவாஜி.

இப்படிப்பட்ட மன்னர்களும், இதற்கு மாறான மன்னர்களும் உள்ளனர். அப்படியான ஒரு மன்னரும் இருந்தார். அவரைப் பற்றிய கதையும் ஒன்றுண்டு. ஒரு அரசருக்கு சிந்திக்கும் திறன் மிக குறைவு. ஒருமுறை அவருக்கு வருத்தம் வந்து அரண்மனை வைத்தியரை கூப்பிட்டு "இதற்கு என்ன செய்யலாம்?" என்றார். அதற்கு வைத்தியர் "பொடுதலையை வைத்து கட்டினால் சரியாய் பேய்விடும்!" என்றார். வைத்தியர் போனபிறகு "அது சரி பொடுதலை என்றால் என்ன?" என்று புலவரிடம் ராசா விசாரிக்க, அதற்குப் புலவர் "முடி இல்லாததலை" என்றார்.

உடனே ராசா தளபதியை கூப்பிட்டு "எமது நாட்டிலே முடியில்லாத ஒருவனை கூட்டிக்கொண்டு வா!" என்று உத்தரவிட்டதும், அப்பாவியான ஒருவனை தளபதி அழைத்து வந்தார். "என்னை எதற்காக அரண்மனைக்கு அழைத்துச் செல்கிறீர்கள்?" என்றான் அந்த மனிதன். "ராஜாவுக்கு காலில் அக்கி அதற்கு பொடுதலையை வைத்து கட்ட வேண்டுமென வைத்தியர் சொல்லி விட்டார். அதுதான் உன்னை அழைத்துப் போகிறேன்! உன் தலையைத் தான் வைத்துக் கட்டப்போகிறோம்" என்றான். அந்த மனிதன் அதிர்ச்சியடைந்து "இவ் வைத்தியத்தைச் சொன்ன அரண்மனை வைத்தியரின் வீடு எங்கே உள்ளது?" என்றான். "அதோ! தெரியுது பார்!" என்றான் தளபதி. உடனே அம்மனிதன் அந்த வீட்டைப் பார்த்து கீழே விழுந்து நமஸ்காரம் பண்ணினான். அங்கிருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை! "ஏன் இப்படிச் செய்கிறாய்?" என்றனர். உடனே அந்த மனிதன் "நான் உயிரோடு இருக்க அந்த வைத்தியர் தான் காரணம்? அது தான் கும்பிட்டேன்!" என்றான். "எப்படி? என்றனர் அனைவரும்.

"நல்ல வேளை! அவ் வைத்தியர் எமது ராஜாவிடம் பொடுதலையை வைத்து கட்டுங்கள் என்று மட்டும் சொன்னார். பொடுதலையை நசுக்கி வைத்து கட்டுங்கள் என்று சொல்லியிருந்தால் என் கதி என்ன?" என்றான்.

- நன்றி:- தென்கச்சி கோ.சுவாமிநாதன்.

# பொன் மொழிகள்

1) மனித உதடுகள் ஒவ்வொரு சொல்லும் இறை உலகில் எதிரொலிக்கின்றன.
-அடலெயிட் அன் புறக்டர்.

2) திருப்தி இயற்கையான செல்வம்.சொகுசான வாழ்வு செயற்கையான வறுமை.
- ஓர் அறிஞர்.

3) பெரிய கொடையேயாகிலும் அன்பின்றிக் கொடுத்தால் கொடையாகாது.
- ஷேக்ஸ்பியர்.

4) நாம் காலத்தைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்த வேண்டும். அதேவேளை நல்ல காரியத்தை செய்வதற்குக் காலம் எப்பொழுதுமே கனிந்து தான் இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.
- நெல்சன் மண்டேலா.

5) ஆராய்ந்தறிவதும் சிந்தனை செய்வதும் நம்முடைய உரிமை மட்டுமல்ல. உயர்ந்த கடமைகூட. அறிவாளியின் நோக்கம் இன்பத்தை அடைவது அன்று துன்பத்தைத் தவிர்ப்பதற்காகவே இருக்கும்.
- அரிஸ்டோட்டில்.

6) மக்கள் சமுதாயத்தில் ஐந்தில் ஒரு பிரிவினர் எல்லாவற்றையும் எல்லா சமயங்களிலும் எதிர்பார்ப்பவர்களாகவே இருக்கிறார்கள்.
[illegible]

7) துக்கத்தை அடக்காதே; மொழிந்து விடு. இல்லையெனில் அது இதயத்தை உடைத்துவிடச் செய்யும்.
- ஷேக்ஸ்பியர்.

8) எத்தனை இடையூறுகள் வந்தாலும் எடுத்த காரியத்தை செய்து முடி. தற்புகழ்ச்சி எப்பொழுது முற்றுப் பெறுகிறதோ அப்பொழுதே பெருந்தன்மை வெளிப்படத் தொடங்குகிறது.
- யங்.

9) அளவுக்கு மீறிய செல்வமோ அல்லது வறுமையோ மனிதர்களை ஒழுக்கம் கெட்டவர்களாகவும் திறமையற்றவர்களாவும் செய்து விடுகிறது.
- பிளேட்டோ.

10) தவறிழைப்பதற்கான சுதந்திரமும் உள்ளடக்கப்படாத விடத்து சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதனால் பிரயோசனமில்லை.
- மகாத்மா காந்தி.

11) தன் அறிவை மறைக்க தெரியாதவன் முட்டாள். - பெஞ்சமின் பிராங்கிளின்.

12) நம்பிக்கையென்பது கும்மிருட்டில் குதிப்பது அல்ல. இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு இறக்கை விரிப்பது.
- டேவிநீரிட்.

13) சிந்திப்பது பார்ப்பதனால் மட்டும் சிறந்த எண்ணங்கள் உதித்து விடுவதில்லை. மனம் மட்டும் ஒழுங்காயிருந்தால் போதும் நல்ல எண்ணங்கள் தானாய் உதிர்ந்துவிடும்.
- கதே.

14) வாழ்க்கையின் பேரின்பத்தையும் அற்புத சுவையையும் அனுபவிக்கும் இரகசியம் ஆபத்தான வாழ்க்கையை எதிர்கொள்வதே. - பிரிட்ரிச் வில் ஹெம்ரிட்சே.

15) காலையில் வேளைக்கு விழித்தெழுவாயாக. அதில் புனிதத்துவம் ஆரோக்கியம் மற்றும் இன்பம் ஆகிய மூன்றும் அடங்கியிருக்கின்றன.
[illegible]

தொகுப்பு:- பு.தட்சிகா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களால் நிறைவேற்றப்படும் பிதிர் வழிபாட்டுக்கு உகந்த ஆடி அமாவாசை தினம் – இன்று

சூரிய சந்திரர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியில் சஞ்சரிக்கும் புனிதமான நாள் அமாவாசையாகும். அத்துடன் தேவர்களும் அமாவாசையின் அதிபர்களாக உள்ளனர். பூமியில் உள்ளவர்களைப் பொறுத்த மட்டில் ஒவ்வொரு அமாவாசையும்

**இன்று இந்துக்களின் முக்கிய விரதங்களில் ஒன்றான ஆடி அமாவாசை தினமாகும் - இதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

பிதிர்க் கருமத்துக்கு அதாவது தென்புலத்தார் வழிபாட்டுக்கு மிக உகந்த நாள். சூரிய மண்டலத்துக்கு அப்பால் தென்மண்டலத்தில் பிதிர்கள் உறையும் பிதிர் லோகம் உள்ளது. பிதிர்களைத் தென்புலத்தார் என்று அழைப்பது தமிழர்கள் மரபு. தென்புலத்தார் வழிபாடுகளாகிய எள்ளும் தண்ணீரும் இறைத்தல், பிண்டம் போடுதல் என்பவை பழந்தமிழர்களால் கடைப்பிடிக்கப் பட்டு வந்தவை.

அமாவாசையில் விரதம் இருந்து இந்தக் கருமங்களை ஆற்ற வேண்டும்.

ஆடி அமாவாசை பிதிர்க்கருமங்களுக்கு மிகவும் உகந்தது என்றும் பிதிர் வழிபாடு செய்ய வேண்டியவர்கள் தவறாது ஆடி அமாவாசையன்று செய்ய வேண்டும் என்றும் நூல்கள் எடுத்துரைக்கின்றன. பிதிர்த்தர்ப்பணத்துக்கு மிகவும் ஏற்றது ஆடி அமாவாசை என்பது இந்துக்களின் கொள்கை.

ஆடிஅமாவாசைத் தினத்தில் கடல், நதி, வாவி போன்ற தீர்த்தங்களில் நீராடினால் பழைய வினைகள் ஆறும் என்றும் பாவங்கள் நீங்கும் என்றும் கூறுவர். தீர்த்தங்களை இறைவனின் அருள் செறிந்த நீராக நினைந்து முன்னோர்களான பிதிர்களை எண்ணி அவர்களின் பாவங்களைப் போக்கி அவர்களுக்கு முக்தியளிக்கும்படி இறைவனை வேண்டித் தீர்த்தமாடுதல் வேண்டும்.

மதுரகவி.காரை. எம்.பி. அருளானந்தன்

அமாவாசை, பௌர்ணமித் தினங்களில் கடல் பொங்கியெழும் நிலை உண்டு. இவ்வாறே இந்தத் தினங்களில் மனிதமன உணர்வுகளிலும் மாறுதல்கள் நிகழ்வதாகக் கூறப்படுகின்றது. மானிடரின் ஆத்மீக வலுவும் குன்றும் காலமாக இந்தத் தினங்கள் உள்ளன. எனவேதான் அமாவாசை போன்ற கனத்த நாள்கள் மிக அவதானமாகக் கழிக்கப்பட வேண்டும் என்றும் இந்த நாள்களில் வேறு காரியங்களைச் செய்யாதும், மனங்களைப் புலன்கள் வழிச் செல்லவிடாது பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் ஆன்றோர்கள் கூறி வைத்தனர். இந்தத் தினங்களில் இறை வழிபாடு, பிதிர்வழிபாடு என்பனவற்றைச் செய்து நல்ல பயனைப் பெறுவதே முறையாகும்.

ஆடி அமாவாசையில் தீர்த்தமாடுதல், பிதிர் வழிபாடு செய்தல், தர்ப்பணம், பிண்டதானம் நிறைவேற்றுதல் என்பவை ஆண்டுதோறும் கீரிமலை நகுலேஸ்வரத்திலும், மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கத்திலும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இவ்வாறு வேறு பல சிவத் தலங்களிலும் இந்த நிகழ்ச்சிகள் இடம் பெற்று வருகின்றன. நாங்கள் நோயின்றிச் சுகமாக வாழவும் சகல செல்வங்களையும் பெற்று இனிதாக வாழவும் தெய்வங்களை ஆராதிக்கின்றோம். இதற்குப் பிதிர்களையும் திருப்தி செய்து மகிழ்விக்க வேண்டும்.

இவற்றுக்குரிய விதி முறைகளையெல்லாம் நமது முன்னோர்கள் எழுதி வைத்துள்ளனர். பராசர், மனு, விருதா போன்ற இருடிகள் எழுதி வைத்தவைகள் யாவும் சேர்த்து தர்ம சாஸ்திர நிபந்தமை எனும் சிறந்த நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

தட்சணாயனம் தொடங்கும் மாதம் ஆடி என்பதால் பிதிர்க்காரியங்களுக்கு ஆடி மாதம் சிறப்பானது எனக் கொள்ளப்படுகிறது. ஆடிமாதத்தில் வருகின்ற அமாவாசைத் திதி பிதிர் வழிபாட்டுக்குப் புண்ணியமான தினம் எனச் சாஸ்திர நூல்கள் கூறுகின்றன. இத்தகு புண்ணிய காலமாக இன்று இந்துக்களால் தமிழ் மக்கள் வாழும் பிரதேசமெங்கும் பிதிர்க்கடன் நிறைவேற்றி ஆடி அமாவாசை விரதம் நிறைவேற்றப்படுகின்றது. வடபுலத்திலே ஈழத்தமிழ் மக்களின் பூர்வீக வரலாற்றுப் பெருமைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் நகுலேஸ்வரத்தில் கீரிமலை எனும் புனித கங்கையில் பல்லாயிரக் கணக்கான இந்துக்கள் பிதிர்க்கடன் நிறைவேற்றுவர்.


## உதவி முகாமையாளர் தேவை

நிதி நிறுவனம் ஒன்றுக்கான உதவி முகாமையாளர் தேவை.

தராதரம்:

* G.C.E. A/L சித்தியடைந்தவராக இருத்தல்.
* சிங்களம், ஆங்கிலம் கதைக்கக் கூடியவராக இருத்தல்.

நேர்முகப் பரீட்சை:
நாளை (10.08.2010) செவ்வாய்க்கிழமை
மு.ப. 10.30 - பி.ப. 5 (நேரடியாகச் சமுகம் தரவும்)

தொடர்புகளுக்கு:
**Kalutota Financial Service Pvt Ltd.**
88, Hospital Road, Martin lane, Jaffna.
T.P.: 0777710585 (101557)


## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி முத்தையா (அப்பா)

(முகாமையாளர், ஈஸ்வரபகவான் அன் கம்பனி)



நயினாதீவு, 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி முத்தையா 06.08.2010 வெள்ளிக்கிழமை இறைபதம டைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும் முருகேசு - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் சண்முகவடிவு, கற்பக வடிவு, கிருஷ்ண வடிவு, மரகதவடிவு, திருச்செல்வம், தனலஷ்மி ஆகியோரின் பாசமிகு தந்தையும் வீ.ஆர்.கே. இரத்தினசபாபதி (ஜே.பி), சிவானந்தராஜா, அன்னலிங்கம், சுரேந்திரராஜா, சத்தியேஸ்வரி, ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்பு மாமனும் ஓம்சக்தி, யசோதன், ஆதித்தன், ஆதிசக்தி, சிவசக்தி, சுதாகரன், மணிகண்டன், ஞானசக்தி, விஜிதா, கோகு லன், தர்ஷன், விஜயன், மயூரன், பிரியதர்சினி, திபாகரன், மதுரவாணி, காந்தரூபன், சாந்தரூபன், கோமேசன், மேரிசுமா, பிரவீனா, வராகி, வாசுகி, விபூஷன், சாள்ஸ் நிக்ஷன், டெய்சி ஆகியோரின் அன்புப் பேரனும் நிலாந்தி, புராதனி, பிரணவிகா, சஞ்ஜய், ரிவா ஷினி ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.08.2010) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

532/1, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி, 021 222 5919 (101685)

தகவல் :
குடும்பத்தினர்.

### திருமதி சுப்பிரமணியம் பொன்னம்மா



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் சிங்கப்பூரை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்மா 07.08.2010 சனிக்கிழமை சிங்கப்பூரில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லப்பா சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காந்தரூபன், மோகனரூபன், சாந்தாதேவி ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான இராசம்மா (சிங்கப்பூர்), பண்டிதர் ஆறுமுகம் மற்றும் இராமசாமி, மனோன்மணி, பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.08.2010) ஞாயிற்றுக்கிழமை சிங்கப்பூரில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
சகோதரர் - அ.இராமசாமி
(பண்ணாகம்).
(101704)

## மாற்று வலுவுடையோருக்கு வாராந்தம் சிகிச்சை

யாழ்ப்பாணம்,ஓக.9

யாழ்.கொக்குவில் வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தினரால் மாற்று வலுவுடையோருக்கான சிகிச்சை நிலையம் வாரம் தோறும் புதன்கிழமைகளில் பி.ப. 1.30க்கு நடைபெற்று வருகின்றது. இதற்கான ஆரம்ப நிதியை திருநெல்வேலி கனேடியன் சங்கம் வழங்கியுள்ளது.

இச்சிகிச்சை இலவசமாக வழங்கப்பட்டு வருவதால் தேவைப்படுவோர் கலந்து கொண்டு பயனடையலாம் என சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (6-313)

## தேர்த்திருவிழா

வலி.வடக்கு,ஓக.9

ஊறெழு கிளாளைப்பதி பர்வதவர்த்தனி மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. மறுதினம் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (201-86)

## புனரமைப்புக்கு வீதிகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஓக.9

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் நிதி உதவியுடன் பல வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர இன்னும் சில வீதிகள் புனரமைக்கப்பட உள்ளன.

பிரதேச சபையின் நிதியுதவியுடன் பண்டத்தரிப்பு பொதுச்சந்தை உள்ளக வீதி, மதவடி, இணுவில் மற்றும் மானிப்பாயை இணைக்கும் வீதி, மானிப்பாய் ஆஸ்பத்திரி வீதி, புனித செபஸ்தியார் ஒழுங்கை, ஆனைக்கோட்டை உப அலுவலக வீதி, மானிப்பாய் பட்டின சபை வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

அத்துடன் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியத்தின் உதவியில் (சி.பி.ஜி) பண்டத்தரிப்பு உதவி அலுவலக வீதி, மானிப்பாய் கிராமிய நூலக வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன. (6-314)

## விண்ணப்பம் கோரல்

கொழும்பு,ஓக.9

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர் பதவிகளுக்கு பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய மற்றதுமாகும். மேலும் இவ்வுத்தியோகத்தர்கள் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும், 45 வயதிற்கு மேற்படாதவர்களாகவும், அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாகவும் இருத்தல் வேண்டும். அரச சேவையிலுள்ளவர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதாக அமையமாட்டாது.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பணிப்பாளர், முதியோர்களுக்கான தேசிய செயலகம், 150ஏ, எல்.எச்.பி. கட்டடம், நாவலை வீதி, நுகேகொடை என்ற விலாசத்துக்கு இந்த மாதம் 27ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு இந்தமாதம் 6ஆம் திகதி 1666ஆம் இலக்க அரசவர்த்தமானியைப் பார்வையிடவும். (60)


## கரைச்சிப் பிரதேசசபை கிளிநொச்சி இறைச்சிக் கடைகளை ஏலத்தில் விடுதல்

கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட கீழ்வரும் பொதுச் சந்தைகளில் இறைச்சிக் கடைகள் 16.08.2010ஆம் திகதி மு.ப. 10 மணிக்குப் பிரதேசசபைத் தலைமையகத்தில் ஏலத்தில் விடப்படவுள்ளன. இந்தப் பகிரங்க ஏலத்தில் ஈடுபடவிரும்புவோர் தங்களைப் பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

சந்தைகளும் வழங்கப்பட உள்ள இறைச்சிக் குத்தகைகளும்

| சந்தைகள் | இறைச்சி வகை |
|---|---|
| *வட்டக்கச்சி | கோழி இறைச்சி |
| *இராமநாதபுரம் | மாட்டிறைச்சி |
| | கோழி இறைச்சி |
| | ஆட்டிறைச்சி |
| *பரந்தன் | மாட்டிறைச்சி |
| | ஆட்டிறைச்சி |
| | கோழி இறைச்சி |
| *முரசுமோட்டை | மாட்டிறைச்சி |
| | ஆட்டிறைச்சி |
| | கோழி இறைச்சி |
| *தர்மபுரம் | ஆட்டிறைச்சி |
| *விசுவமடு | ஆட்டிறைச்சி |
| | கோழிஇறைச்சி |
| *கல்லாறு | மாட்டிறைச்சி |
| | ஆட்டிறைச்சி |
| | கோழிஇறைச்சி |
| *கண்டாவளை | மாட்டிறைச்சி |
| | ஆட்டிறைச்சி |
| | கோழிஇறைச்சி |

நிபந்தனைகள்

1. விற்பனை செய்யப்படும் இடம் சித்தி பெற்றவராலேயே அமைக்கப்படுதல் வேண்டும்.
2. கேள்விப்பணம் ரூபா 250.00 ஆகும். இப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
3. சுகாதார, சுற்றாடல், சமூக, பிரதேசசபைச் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப விற்பனை நிலையம் அமைக்கப்பட வேண்டும்.
4. வைப்புப்பணமாக ரூபா 5000.00 செலுத்துதல் வேண்டும். இப்பணம் சேவை முடிந்ததும் மீளளிக்கப்படும்.

பொன்.நித்தியானந்தம், சிறப்பு ஆணையாளர்.

(சி/569712)


## நினைவலைகள்



அமரர்
சின்னக்குட்டியர் தம்பிப்பிள்ளை

தோற்றம்
21★04★1924

மறைவு
27★03★2009

"மறுபிறவி மானுட உண்மையெனில் மறுபடியும் பிறந்திடுங்கள் எங்கள் உறவாய்"

கண்டி வீதி,
மீசாலை மேற்கு,
மீசாலை.

(101696)

தகவல்:
T.லட்சுமிகாந்தன் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தூய ஒளி வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் கால் இறுதியாட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும், குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகமும் ஆக்ரோஷமாக ஆர்வத்துடன் மோதிக் கொள்வதையும் பார்வையாளர்கள் ஆர்வத்துடன் போட்டியை ரசிப்பதையும் படங்களில் காணலாம். (படம்: தமிழினியன்)

# வவுனியா நகரசபை மைதானத்தின் குறைகள் களையப்பட்டு நவீன வசதிகளுடன் துரிதமாகப் புனரமைக்கப்படும்

## ஆளுநர் நடவடிக்கை

வலி.வடக்கு,ஓக.9

வவுனியா நகரசபை மைதானத்தை பல்வேறு வசதிகளும் கொண்ட நவீன மைதானமாக மாற்றி அமைக்க வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி துரித நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளின் பரிசளிப்பு நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டபோதே ஆளுநர் இது குறித்த அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் நகரத்தை மையப்படுத்திய மைதானமாக நகரசபை மைதானமே காணப்படுகின்றது.

ஏராளமான குறைபாடுகளுடன் விளங்கும் இம்மைதானம் வவுனியாவுக்கு மட்டுமின்றி வடமாகாணத்துக்கே முக்கியமான மைதானமாக இருக்கின்ற நிலையிலும் போதிய அடிப்படை வசதிகள் அற்றதாகவே இது காணப்படுகின்றது.

இத்தகைய குறைபாடுகள் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து வவுனியா நகரசபை மைதானத்தை அபிவிருத்தி செய்ய அனைத்து உதவிகளையும் வழங்குவதாக ஆளுநர் உறுதியளித்துள்ளார். (எ-86)

# வடமாகாண மட்ட விளையாட்டுத்துறைச் சாதனைகள் பதிவு செய்யப்படவுள்ளன

வலி.வடக்கு,ஓக.9

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளின் சாதனைகள் இந்த வருடம் முதல் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த நான்கு வருடங்களின் பின்னர் இந்தச் சாதனைப் பட்டியல்கள் முதல் தடவையாகப் பதிவுகளுக்கு உள்ளாக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு மாகாண சபை கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் வடக்கு மாகாணம் கிழக்கு மாகாணம் எனத் தனித்தனி மாகாணங்களாகப் பிரிக்கப் பட்ட நிலையில் வட மாகாணத்துக்கான புதிய சாதனைப் பட்டியல் பதிவு செய்யப் பட வேண்டிய நிலைமை காணப்பட்டது.

நான்கு வருடங்கள் கழிந்த நிலையில் நடைபெற்ற மூன்று போட்டிகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் இந்தச் சாதனைகளைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

2007,2008, 2010 ஆம் ஆண்டுகளை அடிப்படை ஆண்டுகளாகத் கொண்டு பெறுபேறுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு சாதனைப் பட்டியல் பதிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்தப் பதிவுகளின் அடிப்படையில் எதிர்காலச் சாதனைகள் பதிவுகளுக்கு உள்ளாக்கப்படவுள்ளதாக வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை தெரிவித்துள்ளார். (எ-86)

# மட்டுவில் வளர்மதியில் கரப்பந்தாட்டம்; ஆவரங்கால் இந்து இறுதியாட்டத்திற்குத் தகுதி

யாழ்ப்பாணம்,ஓக.9

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் 45 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்திவரும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் அரை இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

கடந்த புதன்கிழமை மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்ற ஆட்டத்தில் அச்சுவேலி விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதியது.

5 செற்களைக் கொண்ட போட்டியாக இடம் பெற்ற ஆட்டத்தில் அச்சுவேலி விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழக அணியை 3:1 என்ற செற்கணக்கில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி வெற்றி கொண்டது. (6-23-288)

# குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# படையினர் - பொதுமக்கள் நல்லுறவு ருவென்ரி - 20; யசிந்தன் சலஸ்ரினின் ஆட்டத்தால் சென்றலுக்கு வெற்றி

யாழ்ப்பாணம்,ஓக.9

யசிந்தன், சலஸ்ரின் ஆகியோரது சிறப்பான துடுப்பாட்டத்தால் யூனியன் விளையாட்டுக்கழக அணியை இலகுவாக வெற்றி கொண்டது யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம்.

பாதுகாப்புப் படைதலைமையகமும் யாழ்.மாவட்டத் துடுப்பாட்டச் சங்கமும் இணைந்து நடத்தும் பொது மக்கள் - படையினர் நல்லுறவு வெற்றிக் கிண்ணத்திற்கான ருவென்ரி -20 கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த வாரம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றல் அணியினர் 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 177 ஓட்டங்களைப் பெற்றது. இதில் யசிந்தன் 45 ஓட்டங்களையும், சலஸ்ரின் 38 ஓட்டங்களையும், றஜீவ் 16 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் யூனியன் அணி வீரர்களான யோகராஜ் 4 ஓவர்கள் பந்து வீசி 28 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், பானுஷன் 4 ஓவர்கள் பந்து வீசி 27 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். 178 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனக் களம் இறங்கிய யூனியன் விளையாட்டுக்கழக அணியினர் 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 97 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் தர்சன் 20 ஓட்டங்களையும், தயான் 19 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் சென்றல் விளையாட்டுக்கழக அணி வீரர்களை சலஸ்ரின் 3 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், கலிஸ்ரன் 3 ஓவர்கள் பந்து வீசி 10 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.9

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் நடத்தும் தூய ஒளி வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் மூன்றாவது இடத்துக்கான ஆட்டம் இன்று திங்கள் கிழமை பி.ப. 4.30 மணியளவில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் பங்கு கொள்ளவுள்ள அணி களின் விவரம் வருமாறு:

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் எதிர் உரும்பிராய் சென் மைக்கல் விளையாட்டுக் கழகம். (எ-23)

* * *

கைதடி முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா வினை முன்னிட்டு கைதடி, நாவற்குழி பிரதேசத்துக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையிலான 11 பேர் பங்கு கொள்ளும் 12 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை சரஸ்வதி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு: பிற்பகல் 2.30 மணி- கைதடி நவசக்தி விளையாட்டுக்கழகம் எதிர் கைதடி விநாயகர் அணி. பிற்பகல் 3.45 மணி-நாவற்குழி அம்பிகை விளையாட்டுக்கழகம் எதிர் நாவற்குழி மதிஒளி விளையாட்டுக்கழகம். (எ-23)

## நாளைய ஆட்டங்கள்

கைதடி முத்துகுமார சுவாமி மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கைதடி நாவற்குழி பிரதேசத்திற்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையேயான கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் நாளை செவ்வாய்க்கிழமை சரஸ்வதி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும்.

ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

பிற்பகல் 2.30 மணிக்கு கைதடி குமரன் (ஏ) விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழக அணிமோதவுள்ளது.

பிற்பகல் 3.45 மணிக்கு நாவற்குழி அன்னை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கைதடி பாரதி விளையாட்டுக் கழக அணி களமிறங்குகின்றது. (6-23)

# வடமாகாண விளையாட்டுப் போட்டியில் கராத்தேயில் வெற்றியீட்டிய யாழ். வீரர்கள்



ஆ.ரஞ்சித் சைலேந்திரகுமார்



ப.ஜெயந்தன்



பா.விஜயகணேஸ்



ம.வசந்தகேசன்



உ.உதயசங்கர்



இ.நீக்கிலஸ்

வவுனியா கல்வியியல் கல்லூரியில் கடந்த வாரம் நடைபெற்ற மாவட்ட செயலகங்களுக்கிடையிலான மாகாணமட்ட விளையாட்டு போட்டியில் யாழ்.மாவட்டத்தை சேர்ந்த 7 வீரர்கள் தங்கம் மற்றும் வெள்ளிப்பதக்கங்களை வென்றுள்ளனர். குமிற்றே போட்டி யில் 84 கிலோகிராம் மேல் பிரிவில் ஆ.ரஞ்சித் சைலேந்திரகுமார் இரண்டாம் இடத்தையும் (வெள்ளிப்பதக்கம்). 84 கிலோகிராம் கீழ் பிரிவில் ப.ஜெயந்தன் முதலாம் இடத்தையும் (தங்கப்பதக்கம்). 74 கிலோகிராம் கீழ்பிரிவில் பா.விஜயகணேஸ் இரண்டாமிடத்தையும் (வெள்ளிப் பதக்கம்). 67 கிலோகிராம் கீழ்பிரிவில் ம.வசந்தகேசன் முதலாம் இடத்தையும் (தங்கப்பதக்கம்). 50 கிலோகிராம் கீழ்பிரிவில் உ.உதயசங்கர் முதலாம் இடத்தையும் (தங்கப்பதக்கம்). இ.நீக்கிலஸ் இரண்டாமிடத்தையும் (வெள்ளிப்பதக்கம்). பெண்களுக்கான 50 கிலோகிராம் கீழ்பிரிவில் கே.பிரசாந்தினி முதலாம் இடத்தையும் (தங்கப்பதக்கம்) பெற்றுள்ளனர். (எ-26-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னிக்கு இடமாற்றம் பெறவிரும்பும் ஆசிரியர்க்கு

தென்மராட்சி, ஓக 9

வன்னிப் பிரதேச பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற விரும்பும் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்களை வலயக் கல்வி அலுவலக நிர்வாகப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (6-207)


**நெல்லியடியில் பற்சிகிச்சை நிலையம்**

பல் வைத்திய நிபுணரால் நவீன ரக இயந்திரங்களின் உதவியுடன் ஒவ்வொரு நாளும்


* பல் கட்டுதல்
* பல் பிடுங்குதல்
* கிளிப் போடுதல்
* பல் துப்புரவு செய்தல்
* பல் வேர் நிரப்புதல்
* பல் நிரப்புதல்

என்பன நடைபெறுகின்றன.

கஜமுகன் மெடி கெயர், ம.ம.வீதி, நெல்லியடி. தொ.பே.: 0212264875


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 19 ★ 03 ★ 1938



உதிர்வு 10 ★ 07 ★ 2010

கடந்த 10.07.2010 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கு

**அமரர் இராசையா பரராசசிங்கம்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (09.08.2010) திங்கட்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி. நுணாவில்,
அறவழி ஒழுங்கை,
சாவகச்சேரி. (101704) குடும்பத்தினர்.

## ஊர்காவற்றுறை மரியாள் ஆலய திருவிழா ஆரம்பம்

கொழும்புத்துறை, ஓக 9

ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 4.45 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6.45 மணிக்குத் திருவிழாத் திருப்பலியும், திருச்சொரூப பவனியும், ஆசீரும் இடம்பெறும். (6-135)

## நீர்வேலியில் தொடரும் வாழைக்குலைத் திருட்டு

கோப்பாய், ஓக 09

கோப்பாய், நீர்வேலிப் பிரதேச வாழைத் தோட்டங்களில் ஆங்காங்கே வாழைக் குலைத் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

சில தோட்டங்களில் ஒரே நேரத்தில் சுமார் 10-15 வாழைக்குலைகள் திருடப்படும் நிகழ்வும் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து வாழைத் தோட்டங்களிற்கு சுழற்சி முறையில் இரவு வேளைக் கண்காணிப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ள இப்பிரதேச விவசாயிகள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (6-72)

## வலி.கிழக்கில் மின்ஒளியில் விவசாயச் செய்கை

கோப்பாய், ஓக 9

வலி.கிழக்குப் பிரதேசத்தில் விவசாய முயற்சிகள் இரவு நேரத்தில் மின் ஒளியில் மேற்கொள்ளப்பட்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

விவசாய நிலங்களுக்கு மின் குமிழ்கள் பொருத்தப்பட்டு மின் ஒளியில் மண் பதப்படுத்துதல் மற்றும் நாற்றுநடுதல் நீர்ப்பாசனம் வழங்கல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போது இப்பிரதேச விவசாயிகள் இரவு பகல் பாராது சுறுசுறுப்புடன் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு தமது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-72)

## பருத்தித்துறை வைத்தியசாலையில் வெளிநோயாளர் அதிகரிப்பு

வடமராட்சி, ஓக 09

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவோர் தொகை அதிகரித்துள்ளது.

தினமும் வெளிநோயாளர் பிரிவில் இருக்கைகளுக்குப் புறம்பாக நீண்ட வரிசையில் நின்று சிகிச்சை பெறுவதற்காகப் பெருந் தொகையானோர் திரண்டு வருகின்றனர்.

சிகிச்சைக்காக வருவோரில் காய்ச்சல், கண்நோயாளர்கள் அதிகமாகக் காணப்படுகின்றனர். (6-236)

## கருத்தரங்கு நிறைவு

யாழ்ப்பாணம், ஓக 09

யாழ்ப்பாணத்திலும் சாவகச்சேரியிலும் 'கியுடெக்-கரித்தாஸ்' நிறுவனத்தினால் தோல் பொருள் மற்றும் தையல் பயிற்சிகளை நிறைவு செய்த பெண்களுக்கு தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு நடத்தப்பட்ட "வியாபார முகாமைத்துவப் பயிற்சி" என்னும் மூன்று நாள் கருத்தரங்கு கடந்த வியாழக் கிழமையுடன் நிறைவு பெற்றது.

இப்பயிற்சிக் கருத்தரங்கு கரவெட்டியில் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் அனுசரணையுடன் நடத்தப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-311)


**மஹஜன சம்பத / மஹஜன சம்பத / Mahajana Sampatha**

**06.08.2010** அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2275

வெற்றி எழுத்து: P — வெற்றி எண்கள்: 0 3 0 1 9 6

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | எண்ணிக்கை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | P 0 3 0 1 9 6 | ரூபா.16,659,888/= | பரிசு - |
| 1 பரிசுகள் | 0 3 0 1 9 6 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | 3 0 1 9 6 | ரூபா. 100,000/= | பரிசுகள் 13 |
| 3 பரிசுகள் | 0 1 9 6 | ரூபா. 10,000/= | பரிசுகள் 137 |
| 4 பரிசுகள் | 1 9 6 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1370 |
| 5 பரிசுகள் | 9 6 | ரூபா. 100/= | பரிசுகள் 13625 |
| 6 பரிசுகள் | 6 | ரூபா. 20/= | பரிசுகள் 135412 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 0 3 0 1 9 | ரூபா. 10,000/= | பரிசுகள் 16 |
| 8 பரிசுகள் | 0 3 0 1 | ரூபா. 1,000/= | பரிசுகள் 128 |
| 9 பரிசுகள் | 0 3 0 | ரூபா. 100/= | பரிசுகள் 1372 |
| 10 பரிசுகள் | 0 3 | ரூபா. 50/= | பரிசுகள் 13600 |
| 11 பரிசுகள் | P | ரூபா. 20/= | பரிசுகள் 54252 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை **Rs. 14,300,980.00**

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல் www.nlb.lk


## குடாநாட்டில் விரத 'சீஸன்'; மண்சட்டி விற்பனை அமோகம்

யாழ்.குடாநாட்டுக்குப் பெரும் எண்ணிக்கையான மண்சட்டிகள் கடந்த சில தினங்களாக எடுத்துவரப்பட்டுள்ளன.

வவுனியா பகுதியில் இருந்தே அதிகளவில் இந்த மண் சட்டிகள் எடுத்துவரப்பட்டுள்ளன என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

மண் சட்டி ஒன்று 40 ரூபா முதல் 60 ரூபா வரை விற்கப்படுகின்றது.

தமிழ் மக்கள் தமது பாரம்பரிய முறைப்படி முக்கிய விரத காலத்தில் மண்சட்டிகளைப் பயன்படுத்தியே சமையலில் ஈடுபட்டு வருவது வழமையான முறையாகும். தற்போது குடாநாட்டிலுள்ள பெரும்பாலான ஆலயங்களில் திருவிழாக்கள் இடம்பெறுவதால் அவற்றுக்கான விரதங்களை அனுஷ்டிக்கும் மக்கள் மண்சட்டிகளை அதிகளவில் கொள்வனவு செய்து வருவதாகக் கூறப்படுகின்றது. (எ-26)


**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2145 திகதி 07-08-2010

ஆங்கில எழுத்திற்கும்: K

வெற்றி எண்கள்: 03 06 46 68 — போனஸ் இல: 56

ஜக்பொட் பரிசு ரூ. 16,937,275/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 184872 | 20/- | 3,697,440/- |
| 2 இல | 13197 | 100/- | 1,319,700/- |
| 3 இல | 264 | 1,000/- | 264,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7518 | 40/- | 300,720/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 559 | 1,000/- | 559,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10 | 10,000/- | 100,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 16,937,275/- | - |
| 1 இல + போனஸ் இல | 8884 | 100/- | 888,400/- |
| 2 இல + போனஸ் இல | 410 | 500/- | 205,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 346 | 200/- | 69,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 20 | 1,500/- | 30,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 9,833,460/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 216096 | | 10,433,460/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| களுத்துறை | 302193998-4-00 |
| யாழ்ப்பாணம் | 302205609-5-17 |
| கம்பஹா | 302199162-0-16 |
| மாத்தளை | 302191694-6-47 |
| அனுராதபுரம் | 302197221-7-46 |
| கொழும்பு | 302204779-2-44 |
| பொலன்னறுவை | 302197282-7-12 |
| புத்தளம் | 302185652-1-18 |
| கண்டி | 302187711-9-36 |
| திருகோணமலை | 302188477-8-08 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு **ரூ. 17,442,125/-**

ஜதா நிற டிக்கட்டுகள் 2010 ஓகஸ்ட் 11 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 ★ 11 ★ 1927



உதிர்வு 22 ★ 07 ★ 1998

சிவநெறிப் புரவலர், சிவதர்மவள்ளல்

**கலாநிதி க.கனகராசா ஜே.பி**

(முன்னாள் அதிபர், மில்க்வைற்)

பார்புகழ வாழ்ந்து பரமனடி சென்று
ஆண்டு பன்னிரண்டு ஆனது இன்று
நீர் நட்ட மரங்கள் எல்லாம் உமை நினைந்து அழுகையிலே
நாம் மட்டும் உமை மறந்து எப்படி வாழ்ந்திடலாம்.

மில்க்வைற் இல்லம்,
யாழ்ப்பாணம். (101702)

இ.விஜயகோபால்,
மில்க்வைற் சோப் இன்டஸ்றீஸ்,
527, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவில் நிர்வாகம் சிதைந்து சீர்குலைந்த போதும் சிறப்பான சேவையினைத் தொடர்ந்த யாழ்.மாநகரசபை


யாழ்.மாநகரசபையின் முன்னைய தோற்றம்

மாநகரசபையின் நிர்வாகக் கட்டமைப்பில் பிரதிநிதியாக வர விரும்பும் எவரும் மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடுவதன் மூலம் மக்களால் தெரிவு செய்யப்படுவர். தேர்தல் சட்டத்தின்படி மாநகரசபையில் உறுப்பினராக வருவதற்கு சுயேட்சையாக தேர்தலில் போட்டியிட முடியாது. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மட்டுமே தேர்தலில் போட்டியிட முடியும். கட்சிகள் பெற்றுக்கொள்ளும் வாக்குகளின் வீதாசாரத்துக்கேற்ப தெரிவுசெய்யப்பட்டு சபைக்கு அனுப்பப்படுவர்.

மாநகர உறுப்பினரின் பதவிக் காலமானது வர்த்தமானியில் பிரசுரித்த திகதியிலிருந்து 48 மாதங்களில் முடிவடைகிறது. மாநகரசபையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட தலைவராக முதல்வர் காணப்படுவார். முதல்வர் மாநகர சபையில் சமாதான நீதவானாகவும், உத்தியோகப்பற்றற்ற நீதவானாகவும் இருத்தல் வேண்டும். திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தற்போது மாநகரசபை முதல்வராக இப்போது உள்ளார்.

முதல்வருக்கு அடுத்த படியாக அதிகாரமுள்ள நிறைவேற்று உத்தியோகத்தராக ஆணையாளர் காணப்படுவார். ஆணையாளர் பிரதம ஆலோசகராக இருந்தாலும் கூட்டங்களில் வாக்களிக்கும் உரிமை கிடையாது. யாழ். மாநகரத்தில் தற்போதைய ஆணையாளராக மு.சரவணபவ உள்ளார்.

ஆணையாளரின் கீழ் 7 செயற்பாட்டுப் பகுதிகள் இருக்கின்றன. இப்பகுதிகள் ஒவ்வொன்றுக்கும் பகுதித் தலைவர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். ஆணையாளருக்கு அடுத்த அதிகாரமுள்ளவர்களாக பகுதித் தலைவர்கள் காணப்படுவர். இவ்வாறான பகுதிகளை எடுத்து நோக்கும் பொழுது




செயலகப் பகுதி (ஆணையாளர்), கணக்குப் பகுதி (கணக் காளர் - 1); வருமானப் பகுதி (கணக்காளர் - 11), சுகாதாரப்பகுதி (சு.வை.அதிகாரி), வேலைப்பகுதி (பொறியியலாளர் -2), நூலகம்(பிரதம நூலகர்) போன்ற பகுதித் தலைவர்களும் கர்ணப்படுகின்றனர்.

அடுத்த பொறுப்புடைய பதவியில் செயலாளர் காணப்படுவார். தற்போதைய செயலாளராக இரட்ணசிங்கம் காணப்படுகிறார். இவ்வாறாக மாநகர சபையின் நிர்வாகக் கட்டமைப்பு அமைந் துள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபையானது நகர அபிவி ருத்திசபை, சூழல் அபிவிருத்திசபை போன்ற வற்றை நடைமுறைப்படுத்துவதன் மூலமே நகர முன்னேற்றத்தை முன்னெடுத்துச் செல்ல முடியும். யாழ்.நகரம் 1949-1974 இற்குட்பட்ட காலப் பகுதியில் பல முன்னேற்றங்களை கண்டிருந்தது. இருந்தும் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களால் பல இழப்புக்களைச் சந்தித்தது. இனவாதப் பசிக்கு மாநகர சபையின் எத்தனையோ சொத்துக்கள், ஆவணங்கள் பலியாகின.

அவ்வாறான ஓர் அழிப்பில் கலைவடிவமாக அமைக்கப்பட்ட கல்விப் பொக்கிஷமான நூல்நிலையம் 1981 இல் திட்டமிட்டு தீயிடப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

இதன்பின் மக்கள் பிரதிநிதிகளுடன் இயங்கிவந்த மாநகராட்சி மன்றம் 1983 இன் பிற்பாடு விஷேட ஆணையாளர்களினால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. சிவில் நிர்வாகம் சீர்குலைந்த வேளையிலும் பல இடர்பாடுகளுக்கு மத்தியில் யாழ்.மாநகரசபை தனதுசேவைகளை குறையின்றி வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் 1988-1989 காலப்பகுதியில் மாநகராட்சி மன்றக் கட்டடம் முற்றாக அழிக்கப்பட்டது. அதுமட்டும் அல்லாது திறந்த வெளியரங்கு, மணிக்கூட்டுக் கோபுரம் என்பனவும் சேதமடைந் தன.

இதில் நாம் மறந்துவிட முடியாத ஒரு விடயமாக 1990-1995 வரையான காலப்பகுதியில் சுகாதார சேவை குறிப்பாக சுகாதார வைத்திய சேவை வைத்திய கலாநிதி தெய்வேந்திரனால் வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனங்களின் பங்களிப்போடு மக்களுக்கு வழங்கப்பட்டமையைக் குறிப்பிட முடியும்.

மீண்டும் மாநகரசபை 1998 இல் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட சபையாகச் செயற்படத் தொடங்கியது. இதன்போது கருத்து வேறுபாடுகள், கொள்கை வேறுபாடுகள் இருந்தாலும் சபையில் அங்கம் வகித்த நான்கு கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் ஏகமனதாக செயற்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வந்தன.

இருந்தும் துரதிஷ்டவசமாக நிர்வாகிகளுக்கிடையே எழுந்த முரண்பாடுகள் காரணமாக பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதில் தடைகளும், தாமதங்களும் ஏற்பட்டன. நிதியுதவிகள் ஏதும் [illegible] மூலம் [illegible] நிதியின் மட்டும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாத நிலை தோன்றியது.

ஆனாலும் அரசியல் சதுரங்கப் பார்வையில் யாழ். மாநகரசபையும் விடுபடவில்லை. அரசினால் ஒதுக்கப்பட்டு வழங்கப்பட வேண்டிய நிதிகள் திட்டமிட்டு தமிழ் அரசியல்வாதிகளாலேயே தடுக்கப்பட்டது. இதனால் மாநகராட்சி மன்றத்துக்கு வேண்டிய வசதிகள், உதவிகள் வழங்காது புறக்கணிக்கப்பட்டு வந்ததென்பது உண்மையான விடயமாகும்.

தற்போது நகரத்தின் முன்னேற்றத்துக்கும், நிர்வாக வளர்ச்சிக்குமாக வெற்றிகரமாக இயங்கி வரும் யாழ். மாநகர சபையானது நல்லூர்ப் பிரதேசத்தில் இயங்கி வருகின்றது. இதன் தலைமைக் காரியாலயத்தை முன்னைய இடத்துக்கு இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள், அண்மையில் ஆரம்பமாகிவிட்டன. முன்னைய மாநகரசபைக் கட்டடம் யாழ்.நகர மத்தியில் அமைந்திருந்தது குறிப்பிடத் தக்கது.

தமிழரசி

மாநகர புதிய கட்டட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் 65 கோடி ரூபாய்க்கு மேலதிகமாக நிதி தேவைப்படு வதாகக் கூறப்படுகின்றது. யாழ்.மாநகரசபையிடம் நிதி வசதிகளுடன் வேலைத்திட்டம் ஆரம்பிக்க முடியாத நிலையில் அவ்விடயம் வெறும்


யாழ்.பொது நூலகத்தின் இத்தோற்றம், கடந்தவாரம் யாழ்.மாநகர சபையின் முன்னைய தோற்றம் எனத் தவறுதலாகப் பிரசுரமாகி இருந்தது.

சொல்லளவில் உள்ளது.

இருந்தபோதிலும் புதிய மாநகரசபை கட்ட டத்துக்கு தேவைப்படும் நிதியினை உதவி நிறுவ னங்கள் மற்றும் நலன்விரும்பிகளின் மூலம் பெற்று இனிவரும் காலங்களில் ஆரம்பிக்க முடியும் என்ற நம்பிக்கையில் மாநகரசபை வட்டாரங்கள் உள்ளன.

இவ்வாறான பல வரலாற்றுச் சின்னங்களுடன் வெற்றிகரமாக இயங்கிவரும் மாநகரசபைக்கு யாழ். மக்களாகிய நாம் கடமைப்பட்டுள்ளவராக உள்ளோம். ஏனெனில் மாநகரசபையே யாழ்.நகரத்தை சுத்தப்படுத்தி வருவதற்கு ஒரு பிரிவும், மக்களுக்கு நோய் வருவதைத் தடுப்பதற்காக சுகாதாரப்பிரிவும் மற்றும் தீயணைப்புப் பிரிவு, குடிதண்ணீர் இல்லாத பிரதேசங்களுக்கு குழாய் நீர் வசதி போன்ற பல்வேறு சேவைகளை யாழ். மாநகரசபை மக்களுக்காகச் செய்து வருகின்றது.

இவ்வாறான பல சேவைகளுடன் தொடர்ந்து யாழ்.மாநாகரசபை இயங்கி வருதல் வேண்டும். அதுமட்டுமல்லாது எந்தவொரு அரசியல் தலையீடும் தடையாக இல்லாது நகர முன்னேற்றத்துக்காக வேறுபாடுகள் இன்றி மக்களுக்காக சேவையாற்ற வேண்டும்.

"சவால்கள் தான் உங்களை உங்களுக்கும் உங்களை உலகிற்கும் அடையாளம் காட்டும்!"

*(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



உறவினர் அல்லது நண்பர் ஒருவருக்கு நல்ல யோசனை சொல்வீர்கள். விருப்பமான உணவு வகைகளை சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். உங்களுக்கு பிடித்தமான பொருள் ஒன்றை மற்றவர்கள் கொடுக்கலாம். பிறர் பாராட்டும் வகையில் எந்தக் காரியத்தையும் செய்ய நினைப்பீர்கள். உங்களை பார்த்து மற்றவர்கள் பொறாமைப் படலாம்.

### இடபம்




நீண்ட நாள்களாக தள்ளி வைத்த வெளியூர் பயணங்கள் செல்லலாம். சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். தாய் அல்லது பிள்ளைகள் வழியில் அன்புத் தொல்லைகளை சந்திக்கலாம். சில பொருள்களை ஆசைப் பட்டு வாங்கியும், அதில் திருப்தி இல்லாமல் போகலாம். எதிர்பாராதது நடக்கலாம்.

### மிதுனம்



சிறிய வேலை ஒன்றுக்கு பெரியளவில் அலட்டிக் கொள்வீர்கள். சில பிரச்சினைகளை நினைத்து அதிக பயம் கொள்வீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பழைய சம்பவங்களை அசைபோட்டுப் பார்ப்பீர்கள். உங்களுக்குத் தெரியாத தகவல் ஒன்றை மற்றவர்களைக் கேட்டு தெரிந்து கொள்வீர்கள். தலைக்கனம் தவிர்க்கவும்.

### கடகம்



சில வேலைகளுக்காக நண்பர் அல்லது உறவினர் ஒருவருடன் வெளியிடங்களுக்கு ச் செல்லலாம். பிள்ளைகள் விடயத்தில் அதிக கண்டிப்புடன் நடந்து அவர்களின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்யலாம். நொடிப் பொழுதில் முடியுமென நினைத்த வேலை ஒன்று பல மணி நேரத்திற்கு இழுத்தடிக்கலாம்.

### சிங்கம்



மனதில் நல்ல எண்ணங்கள், சிந்தனைகள் குடிகொள்ளும் நாள். நீண்ட நாட்களாக பார்க்காத நண்பர் ஒருவரைப் பார்க்கலாம். கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். வீட்டை, சீரமைப்பதில் அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். அயலார் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். ஆனந்தமான நாள்.

### கன்னி



அதிக செலவாகும் நினைத்த காரியம் ஒன்று குறைந்த செலவில் முடியும். உங்களின் செயற்பாடு ஒன்றை மற்றவர்கள் பாராட்டலாம். பெரிய மனிதர்களின் ஆசிகளைப் பெறலாம். நீண்ட நாள்களாக உங்களின் வீட்டிற்கு வராத உறவினர்கள் சிலர் வரலாம். நேற்று செய்யாமல் விட்ட வேலை ஒன்றால் இன்று அவதிகளுக்கு ஆளாகலாம். வெற்றிகரமான நாள்.

### துலாம்



நண்பர்களுக்காக அல்லது முன்பின் பார்த்திராத ஒருவருக்காக வெளியிடங்களில் காத்திருக்கலாம். உறவினர் ஒருவர் தங்களின் அனுபவம் ஒன்றை உங்களிடம் சொல்லலாம். ஒவ்வாத உணவுப் பொருட்களை அளவுக்கு அதிகமாக சாப்பிட்டு, உடல் உபாதைகளுக்கு ஆளாகலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம்.

### விருச்சிகம்



சிலர் மீது கோபம், எரிச்சல் உண்டாகலாம். நீங்கள் மலை போல் நம்பிய ஒருவர் கடைசி நேரத்தில் கைவிடலாம். மறதியால் அவதி களுக்கு ஆளாகலாம். மற்றவர்களின் விமர்சனம், கேலிப் பேச்சுக்களுக்கு ஆளாகலாம். சிறிய வேலை ஒன்றுக்காக பலமுறை அலையலாம். மனதில் இனம்புரியாத குழப்பம், பயம் ஆள்கொள்ளும்.

### தனுசு



மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். பொழுது போக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். மற்றவர்கள் கடினமாக நினைக்கும் வேலை ஒன்றை நீங்கள் எளிதாக செய்து முடிப்பீர்கள். உறவினர்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுப்பீர்கள். வரவு ஒன்றை எதிர்பார்த்து செலவு செய்வீர்கள்.

### மகரம்



மற்றவர்கள் முன்னிலையில் உங்களை பெரிய ஆளாகக் காட்டிக் கொள்ள முற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் அதிகரிக்கும். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக நீங்கள் மற்றொருவரிடம் உதவி கேட்கலாம். மதிப்பு, கௌரவம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். பெற்றோர்கள் மீதான பாசம் அதிகரிக்கும்.

### கும்பம்



முன்யோசனையுடன் செயற்படாததால், சில விடயங்களில் அவதிகளுக்கு ஆளாகலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். ஆன்மிக விடயங்களுக்காக கணிசமான தொகையைச் செலவு செய்வீர்கள். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகி விடுமோ என பயம் கொள்ளலாம். பொலிஸ் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம்.

### மீனம்



குடும்ப உறுப்பினர் ஒருவர் உங்களை புரிந்து கொள்ளாமல் செயற்படலாம். உறவினர்களுக்காக கணிசமான பணத்தை செலவு செய்யலாம். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். தூக்கமின்மையால் அவதிப்படலாம். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தம் அடைவீர்கள். புதியவர்கள் நட்புக் கிடைக்கும்.

## டெங்கு நோயை ஒழிக்க மக்களுக்கு யாழ்.பொலிஸார் துண்டுப் பிரசுரம் விநியோகம்

டெங்கு நோயை ஒழிப்பதற்கு வரணி அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதத்தில் யாழ்.பொலிஸ் பிரிவு வெளியிட்ட துண்டுப்பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது.

அண்மையில் வரணி வடக்கு கௌரிபாலன் முன்பள்ளி மண்டபத்தில் கிராம சேவகர் ஏ.பிரதீபன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் டெங்கு நோயை ஒழிப்பதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார வழிமுறைகள் பற்றி பொதுச் சுகாதார உத்தியோகத்தர் எம்.டொனால்ட் கருத்துக்களை வழங்கினார்.

கலந்துரையாடலில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தின் சார்ஜன் லான், சார்ஜன் சாந்தகுமார ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

இவர்களால் 'டெங்கு நுளம்மை முறியடிப்போம்' என்னும் தலைப்பிலான துண்டுப் பிரசுரங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டன. (6-10)

## நிவாரணக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஓக.9

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு உட்பட்ட பிரதேசங்களில் வசிப்போருக்கு இலகு வேலைத் திட்டம், சமுர்த்தி ஆகியவற்றுக்கான நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இலகு வேலைத் திட்டத்திற்காக வழங்கப்படும் நிவாரணம் சித்திரை மாதத்திற்கானது 19,703 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. வைகாசி மாதத்திற்கான நிவாரணக் கொடுப்பனவு இன்னொரு கட்டமாக வழங்கப்படவுள்ளது.

ஆனி மாதத்திற்கான சமுர்த்தி நிவாரணம் முதற்கட்டம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன்பின் 2ஆம் கட்டநிவாரணம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(6-314-318)

## கல்லூரி ஒழுங்கை விபுலானந்தர் வீதியானது

யாழ்ப்பாணம், ஓக.9

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு முன்பாக உள்ள கல்லூரி வீதி தற்போது புனரமைக்கப்பட்டு விபுலானந்தர் வீதி எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது.

இவ்வீதி மோசமான நிலையில் காணப்பட்டதனால் பயணிக்கும் மக்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். இதனால் இவ்வீதியை மானிப்பாய்ப் பிரதேச சபையினால் பதினொரு லட்சம் ரூபா நிதியுதவியுடன் புனரமைக் கப்பட்டது.

(6-314)

## மோ.சைக்கிள் சில்லு சறுக்கியதில் காயம்

தென்மராட்சி, ஓக.9

மோட்டார் சைக்கிள் சில்லு சறுக்கியதில் தூக்கி வீசப்பட்டவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் விடத்தற்பளையில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த எஸ்.புஷ்பமலர் (வயது 40) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

(6-207)

IIS இன் மனமார்ந்த வாழ்த்துக்கள்



A/L 2010 பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களை IIS மனமார வாழ்த்துகின்றது.

"கல்விப்பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்தில் ஓர் கல்விச் சாம்ராஜ்யம்"

IIS CITY CAMPUS
200 Sivan Pannai Road,
Jaffna.
T.P:-021 222 8060

INSTITUTE OF INFORMATICS STUDIES
100 Clock Tower Road,
Jaffna
T.P :-021 222 2831

உத்தியோக பூர்வ முடிவுகள் — சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 561
திகதி 2010/08/07

சுப்பர் இலக்கம்: 17
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 24 36 48 50

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 28,323,550.40 விகிதம | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 விகிதம | — |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 விகிதம | 11 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 விகிதம | 211 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 விகிதம | 443 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 விகிதம | 11,295 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 விகிதம | 6,571 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம | 163,517 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம | 26,143 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 6,600,540.00
சுப்பர் பரிசு சொகுசு ஜீப் வண்டியுடன் மீதி தொகை பணமாக

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.
பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ 28,924,905.60

தேசிய லொத்தர் சபை
இணையம்: www.nlb.lk

ஜாதிக சம்பத Jathika Sampatha
சீட்டிழுப்பு இலக்கம் - 45
திகதி - 07.08.2010
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியிட்டும் ஆங்கில எழுத்து: V
அதிர்ஷ்ட இலக்கம்: 09
வெற்றி இலக்கம்: 5 9 3 7 3

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | அதிர்ஷ்ட இலக்கம் | | | | | | தொகை | பரிசு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | V | 09 | 5 | 9 | 3 | 7 | 3 | ரூ. 15,312,168.00 | - |
| 1 பரிசு | | 09 | 5 | 9 | 3 | 7 | 3 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | | | 5 | 9 | 3 | 7 | 3 | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | | | | 9 | 3 | 7 | 3 | ரூ. 10,000.00 | 25 |
| 4 பரிசு | | | | | 3 | 7 | 3 | ரூ. 1,000.00 | 256 |
| 5 பரிசு | | | | | | 7 | 3 | ரூ. 50.00 | 2468 |
| 6 பரிசு | | | | | | | 3 | ரூ. 20.00 | 23746 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | அதிர்ஷ்ட இலக்கம் | | | | | | தொகை | பரிசு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 5 | 9 | 3 | 7 | | ரூ. 1,000.00 | 24 |
| 8 பரிசு | | | 5 | 9 | 3 | | | ரூ. 100.00 | 243 |
| 9 பரிசு | | | 5 | 9 | | | | ரூ. 50.00 | 2491 |
| 10 பரிசு | V | | | | | | | ரூ. 20.00 | 9813 |
| 11 பரிசு | V | 09 | | | | | | ரூ. 100.00 | 1136 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,887,030.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு ரூ.15,672,809.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சிப் பாடசாலைகளின் தேவைகளை மதிப்பிட நாமல் தலைமையில் குழு இன்று வருகின்றது

## நான்கு தினங்கள் தங்கி ஆராயும்

கிளிநொச்சி, ஓக.9

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குறித்த மதிப்பீடு இன்று ஆரம்பமாகிறது.

''இளைஞர்களுக்கான நாளை'' அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தலைமையில் இன்று வரும் குழுவினர் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை கிளிநொச்சியில் தங்கியிருப்பர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்பின் பேரில் வரும் இக்குழுவினர் பாடசாலைகளுக்கு நேரில் சென்று நிலைமைகளை ஆராய்வார்கள்.

குழுவினர் பார்வையிடவுள்ள பாடசாலைகளின் விவரம் வருமாறு:

**கரைச்சிக் கோட்டம்**

* இன்று- பாரதி வித்தியாலயம், சிவபாத கலையக வித்தியாலயம், கனகாம்பிகைக்குளம் அ.த.க.பா, செல்வா நகர் அ.த.க.பா, திரு வையாறு ம.வி, வட்டக்கச்சி ம.வி, அழ காபுரி வித்தியாலயம், மாயவனூர் வித்தி யாலயம், பன்னங்கண்டி இ.த.க.பா, புனித அந்தோனியார் வித்தியாலயம்.

**கண்டாவளைக் கோட்டம்**

* நாளை-பரந்தன் இந்து ம.வி, கண்டாவளை ம.வி, புன்னை நீராவி அ.த.க.பா, பிர பந்தனாறு ம.வி, உமையாள்புரம் அ.த. க.பா, கட்டைக்காடு அ.த.க.பா, கல்மடுநகர் அ.த.க.பா, இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா

**பூநகரிக் கோட்டம்**

* 11 ஆம் திகதி-பூநகரி நல்லூர் வித்தியாலயம், செல்லியாதீவு அ.த.க.பா, கறுக்காய்த்தீவு ம.வி, தண்ணாவில் அ.த.க.பா, வலைப்பாடு அ.த.க.பா, வேரவில் இந்து ம.வி, கிராஞ்சி வித்தியாலயம், முழங்காவில் ம.வி.

**பளைக் கோட்டம்**

* 12 ஆம் திகதி-பளை மத்திய கல்லூரி, பளை றோ.க. வித்தியாலயம், தர்மக்கேணி அ.த.க.பா, சோரன்பற்று சி.சி.த.க.பா, சோரன்பற்று கணேசா வித்தியாலயம், மாசார் அ.த. க.பா. (ஐ-432)

# தருமபுரம் ம.வியின் உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு சிறப்புற நடந்தது

கிளிநொச்சி, ஓக.9

கிளிநொச்சி தருமபுரம் மகா வித்தியாலயத்தின் உயர்தர மாணவர் ஒன்று கூடல் சிறப்புற நடைபெற்றது.

பாடசாலைக்கு அருகாமையில் உள்ள நெசவுசாலைக் கட்டடத்தில் நடைபெற்ற இந் நிகழ்வு பாடசாலையின் உயர்தர மாணவர் மன்ற தலைவர் செல்வி. எஸ் .டயானா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பாடசாலையின் பழைய மாணவரும் கண்டாவளைப் பிரதேச செயலக முகாமைத்திட்ட உத்தியோகத்தருமான ஸ்ரீபன் ரஞ்சித்தும் சிறப்பு விருந்தினராகக் கண்டாவளைக் கோட்டக் கல்வி அதிகாரியான வீ. இராஜகுலசிங்கமும் கலந்து கொண்டனர்.

முன்னதாக விருந்தினர்கள் மலர் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டு நிகழ்வு மண்டபத்திற்கு மாணவர்கள் மலர் தூவ அழைத்துச் செல்லப்பட்டுஅங்கு நிகழ்வுகள் நடைபெற்றன.

தலைமையுரையினைத் தொடர்ந்து மதிய போசன விருந்தளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பாடசாலையின் உயர்தர மாணவர்மன்றத்தின் வெளியீடான ''கலைச் சோலை'' நூல் கையெழுத்துச் சஞ்சிகையாக வெளியிடப்பட்டது. இதனை பாடசாலை அதிபர் ச.பூலோகராசா வெளியிட்டு வைத்தார். வெளியீட்டுரையினை மன்ற பத்திராதிபர் செல்வி செ. சோபிகா நிகழ்த்தினார்.

நிகழ்வில் உயர்தர மாணவர் மன்றப் பொறுப்பாசிரியர் திருமதி சா.நடேசபிள்ளை, இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா அதிபர் ச. புண்ணியமூர்த்தி, பாடசாலை அதிபர் ச. பூலோகராசா, பிரதம விருந்தினர் ஸ்ரீபன் ரஞ்சித், சிறப்பு விருந்தினர் வீ.இராஜகுலசிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். அத்துடன் மாணவர்களது கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. (ஐ-405)

# மன்னாரில் பாலைப்பழம் நல்ல விளைச்சல்

மன்னார் , ஓக.9

மன்னாரில் முக்கனிச் சுவை நிறைந்த பாலைக்கனிகள் அபரிமிதமாக விளைந்துள்ளன. இவை தற்போது மன்னார் சந்தைக்குப் பெருமளவு கொண்டு வரப்படுகின்றன.

பாலை மரங்களுக்குப் பேர் போனது மன்னார் மாவட்டம். மன்னார் பிரதான வீதியின் இரு மருங்கிலும் அடர்ந்த வனப்பகுதியிலும் இலட்சக்கணக்கில் இம்மரங்கள் விரிந்து பெருகியுள்ளன.

இதன் மிகவும் உறுதியான பலகைகள் நாடு முழுவதும் பிரசித்தி பெற்றவையாகும்.

அத்துடன் சத்தும் சுவையும் நிறைந்த பாலைப் பழங்கள் இங்கு மிகவும் மலிவாகக் கிடைக்கும் நான்காவது கனியாகும். ஒரு கொத்து ரூபா 30 வரை விற்பனையாகின்றது.

கிராமப்புறங்களில் வாழும் ஏழைகளின் வாழ்வாதாரத்திற்கு குறிப்பிட்ட சில காலங்களுக்கு இக்கனிகளின் விற்பனை உந்து சக்தியாகும் என பாலைக்கனி வியாபாரி ஒருவர் கூறினார். (ஐ-80)




# சாந்தபுரம் இடைத்தங்கல் முகாமில் டெங்கு நோயாளி இனங்காணப்பட்டார்

கிளிநொச்சி, ஓக.9

கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலய இடைத்தங்கல் முகாமில் டெங்கு நோயாளி ஒருவர் இனங்காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சாந்தபுரம் மக்கள் வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து ஏற்றி வரப்பட்டு கிளிநொச்சி மத்திய கல்லூரி இடைத்தங்கல் முகாமிலும், பின்னர் சாந்தபுரம் கலைமகள் வித்தியாலய இடைத்தங்கல் முகாமிலும் நீண்ட காலமாக மீள்குடியேற்றப்படாமல் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இப்பாடசாலை முகாமிலேயே டெங்கு நோயாளி ஒருவர் இனங்காணப்பட்டு அவர் தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

இதனையடுத்து சாந்தபுரம் கலைமகள் வித்தியாலய இடைத்தங்கல் முகாமில் டெங்கு நுளம்பினை அழிக்கும் மருந்துகள் விசிறப்பட்டு விழிப்புணர்வுச் செயற்பாடுகளும், சிரமதானப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ-405)

# கிளிநொச்சி ஆயுள்வேத பாதுகாப்புச் சபை புனரமைக்கப்பட்டு புதிய நிர்வாகம் பதவியேற்பு

கண்டாவளை, ஓக.9

கிளிநொச்சி மாவட்ட ஆயுள்வேத பாதுகாப்புச் சபை புனரமைப்புப் பொதுக் கூட்டம் டாக்டர் ஏ.வி.கே. திருலோகமூர்த்தி தலைமையில் கரைச்சிப் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

வடக்கு மாகாண சுதேச மருந்துத் திணைக்களத்தின் ஆயுள்வேத மாவட்ட இணைப்பாளர் டாக்டர் ப.சிவராசா கிளிநொச்சிக் கருணா நிலைய நிர்வாகி வண பிதா.நா.பிரபாகர் அடிகளார், கரைச்சிப் பிரதேச சபை செயலர் குலேந்திரன் , அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரபாகரன், மாவட்ட ஆயுள்வேத வைத்திய அதிகாரி சிவநேசன், கரைச்சிப் பிரதேசச் செயலர் சுலோஜினி, பிரதேச வைத்திய அதிகாரி பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிளி.மாவட்ட ஆயுள்வேத பாதுகாப்புச் சபையின் நடப்பு வருட நிர்வாகிகளாக டாக்டர் ஏ.வி.கே. திருலோகமூர்த்தி (தலைவர்) டாக்டர் பிரபாகரன் (செயலாளர்), எஸ். சபாரட்ணம் (பொருளாளர்), வணபிதா பிரபாகர் அடிகளார் (பிரதித் தலைவர்), டாக்டர் எஸ் சிவநேசன்( பிரதித்தலைவர்), கு. கணேசதாசன் (உபசெயலாளர்), திருமதி சித்திரா பரமேஸ்வரன் (உறுப்பினர்), அ. ஸ்ரீரங்கநாதன் ( உறுப்பினர்), அ. ராதாகிருஷ்ணன் (உறுப்பினர்), திருமதி தி.அமிர்தகௌரி ( உறுப்பினர்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-432)

# கல்விகற்ற கல்லூரியையும் பிரதேச மக்களையும் எதிர்காலத்தில் மறந்து விடக் கூடாது

## உயர்தர மாணவர்களுக்கு பணிப்பாளர் அறிவுரை

கிளிநொச்சி, ஓக.9

மாணவர்கள் தாம் கல்வி கற்ற கல்லூரியையும், பிரதேச மக்களையும் எதிர்காலத்தில் மறந்து விடக்கூடாது என கரைச்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அமிர்தலிங்கம் கேட்டுக் கொண்டார்.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்ற உயர்தர மாணவர்களின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கேட்டுக் கொண்டார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

மாணவர்கள் முன்னரைப் போலன்று தற்போது மன இறுக்கத்துடன் காணப்படுகின்றனர். இதற்கு அவர்களது சகாக்கள் பலர் இறந்துள்ளமையும் பலர் முட்கம்பி வேலிகளுக்குள் வாழுகின்றமையும், அவர்களது குடும்ப இழப்புக்களும் காரணமாக இருக்கலாம்.

எனினும் எதிர்வரும் பரீட்சையில் நீங்கள் சிறப்பாகத் தோற்றி சிறந்த பெறுபேறுகளை பெறுவதுடன் கடந்த ஆண்டுகளைப் போல் தீவளாவிய திறமை அடிப்படையில் சித்தி பெற வாழ்த்துகிறேன்.

கிளிநொச்சி மத்திய கல்லூரி பல இன்னல்களைச் சந்தித்தது. எனினும் இடம் பெயர்ந்து சென்று தருமபுரத்தில் சிறப்பாக இயங்கியது. அதற்கான செலவுகள் கூட இன்னும் மீள வழங்கப்படவில்லை.

இக்கல்லூரி மாணவர்கள் எங்கு சென்றாலும் கல்லூரியையும், பிரதேச மக்களையும் எதிர்காலத்தில் மறந்துவிடக் கூடாது செயலாற்ற வேண்டும். அப்போதுதான் கல்லூரியும் பிரதேசமும் மேம்படைய முடியும். இவ்வொன்றுகூடலானது ஒரு சம்பிரதாய பூர்வமான பிரியா விடை மட்டுமே. நீங்கள் பரீட்சை எழுதுவதற்காக உங்களை வாழ்த்தி அனுப்பும் ஒரு நிகழ்வு. எனவே நீங்கள் என்றும் இக்கல்லூரி உயர்வுக்கு உழைக்க வேண்டும்- என்றார். (ஐ-405)

# வட்டக்கச்சி பொதுச் சந்தையில் மீண்டும் வியாபாரம் ஆரம்பமாகியது

கிளிநொச்சி, ஓக.9

கிளிநொச்சி வட்டக்கச்சி பொதுச் சந்தை மீள ஆரம்பிக்கப்பட்டு மெல்ல மெல்ல இயங்கத் தொடங்கியுள்ளது.

கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட இச்சந்தை மீள் குடியேற்றம் இடம்பெற்று மூன்று மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எனினும் சந்தைப் பகுதியில் கடைத் தொகுதிகள் எதுவும் அமைக்கப்படவில்லை.

கடந்த முதலாம் திகதிக்குப் பின்னர் சந்தைக்கு வெளியே வீதியோரங்களில் மரக்கறி, மீன் வாணிபம் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கரைச்சிப் பிரதேச சபையினர் அறிவித்ததை அடுத்து இச்சந்தை மெல்ல மெல்ல இயங்க ஆரம்பித்துள்ளது. (ஐ-405)



* சொவ்ற் கணனி நிறுவனத்தின் கிளை அண்மையில் கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டது. கிளையை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா நாடாவெட்டித் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீரில் பயங்கர மழை, வெள்ளம் உயிரிழந்தோர் 140 ஆக உயர்வு

## 600 இற்கும் மேற்பட்டோரைக் காணவில்லை

## ஹெலி மூலம் மீட்புப்பணி தீவிரம்

லே, ஓக. 09

காஷ்மீரில் பேய் மழை வெள்ளத்திற்குப் பலியானோர் எண்ணிக்கை 140 ஆக உயர்ந்துள்ளது. இன்னும் 600 பேரை காணவில்லை. அவர்கள் மண்ணில் புதைந்து பலியாகி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

15 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இதனால், உயிரிழப்பு மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

தொடர் மழை, நிலச்சரிவுகளால் ஸ்ரீநகர் - கார்கில் - லே வீதிப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் பிற பகுதிகளில் இருந்து லே பகுதி முற்றிலுமாக துண்டிக்கப்பட்டு, தனித்தீவாக மாறியுள்ளது.



வெள்ளப்பெருக்கால் பலியான ஒருவரின் சடத்தைப்பார்த்துக் கதறியழும் உறவினர்கள்...

இப்போதைய நிலையில் வான் வழியாக மட்டுமே லே பகுதியைச் சென்றடைய முடியும். ஆனால், மோசமான வானிலை காரணமாக சில நாள்களாக லே விமானத் தளத்தில் விமானங்கள் தரையிறங்க முடியவில்லை.

சண்டீகர், உதம்பூர், டில்லியிலிருந்து சென்ற விமானப் படை விமானங்கள் லே விமானத் தளத்தில் தரையிறங்க முடியாமல் திரும்பின. நீண்ட முயற்சிகளுக்குப் பின்னர் விமானப் படையைச் சேர்ந்த 6 விமானங்கள் அங்கு சனிக்கிழமை தரையிறங்கின. இதன் மூலம் உணவுப் பொருள்கள் உட்பட 29 தொன் நிவாரணப்பொருள்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

லே பகுதியில் துண்டிக்கப்பட்டுள்ள தகவல் தொடர்பை சீர்செய்ய தொலைத்தொடர்பு சாதனங்களுடன் சிறப்பு விமானமும் லே பகுதிக்குச் சனிக்கிழமை சென்றது.

இதன்மூலம் அங்கு தாற்காலிகமாக தொலைத் தொடர்பு வசதிகள் ஏற்படுத்தப்படும் என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

தேசிய பேரழிவு நிவாரணப் படைத் தலைவர் டொக்டர் செல்வமூர்த்தி தலைமையில் டொக்டர்கள், மீட்பு படை வீரர்கள் அடங்கிய 123 பேர் கொண்ட குழு லே பகுதிக்குச் சென்றுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் விமானப் படை ஹெலிகாப்டர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. உணவுப் பொட்டலங்கள், நிவாரணப் பொருள்கள் வான் வழியாக போடப்படுகின்றன. வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் சிக்கியிருப்பவர்களை விமானப் படையினர் ஹெலிகொப்டர்களில் மீட்டு வருகின்றனர்.

லே பகுதியில் மட்டும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் சொந்த ஊர்களுக்கு திரும்ப முடியாமல் தவித்து வருகின்றனர். அவர்களை மீட்க லே பகுதிக்கு பயணிகள் விமானங்களை இயக்குமாறு உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

அடுத்த சில நாள்களுக்கு விமானப் படை, ஏயர் இந்தியா மற்றும் தனியார் நிறுவனங்களின் பயணிகள் விமானங்கள் லே பகுதிக்கு இயக்கப்படும் என்று விமான போக்குவரத்துத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

காஷ்மீர் முன்னாள் முதல்வரும், மத்திய அமைச்சருமான பரூக் அப்துல்லா பாதிக்கப்பட்ட பகுதிகளை சனிக்கிழமை பார்வையிட்டார். அவருடன் மத்திய அமைச்சர்கள் குலாம் நபி ஆசாத், பிருத்விராஜ் சவாண் ஆகியோரும் சென்றனர்.

இராணுவத் தரப்பிலும் பாதிப்புகள் தொடர்கிறது. சியாச்சினில் சனிக்கிழமை நேரிட்ட நிலச்சரிவில் 20 சிப்பாய்களைக் காணவில்லை. லே பகுதியில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர் பலரைத் தொடர்பு கொள்ள முடியவில்லை. எனினும், பொது மக்களை மீட்கும் பணியில் இராணுவம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

# நிமிர்ந்து நிற்கும் அஞ்சா நெஞ்சன் சீமானை விரைவில் சிறைமீட்போம்

## அவரை பிடல் கஸ்ட்ரோவைப் போலப் பார்க்கிறோம்; நடராஜன் ஆவேசம்

சென்னை, ஓக. 09

சிறையிலடைத்தாலும் சீமான் இன்னமும் தளர்ந்துபோகவில்லை. அவர் அஞ்சா நெஞ்சனாக இருக்கிறார் - நிமிர்ந்து நிற்கிறார். கியூபா விடுதலைக்காகப் போராடிய பிடல் காஸ்ட்ரோவைப்போலத் தான் சீமானைப் பார்க்கிறோம். விரைவில் சீமானை வெளியே கொண்டு வருவோம்.



- இவ்வாறு சசிகலாவின் கணவர் எம்.நடராஜன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பேசிய நாம் தமிழர் இயக்க தலைவர் சீமான், வன்முறையைத் தூண்டும் வகையில் பேசினார் எனவும், இந்திய இறையாண்மைக்கு எதிராகப் பேசினார் எனவும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்தக் கைதுக்கான முதல் கண்டன பொதுக்கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை புதுக்கோட்டையில் நடைபெற்றது.

கூட்டத்தில் நடராஜன் மேலும் பேசியவை வருமாறு -

அண்ணா கண்ட ஆட்சியில்தான் சீமானுக்கு சிறை; வெட்கமாக இருக்கிறது. சீமான் எதற்காகப் போராட்டம் நடத்தினார். தொடர்ந்து தாக்கப்படுவது நம் மீனவர்கள் என்று தானே போராட்டம் நடத்தினார். இது தவறா?

அன்றே ஆர்ப்பாட்டம் செய்த எங்களையும் (வைகோ, நெடுமாறன், நடராஜன்) கைது செய்தார்கள் - கடலூரில் அடைத்தார்கள். வெளியில் கூட்டத்தில் பேசக்கூடாது என்றுதான் எங்களைச் சிறையில் அடைத்தார்கள். வெளி யில் பேசத்தானே நேரம் இல்லை என்று உள்ளேயே கூட்டத்தை நடத்தினோம் - நிறை யப் பேசினோம்.

இதைப் பொறுக்க முடியாமல் எங்களை விடுதலை செய்துவிட்டார்கள். எங்களை விடுதலை செய்ததால் சிறை அதிகாரிகளையும் மாற்றிவிட்டார்கள்.

நாங்கள் கூட்டாக இருந்தோம்; வெளியேறிவிட்டோம். ஆனால் சீமான் தனியாக இருக்கிறார். அதனால்தான் அவர் தனிமைச் சிறையில் சிறைப்பட்டுவிட்டார்.

நாங்கள் சீமானைச் சென்று பார்த்த போது, இன்னமும் அவர் தளர்ந்து போகவில்லை - அஞ்சா நெஞ்சனாக இருப்பதைப் பார்த்தோம்.

நிமிர்ந்து நிற்கிறார் சீமான். கியூபா விடுதலைக்காகப் போராடிய பிடல் காஸ்ட்ரோவைப்போலத்தான் சீமானைப் பார்க்கிறோம். சீமானை வெளியே கொண்டுவர சட்ட நுணுக்களை ஆராய்ந்து வருகிறோம்-என்றார்.

# தி.மு.க. ஆட்சியில் ஈழத்தமிழருக்காக குரல் கொடுப்பவர்கள் மீது தாக்குதல்

## இந்தியக் கம்யூனிஸ்ட் குற்றச்சாட்டு

சென்னை, ஓக. 09

தி.மு.க. ஆட்சியில் கருத்துச் சுதந்திரம் மறுக்கப்படுகிறது. இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பவர்கள் தாக்கப்படுகின்றனர் - என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணு குற்றம்சாட்டினார்.



கருத்துரிமை களம் என்ற அமைப்பின் சார்பில் சென்னையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இந்தப் பொதுக்கூட்டத்தில் பேசிய அவர் மேலும் கூறியவை வருமாறு -

தி.மு.க. ஆட்சியில் கருத்து சுதந்திரம் மறுக்கப்படுகிறது. இலங்கைத் தமிழர்களுக்காக குரல் கொடுப்பவர்கள், செம்மொழி மாநாட்டைப் பற்றி கருத்துத் தெரிவிப்பவர்கள் தாக்கப்படுகின்றனர். அவர்கள் மீது பல்வேறு பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்படுகிறது. தா.பாண்டியன் கார் எரிப்பு, பாரதிராஜா அலுவலகம் நொறுக்கப்பட்டது, பழ. கருப்பையாவும் அவரது வீடும் தாக்கப்பட்டது ஆகியவை இதற்கு உதாரணங்கள்.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வீட்டில் கல்லெறிந்தவர்களைக் கண்டறிந்து பொலிஸார் நடவடிக்கை எடுக்கின்றனர். ஆனால், பழ. கருப்பையாவைத் தாக்கியவர்கள் மீது எந்த நடவடிக்கையும் இல்லை.

ஜனநாயகம் உயர்த்திப் பிடிக்கப்படுகின்ற 21 ஆம் நூற்றாண்டில் உலகில் - எங்கும் நடப்பதைக் காட்சிகளாக பார்க்கும் வாய்ப்பைப் பெற்றுள்ள நவீன உலகில் - தமிழர்களைக் கொன்று குவிக்கக் காரணமாக இருந்தவர் எனக் கூறப்படும் மஹிந்த ராஜபக்ஷ சுதந்திரமாக நடமாடுகிறார்.

மஹிந்த ராஜபக்ஷவை போர்க்குற்றவாளியாக அறிவிப்பதில் தடையாக இருப்பவர்கள் யார்? இந்த உண்மையை நாம் அம்பலப்படுத்த வேண்டும். இதுவரை 400 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். சமீபத்தில் நான்கு மீனவர் கொல்லப்பட்டுள்ளார். ஆனாலும் இந்திய அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# செல்போனை சார்ஜரில் போட்டுப் பேசிய இளைஞர் ஒருவர் முகம் கருகி மரணம்

கும்மிடிப்பூண்டி, ஓக. 09

கும்மிடிப்பூண்டி அருகே செல்போனை சார்ஜரில் போட்டுப் பேசியவர் முகம் கருகிப் பரிதாபமாக இறந்தார்.

கும்மிடிப்பூண்டியை அடுத்துள்ள புதுப்பேட்டை கிராமத்தில் வசித்து வந்தவர் சரித்யபோரா (வயது - 21). அசாம் மாநிலம் கோலிகட்டையைச் சேர்ந்த இவர் கும்மிடிப்பூண்டி சிப்காட் தொழிற்சாலையில் ஒப்பந்தப் பணியாளராகப் பணியாற்றிவந்தார்.

நேற்றுமுன்தினம் காலை செல்போனை சார்ஜரில் போட்டிருந்தார். அப்போது செல்போன் ஒலிக்கவே அதை எடுத்து பேசினார். அப்போது செல்போனில் இருந்து வெளியேறிய தீப்பொறி அவரது வலது கன்னம் மற்றும் காதுகளில் பட்டுக் கருகியது.

மேலும் அவரது உடலில் மின்சாரம் பாய்ந்து மயங்கி விழுந்தார். உடனடியாக அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர். செல்லும் வழியிலேயே அவர் பரிதாபமாக இறந்தார். அவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக பொன்னேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது.

இதுகுறித்து சிப்காட் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## இந்தியச் செய்திகள்

## திருச்சியில் பயங்கரம்

# காதலைக் கைவிட மறுத்த மகளை குத்திக் கொன்ற கொடூரத் தந்தை!

திருச்சி, ஓக. 09

திருச்சியில் காதலைக் கைவிட மறுத்த மகளை, தந்தை கத்தியால் குத்திக் கொலை செய்தார். குடிபோதையில் கொலை செய்து விட்டுத் தப்பி ஓடிய அவரை பொலிஸார் தேடி வருகிறார்கள்.

திருச்சி பாலக்கரை அன்னைநகர் முதல் தெருவைச் சேர்ந்தவர் செல்வராஜ் (வயது - 45). இவருடைய மனைவி அம்சவள்ளி. இவர்களுக்கு 3 மகள்களும், 3 மகன்களும் உள்ளனர். இவர்களுடைய மூத்த மகள் ஜெயா (வயது - 18). திருச்சி சுப்பிரமணியபுரத்திலுள்ள ஒரு கடையில் வேலை பார்த்து வந்தார்.

கடைக்கு வேலைக்குச் சென்று வந்த போது சுப்பிரமணியபுரத்தைச் சேர்ந்த இளைஞர் கார்த்திக்குக்கும், ஜெயாவுக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டது. இந்தப் பழக்கம் நாளடைவில் காதலாக மாறியது. அவர்கள் கடந்த ஒன்றரை வருடங்களாகக் காதலித்து வந்தனர் எனத் தெரிகிறது.

இவர்களது காதல் ஜெயாவின் தந்தை செல்வராஜஸக்குத் தெரியவந்தது. இவர்கள் காதலுக்கு அவர் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தார், மகளைக் கண்டித்தார். ஆனால் ஜெயாவால் கார்த்திக்கை மறக்க முடியவில்லை. அதனால் அவர்கள் காதல் தொடர்ந்தது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் பாலக்கரை செல்வமுத்துமாரியம்மன் கோவிலில் கார்த்திக்கும், ஜெயாவும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். தற்செய லாக அங்கு வந்த செல்வராஜ் தனது மகள் காதலனுடன் இருப்பதை பார்த்து ஆத்திரம் அடைந்தார். இதைத் தொடர்ந்து வீட்டுக்கு வந்த செல்வராஜ், "நான் காத லிக்கக்கூடாது என்று சொல்லியும், கார்த் திக்கை எப்படி காதலிக்கலாம்" என்று கூறி மகளிடம் சண்டை போட்டார். பின்னர் அவர் வெளியில் சென்றுவிட்டார்.

நள்ளிரவு அவர் வீட்டுக்குத் திரும்பி வந்தார். வீட்டில் மனைவி மற்றும் பிள்ளைகள் அயர்ந்து தூங்கிக்கொண்டு இருந்தனர். வீட்டில் இருந்த கத்தியை எடுத்து வந்து தூங்கிக்கொண்டிருந்த ஜெயாவின் வயிற்றில் செல்வராஜ் குத்தினார் எனக் கூறப்படுகிறது. அலறியடித்து எழுந்த் ஜெயா, முதலில் திருடன்தான் தன்னை கத்தியால் குத்தியதாக நினைத்தார். ஆனால் சிறிது நேரத்தில் தன் தந்தையே கத்தியால் குத்திவிட்டாரே என்று நினைத்துத் துடித்தார். சில நிமிடங்களில் ஜெயாவின் உயிர் அந்த இடத்திலேயே பிரிந்து விட்டது.

ஆத்திரத்தில் மகளைக் கொன்றதை உணர்ந்த செல்வராஜ் வீட்டை விட்டு ஓடி விட்டார். மகளின் அலறல் சத்தத்தைக் கேட்டு எழுந்த தாய் அம்சவள்ளி, தம்பிகள், தங்கைகள் ரத்த வெள்ளத்தில் கிடந்த ஜெயாவின் உடலைப் பார்த்து கதறி அழுதனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✱ பின்வரும் உரைப்பகுதியை வாசித்து வெற்றிடத்துக்கு மிகவும் பொருத்தமான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

வானத்திலிருந்து விழுகின்ற ஒரு மழைத் (25) ........................ கூட வீணே கடலுக்குச் செல்ல விடாமல் நன்றாக தேக்கிவைப்பதற்காக சமுத்திரத்தைப் போன்ற குளங்கள் கட்டப்பட்டுள்ளன என்று எமது (26) ...................... சான்று கூறுகின்றது.

25. துளி, வீழ்ச்சி, நீர். 26. இலக்கியம், கல்வெட்டு, வரலாறு

✱ கீழே தரப்பட்டுள்ள 3 படிமுறைகளின் கீழ்க் கட்டடம் ஒன்றைக் கட்டத் திட்டமிடப்பட்டது.

| படிமுறை | எடுக்கும் காலம் |
|---|---|
| 1 | 3 ஆண்டுகள் |
| 2 | 5 ஆண்டுகள் |
| 3 | 2 ஆண்டுகள் |

27. 2010 ஜனவரியில் கட்டடம் கட்டத் தொடங்கப்பட்டது. எனின், எந்த ஆண்டில் அது கட்டி முடிக்கப்படும்?
1) 2018 2) 2019
3) 2020 4) 2021

✱ மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

28. ஒரே இடத்திலிருந்து பிரயாணத்தைத் தொடங்கிய A,B எனும் பிள்ளைகள் முறையே தனது வலது கைப்பக்கத்துக்கும், இடது கைப்பக்கத்துக்கும் திரும்பி 200m வீதம் வட்ட வடிவமாக பிரயாணம் செய்தனர். இருவரும் மீண்டும் ஒன்றாக சந்திப்பது எத்தனை மீற்றர் பிரயாணம் செய்த பிறகு ஆகும்?
1) 800 மீற்றர். 2) 200 மீற்றர். 3) 600 மீற்றர்.

29. ஓர் ஓட்டக்காரனுக்கு A நகரில் இருந்து B நகருக்கும், C நகருக்கும் ஓடுவதற்கு தேவைப்பட்டது. A நகரத்திலிருந்து B நகருக்கு ஓடிய அவன் C நகருக்கு ஓடுவதற்கு, ஓடியதை விட இரு பங்கு தூரம் ஓடவேண்டியுள்ளதாக அவன் கூறினான். அவன் ஓடிய மொத்தத் தூரம் 45 km எனின், B நகரத்திலிருந்து C நகருக்கு உள்ள தூரம் எத்தனை km ஆகும்.
1) 15 km 2) 30 km 3) 20 km

✱ கணித பாடத்தில் சுசிலா, வரதாவைப் பார்க்கிலும் குறைந்த புள்ளிகளைப் பெற்றாள். புஷ்பா, சுமதியைக் காட்டிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றாள். ஆனால், சுசிலாவிலும் குறைந்த புள்ளிகளையே பெற்றாள்.

30. மிகவும் அதிக புள்ளிகளைப் பெற்றவர் யார்?
1) வரதா. 2) சுசிலா.
3) புஷ்பா. 4) சுமதி.

31. சுசிலாவுக்கு அடுத்தநிலைப் புள்ளிகளைப் பெற்றவர் யார்?
1) வரதா. 2) சுசிலா.
3) புஷ்பா. 4) சுமதி.

32. மிகக் குறைந்த புள்ளிகளைப் பெற்றவர் யார்?
1) வரதா. 2) சுசிலா.
3) புஷ்பா. 4) சுமதி.

✱ 2009 ஆம் ஆண்டு 21ஆம் நூற்றாண்டின் முதலாம் தசாப்தத்துக்கு உரியதாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.

33. உமது பிறந்த ஆண்டு,
1) 20 ஆம் நூற்றாண்டின் 10ஆம் தசாப்தம்.
2) 20 ஆம் நூற்றாண்டின் முதலாம் தசாப்தம்.
3) 21 ஆம் நூற்றாண்டின் முதலாம் தசாப்தம்.
4) 19 ஆம் நூற்றாண்டின் 10ஆம் தசாப்தம்.

34. 21ஆம் நூற்றாண்டின் 2ஆம் தசாப்தத்துக்குரிய ஆண்டு,
1) 2110 2) 2065
3) 2015 4) 1999

35. 2010 ஜனவரி முதலாம் திகதி வெள்ளிக்கிழமை எனின், அம்மாதத்தில் உள்ள வியாழக்கிழமைகளினதும், வெள்ளிக்கிழமைகளினதும் எண்ணிக்கைகள் முறையே,
1) 4, 4 ஆகும். 2) 5, 4 ஆகும்.
3) 5, 5 ஆகும். 5) 4, 5 ஆகும்.

✱

| பொருட்கள் | விலை |
|---|---|
| 1 kg கோதுமை + 250 g தேயிலை | 260.00 |
| 250g தேயிலை + 500 g சீனி | 180.00 |
| 1 kg கோதுமை + 500 g சீனி | 190.00 |

எனின்,

36. 2 kg கோதுமை, 500 g தேயிலை, 1kg சீனியின் விலை என்ன?
1) 440/- 2) 630/-
3) 610/- 4) 490/-

✱ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் காரணம் முதலில் தரப்பட்டு விளைவு அதனைத்தொடர்ந்து வருகின்றதாயின் (√) எனவும், அவ்வாறு இல்லை எனின், (×) எனவும் அடையாளம் இடுக.

37. இருள் விலகுகிறது, சூரியன் உதித்தது. (............)

38. வானம் இருண்டது, மழை பெய்தது. (............)

✱ சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

39. எங்கள் பாடசாலைக் கலைவிழா ஒன்றில் நாங்கள் 3 பாடல்கள் கேட்டோம். இரண்டை கல்சானா பாடினாள். இரண்டை கல்சியா பாடினாள். அது எப்படி?
..............................................................................................

40. தோசை சுடும்போது நாமே அதனைப் புரட்டிப் போட வேண்டும். அது ஏன்?
..............................................................................................

-நிறைவுற்றது-

*1 மணி 15நிமிடங்கள்*

## பகுதி II

### எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

01. பின்வரும் பாடல் அடிகளை நன்கு வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.

சேவற் கோழியு முண்டு காகமுண்டு - வானம்
செக்கச் சிவந்து தெரிவதுண்டு
மேவு பெண்ணே அதி காலை தெரிந்துவிட
வேறுங் கடிகாரம் வேண்டுமோடி.

செங்கதி பொங்கி வருவதுண்டு - நல்ல
செந்தாமரைகள் மலர்வதுண்டு
மங்கையே காலைப் பொழுதையுணர்த்திட
மற்றுங் கடிகாரம் வேண்டுமோடி.

விண்மணி யாழியில் வீழ்வதுண்டு - வாசம்
வீசு மந்தாரை மலர்வதுண்டு
கண்மணியே மாலைக் காலம் குறித்திடக்
கையிற் கடிகாரம் வேண்டுமோடி.

1) இப்பாடலுக்குப் பொருத்தமான தலைப்பு எது?
..............................................................................
2) செக்கச் சிவந்து என்பதன் கருத்து என்ன?
..............................................................................
3) நல்ல என்பதன் எதிர்க் கருத்துச் சொல் எது?
..............................................................................
4) பாடலில் உள்ள மாலையில் மலரக்கூடிய பூ எது?
..............................................................................
5) செங்கதிர் என இங்கு எது குறிப்பிடப்படுகிறது?
..............................................................................
6) மங்கை, கண்மணி என அழைக்கப்படுபவர் யார்?
..............................................................................
7) சேவற்கோழி என்பதை பெண்பாலில் எழுதுக.
..............................................................................
8) செந்தாமரை மலர்வதைக் கொண்டு நாம் எதனை உணரலாம்?
..............................................................................

02. பின்வரும் கருத்தைத் தரும் உவமைத் தொடரை எழுதுக.

1) பாலாவும், சாகவியும் எப்போதும் தங்களுக்குள் மோதிக்கொண்டே இருந்தார்கள்.
..............................................................................
2) யுத்தத்தால் மிகவும் கஷ்டப்பட்ட மக்கள் புவி நடுங்கியதால் மேலும் துன்பப்பட்டார்கள்.
..............................................................................

03. பின்வரும் வாக்கியங்களில் உள்ள இலக்கணப் பிழையைத் திருத்தி எழுதுக.
1) தம்பி பந்தினை அடித்து விளையாடினர்
..............................................................................
2) பெற்றோர்கள் தனது குழந்தைகளின் வளர்ச்சியில் அக்கறை காட்டுவர்.
..............................................................................

04. தரப்பட்டுள்ள வாக்கியத்தை எழுவாய்க்குப் பொருத்தமாக மாற்றி எழுதுக.
1) அவர்கள் எப்போதும் உண்மை பேசுவார்கள்
நான் ..............................................................................
2) ஆட்டுக்குட்டி மெல்ல மெல்ல நடந்து சென்றது
அவள் ..............................................................................

05. தரப்படும் சொற்களை இணைத்து கருத்துள்ள பழமொழி 2 எழுதுக.
போதுமென்ற / செய்தவர் / கொடியும் / இக்கரைக்கு / பொன் / அடாது / அடம்பன் / செய்யும் / மிடுக்கு / படாது / திரண்டால் / அக்கரை / படுவார் / மனமே / பச்சை
1) ..............................................................................
2) ..............................................................................

06. ஆங்கிலத்தில் எழுதுக.
1) பச்சை ..............................................
2) முயல் ..............................................
3) கிளி ..............................................
4) அன்னம் ..............................................
5) எனக்கு இரண்டு காதுகள் உண்டு.
..............................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. பின்வரும் சொற்கள் / வாக்கியங்களுக்குச் சமமான சிங்களச்சொற்களை எழுதுக.
1) வைத்தியசாலை ....................................................
2) யாருக்கு ....................................................
3) உங்கள் பெயர் என்ன?....................................................
4) உங்கள் வயது எத்தனை? ....................................................
5) உங்கள் பாடசாலையின் பெயர் என்ன?
....................................................................................


08. மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1) பிசின் பெற உதவும் தாவரம்,
1) முதிரை. 2) வீரை. 3) பாலை. 4) விளா.

2) பூக்களில் இருந்து தேன், மகரந்தமணியை உண்ணும் பொருட்டு இரவு தொடக்கம் அதிகாலை வேளை வரை தூரியன்பூ, வாழைப்பூவை நாடி வரும் பிராணி,
1) வண்ணத்துப் பூச்சி. 2) வெளவால்.
3) தேன் குருவி. 4) தேனீ.

3) வித்து முளைத்தலுக்கு அவசியமான காரணி அல்லாதது,
1) வளி. 2) நீர்.
3) ஒளி. 4) நடுத்தர வெப்பம்.

4) பின்வருவனவற்றில் குகையில் வாழும் பிராணி,
1) வெளவால். 2) செண்பகம். 3) பருந்து. 4) எலி.

5) உணவுப்பொதிகளில் ''ஈரலிப்பிலிருந்து பாதுகாக்கவும்'' என்பதைக் குறிக்கும் குறியீடு எது?
1) 2) 3) 4)


6) வானவில்லில் காணப்படாத நிறம்,
1) ஊதா. 2) வெள்ளை. 3) பச்சை. 4) கருநீலம்.

7) பின்வருவனவற்றுள் நின்று புறப்படுதல் முறையில் ஆரம்பிக்கப்படும் ஓட்ட நிகழ்ச்சிகள் எவை?
1) 400 m, 200 m 2) 800 m, 1500 m
3) 200 m, 100 m 4) 100 m , 400 m

8) இவர்

1) இலவசக் கல்வியின் தந்தை.
2) தேசிய கீதத்துக்கு இசையமைத்தவர்.
3) தேசிய கீதத்தை சிங்கள மொழியில் எழுதியவர்.
4) பௌத்த சமய மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டவர்.

9) உலகின் மிக நீளமான நதி,
1) மகாவலி கங்கை. 2) நைல் நதி.
3) அமேசன் நதி. 4) மறேடாலிங்.

10) கோள்களில் மிகச் சிறிய கோள்,
1) செவ்வாய். 2) வெள்ளி. 3) புதன். 4) சனி.

11) தேசப்படத்தில் பாதுகாக்கப்பட்ட வனப்பிரதேச எல்லையைக் காட்ட பயன்படுத்தப்பட்ட நிறம்,
1) கறுப்பு. 2) இளம்பச்சை. 3) சிவப்பு. 4) நீலம்.

12) காலாவதியான தகரத்தில் அடைக்கப்பட்ட மீனை உண்பதால் ஏற்படும் விளைவு,
1) வாந்திபேதி. 2) உதடு வீக்கம்.
3) சொறிவு. 4) தடித்தல்.

13) பின்வரும் தொடர்பாடல் ஊடகங்களில் இலத்திரனியல் ஊடகம் எது?
1) நூல்கள். 2) பத்திரிகை.
3) தொலைநகல். 4) கட்டுரைகள்.

14) பௌத்த மக்கள் வைகாசிப் பூரணை தினத்தில் சித்தார்த்த குமரனின் பிறப்பு, ஞானம் பெறல், சமாதி அடைதலை இட்டு கொண்டாடும் பண்டிகை,
1) பொசன். 2) தீபாவளி. 3) வெசாக் 4) நத்தார்.

15) இலங்கையில் அதிகளவு கழுதைகளும், கோவேறு கழுதைகளும் வளர்க்கப்படும் மாவட்டம்,
1) மன்னார். 2) புத்தளம்.
3) கிளிநொச்சி. 4) யாழ்ப்பாணம்.


16) எமது நாட்டில் காணப்படும் பறவை,
1) நாகணவாய். 2) கிவி. 3) பென்குயின். 4) தீக்கோழி.

17) பூனை கடித்தால் செய்யக்கூடிய முதலுதவி அல்லாதது,
1) காயத்தை ஓடும் நீரினால் கழவுதல்.
2) காயத்தை சவர்க்காரத்தால் கழுவுதல்.
3) காயத்தை வெட்டி விசக் குருதியை எடுத்தல்.
4) வைத்தியரிடம் உடன் கொண்டுசெல்லல்.

18) அணிந்திருந்த ஆடையில் தீப்பிடித்த ஒருவரைக் காப்பாற்ற செய்யக்கூடிய முதலுதவி,
1) தடித்த துணியினால் உடலைப் போர்த்துதல்.
2) தீயணைப்புப் பகுதிக்கு அறிவித்தல்.
3) ஆடையில் தீப்பிடித்த பகுதியை கிழித்தெடுத்தல்.
4) நிலத்தில் உடனடியாக உருளச்செய்தல்.

19) வீட்டு மின் இணைப்பின்போது நிலத்தில் பதிக்கப்படும் ஏத் வயரின் நிறம்,
1) பச்சை. 2) மஞ்சள். 3) கறுப்பு. 4) சிவப்பு.

20) வெற்றுப் போத்தல் ஒன்றின் வாயில் ஊதப்படாத பலூன் ஒன்று கட்டப்பட்டுள்ளதைப் படம் காட்டுகிறது. இந்தப் போத்தலை சுடுநீர் நிரப்பப்பட்ட பாத்திரம் ஒன்றினுள் அமிழ்த்தினால் அவதானிக்கக்கூடியது,
1) பலூன் சூடாகும். 2) பலூன் வெடிக்கும்.
3) பலூன் விரிவடையும். 4) எதுவும் நிகழாது.

09. அ. பின்வரும் உபகரணங்களின் பெயர்களை எழுதுக.
1) 2) 3) 4) 5)

.................. .................. .................. .................. ..................


ஆ. பின்வரும் வித்துக்கள் எவ்வாறு பரம்பலடைகின்றன என எழுதுக.
1) 2) 3) 4)

.................. .................. .................. ..................

10. மிகச் சரியான விடையை எழுதுக.

1) பயாஸ் பயணம் ஒன்றை ஆரம்பித்தபோது மானி வாசிப்பு 0 0 9 9 6 9 Km எனக் காட்டியது. அவன் 31 Km பயணம் செய்து பயணத்தை முடித்தபோது மானி வாசிப்பு என்ன?
....................................


2) 0.06 உடன் 0.8 ஐக் கூட்டுக. ....................................

3)


நகரங்களுக்கிடையிலான தூரம் Km இல் தரப்படுகிறது எனக்கொண்டு நகரம் B இற்கும் Dஇற்கும் இடையிலான தூரத்தைக் காண்க.
....................................


4) ஒரு மாங்கன்றின் விலை ரூபா 14.50, பப்பாசிக் கன்றின் விலை ரூபா 27.00 ஆகும். இரண்டையும் வாங்க ரூபா 100 தாள் கொடுக்கப்பட்டதெனின், மீதி எவ்வளவு?
....................................

5) உறை ஒன்றினுள் 3 வீதம் 309 சவர்க்காரக்கட்டிகளைப் போட எத்தனை உறைகள் தேவை?
....................................


6)

1 cm இடைவெளி உள்ள ஆணிகள் அறைந்துள்ள கேத்திர கணிதப் பலகை உருவில் காட்டப்படுகிறது. ஒரு மெல்லிய இறப்பர் பட்டியால் ஆணிகளைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள உருவத்தின் பரப்பளவு என்ன?
....................................

7) ஆபியா திங்கட்கிழமை 36 ரூபாவும், செவ்வாய்க்கிழமை 44 ரூபாவும், புதன் கிழமை 46 ரூபாவும் சேமித்தாள். அவள் அதனை வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளில் சம அளவில் செலவழிக்கத் தீர்மானித்தாள் எனின், வெள்ளிக்கிழமை அவள் செலவழித்த தொகை எவ்வளவு?
....................................

8) ஒரு போத்தல் 475 ml திரவம் கொள்ளும். அவ்வாறான 4 போத்தல்கள் கொள்ளும் திரவத்தின் கனவளவு என்ன?
....................................

9) அருகில் உள்ள படம் குறிக்கும் திசைகளை x இலிருந்து y வரை ஒழுங்காக எழுதுக.


....................................................

10)


இதன் சுற்றளவு என்ன?
....................................................

11. 5 பாடசாலைகளில் இருந்து 2009 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றியோர் விவரம் வருமாறு:

| பாடசாலை | மாணவர் தொகை | |
|---|---|---|
| | பெண் | ஆண் |
| பாத்திமா வித்தியாலயம் | 140 | 96 |
| வாசகி வித்தியாலயம் | 125 | 86 |
| சாஹிரா வித்தியாலயம் | 68 | 186 |
| மஸ்ஹர் வித்தியாலயம் | 135 | 0 |
| ஸபா வித்தியாலயம் | 0 | 161 |

1) பாத்திமா வித்தியாலயத்தில் இருந்து எத்தனை பேர் பரீட்சைக்குத் தோற்றினர்?
....................................

2) பரீட்சைக்குத் தோற்றிய ஆண்கள் பெண்களுக்கிடையிலான வித்தியாசம் எத்தனை?
....................................

3) அதிகளவு பிள்ளைகள் எப்பாடசாலையிலிருந்து பரீட்சைக்குத் தோற்றினர்?
....................................

4) சாஹிரா வித்தியாலய ஆண், பெண் மாணவர்களுக்கிடையிலான வித்தியாசம் எத்தனை?
....................................

12. ''நீண்ட காலத்தின் பின் எனது நாட்டில் சண்டைகள் ஓய்ந்து நிலையான ஆட்சி மலர்ந்தபோது'' எனும் தலைப்பில் கருத்துள்ள ஐந்து சொற்களுக்குக் குறையாத 6 வசனங்கள் எழுதுக.
....................................................................................
....................................................................................
....................................................................................
....................................................................................
....................................................................................
....................................................................................

-நிறைவுற்றது-

கருத்தரங்குக் குறிப்பு: இன்றைய வினாத்தாள்களுக்கு மாணவர்கள் அளித்த விடைகளை நாளைய தினம் வெளிவரும் விடை விளக்கக்குறிப்புக்களுடன் ஒப்பிட்டு விளக்கமின்மை, தெளிவின்மைகள் என்பவற்றை 077-9597407 என்ற தொலைபேசியூடாக U.L.M.சாஜித் ஆசிரியரிடம் நாளைய தினம் இரவு 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையும் தெளிவுபடுத்திக் கொள்ளமுடியும். (பிரபல ஆசிரியர்கள் ஒதுக்கிய அரிய நேரத்தை பயன்படுத்த தவறாதீர்கள்)''



நாளைய கருத்தரங்குத் தொடரில்

சுடரொளி கல்விச்சுடருக்கும், புலமைச்சுடருக்கும், பரீட்சைப்பிரிவிற்கும் 2010 ஆம் ஆண்டிற்கு ஏறத்தாழ 60 வினாத்தாள்களிற்கு அதிகமாக தயாரித்து வழங்கிய பெரும் பாராட்டிற்குரிய ஆசிரியர் திரு.எஸ்.தீபன் தயாரித்த வினாத்தாள்களும், இன்றைய தினம் வெளிவந்த வினாத்தாள்களுக்கான விடை விளக்கக்குறிப்புக்களும் வெளிவரும்.

மேலதிக தொடர்புகளுக்கும் விமர்சனங்களுக்கும்

புலமைச்சுடர் ஆசிரியர் - சுடர் ஒளி, 85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை கொழும்பு - 14
தொ.பேசி இல. - புலமைச்சுடர் ஆசிரியர்பீடம்: 0115738855/ 071-4273035
விநியோகப் பிரிவு இலக்கங்கள்: கொழும்பு 0115737599, யாழ் 0215677222.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செப். 22இல் உலகத் தலைவர்கள் 150 பேர் பங்குபற்றும்
# ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்திற்கு ஜனாதிபதி ராஜபக்ஷ செல்வது சாத்தியமா?

கொழும்பு, ஓக. 9

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியூயோர்க் செல்வாரா? இல்லையா? என்பதுபற்றி ஜனாதிபதிச் செயலகம் இன்னமும் முடிவு எதுவும் எடுக்காமல் இருந்து வருவதாக கொழும்பு ஆங்கிலப்பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தமக்கு ஆலோசனை கூறுவதற்காக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் நியமித்துள்ள நிபுணர்கள் குழு ஐ.நா. உச்சிமாநாடு நடைபெறும் காலகட்டத்தில் கூடவிருப்பதாலும் அரசியல் ரீதியில் நேசபான்மை கொண்டிராத ஐ.நா. சபையின் பொதுச் சபைக்கூட்டத்தில் இலங்கை ஜனாதிபதி கலந்துகொள்ளத்தான் வேண்டுமா என்ற வகையில் ஜனாதிபதிச் செயலகத்திலும் வெளியுறவு அமைச்சிலும் கருத்து வேறுபாடு நிலவுவதாக அச்செய்தி கூறுகின்றது.

**உலகத் தலைவர்கள் 150 பேர் பங்குபற்றுவர்**

அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

செப்ரெம்பர் 22 ஆம் திகதி ஐ.நாவின் பொதுச்சபையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரைநிகழ்த்துவதாக ஏற்பாடாகியுள்ளது. இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக 150 உலகத்தலைவர்களுக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொள்ளவிருக்கிறார்கள். ஐ.நாவின் கடந்தகால அபிவிருத்தி இலட்சியங்களின் வெற்றி தோல்விகள் இந்த மாநாட்டில் ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதி ராஜபக்ஷ இந்த மாநாட்டுக்குச் செல்லும்பொழுது நியூயோர்க் நகரில் அவர் சொற்பொழிவாற்றுவதற்காக திட்டமிடப்பட்டிருந்த பொதுக்கூட்டமும் பெரும்பாலும் இரத்துச் செய்யப்படக் கூடும் என்று கருதப்படுகின்றது.

**முன்னாள் பிரதமர் ரட்ணசிறிக்கு ஏற்பட்ட சங்கடம்**

கடந்த வருடம் பொதுச்சபைக் கூட்டத்தில் ஜனாதிபதியின் சார்பில் பிரதம மந்திரி ரட்ணசிறி விக்கிரமநாயக்க கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார். அச்சமயம் ஆசியா சங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கேள்வி பதில் நிகழ்ச்சியில் சில மனித உரிமை ஆர்வலர்களின் கேள்விகளால் அவர் சங்கடமான நிலைக்குள்ளானதாகக் கூறப்படுகின்றது. அதேவிதமான நிலைமை ஒன்று ஏற்படுவதை அரசு இப்போது விரும்பவில்லை.

ஐ.நா. விசாரணைக் குழுவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் மேலும் மோசமடையுமானால் ஜனாதிபதி ராஜபக்ஷ தமது நியூயோர்க் பயணத்தை இரத்துச் செய்துவிடுவது சாத்தியமே. இவ்வாறு அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது. (ப)

# ஆடி அமாவாசை தினத்தை முன்னிட்டு கசூரினா, கீரிமலைக்கு நேரடி பஸ் சேவைகள்

காரைநகர், ஓக.9

ஆடி அமாவாசை தினத்தை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை அதிகாலை முதல் காரைநகர் கசூரினா புனித தீர்த்தக்கரை மற்றும் கீரிமலை ஆகிய இடங்களுக்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் காரைநகர் டிப்போவினால் நேரடி பஸ்சேவைகள் நடத்தப்பட உள்ளன என்று காரைநகர் டிப்போ முகாமையாளர் கே.சி. கந்தசாமி தெரிவித்துள்ளார்.

யாழ். பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து காரைநகர் கசூரினா புனித தீர்த்தக்கரைக்கும் சித்தன்கேணிச் சந்தியில் இருந்து 740 இலக்க பாதை ஊடாகக் கீரிமலைக்கும் நேரடி பஸ்சேவைகள் இடம்பெற உள்ளன என்றும் -

நாளைமறுதினம் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் இடம்பெற உள்ள இரதோற்சவத்துக்குப் பக்தர்கள் வந்து செல்வதற்கு வசதியாக யாழ். பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து ஆலயம் வரையான பஸ்சேவைகள் அன்றையதினம் அதிகரிக்கப்பட உள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-250)

# நாளை பல்கலையில் 'உறவு' திரைப்படம்

யாழ்ப்பாணம், ஓக. 9

யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் பீடத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழகத்தில் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணிக்கு 'உறவு' கனேடிய திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

இத்திரைப்படம் குடும்ப உறவுகள் பற்றி மிக அழகாகச் சித்தரித்துக்காட்டுவதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் இத்திரைப்படத்தின் இயக்குநர் கலைஞர் திவ்வியராஜனும் சமுகமளிப்பார் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# நாட்டில் 30 ஆயிரம் பாலியல் தொழிலாளர்!

கொழும்பு, ஓக.09

இந்த நாட்டில் 30ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரையிலான பாலியல் தொழிலாளர்கள் உள்ளனர் என்றொரு அதிர்ச்சித் தகவலை சுகாதாரக் கல்விப் பணியகம் வெளியிட்டுள்ளது.

உள்ளூர் பாலியல் தொழிலால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக மேற்கொண்ட விரிவான ஆராய்ச்சியிலேயே மேற்படி எண்ணிக்கையிலானோர் விபசாரத் தொழிலில் ஈடுபடுகின்றனர் என்று தெரியவந்துள்ளது என சுகாதாரக் கல்விப் பணியகத்தின் ஊடக இணைப்பாளர் டாக்டர் சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தற்போது பாலியல் தொழில் நேரடியாக அல்லாது வேறு பெயர்கள் மூலம் நடத்தப்படுகின்றது. குறிப்பாக மசாஜ் நிலையங்கள் மற்றும் கிளப்கள் போன்ற பெயர்களில் இந்தத் தொழில் இடம்பெறுகின்றது.

வான்கள் போன்ற வாகனங்களைப் பயன்படுத்தி நடமாடும் பாலியல் விடுதிகளும் நடத்தப்படுகின்றன.

இந்தத் தொழிலால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக நாம் மேற்கொண்ட ஆய்வில் இந்த நாட்டில் 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரையிலானோர் பாலியல் தொழிலில் ஈடுபடுகின்றனர் எனத் தெரியவந்துள்ளது. - என்றார். (ஒ-சி)

# இலங்கைக்கு அமெரிக்கா முழு ஆதரவு வழங்க செனட் உறுப்பினர் வலியுறுத்து

நெவாடா ஓக. 9

இலங்கையில் மீண்டும் வன்முறைகள் தலை தூக்காது இருப்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் அமெரிக்க கொழும்புக்கு தனது முழு ஆதரவையும் தெரிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார் அமெரிக்க செனட் உறுப்பினர் பேராசிரியர் டைனா டிடூஸ்.

நெவாடா மாநிலத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தும் செனட் உறுப்பினரான இவர் லாஸ் வேகாஸிலுள்ள விகாரைக்கு முதல் தடவையாகச் சென்று வழிபட்டார். அதன் பின்னர் அங்கு கூடியிருந்த இலங்கையர்களிடம் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பயங்கரவாதத்திற்குப் பின்னான காலத்தில் இலங்கை இப்போது இருக்கிறது. இரண்டு தசாப்த காலமாகத் தொடர்ந்த கொடூர வன்முறைகளின் பின்னர் ஏற்பட்டுள்ள இந்தக் காலகட்டம் மிக முக்கியமானது. அத்தோடு எமக்கு போதிய ஆழமான அறிவு இல்லாத ஒரு விடயத்தில் நீதியை நிலைநாட்டுவதற்கு முயலக் கூடாது என்பதை அமெரிக்கா புரிந்து கொள்ள வேண்டிய தருணம் இது. இலங்கையில் மீண்டும் வன்முறைகள் வெடிக்காமல் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையிலான தனது ஆதரவை அமெரிக்கா உறுதிப்படுத்த வேண்டும். - இப்படித் தெரிவித்தார் பேராசிரியர் டிடூஸ். (ஒ-சி)

# ரணில்–சஜித் பிரேமதாஸ இடையே சமரசத்தை ஏற்படுத்த முஸ்தீபுகள்

கொழும்பு, ஓக. 09

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவப் பதவியைக் கைப்பற்றுவதற்காகப் போராடிக்கொண்டிருக்கும் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு இடையில் சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கட்சி வட்டாரம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகக் கலந்தாலோசிக்கவென கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் கடந்த வாரம் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரியவின் கொழும்பு இல்லத்தில் ஒன்று கூடினர்.

இக்கூட்டம் இடம்பெற்றமையை ஐ.தே.கவின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோஸப் மைக்கல் பெரேரா உறுதிப்படுத்தினார்.

கட்சி மறுசீரமைப்பு தொடர்பான விடயங்கள் பற்றி இக்கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டன என்று கட்சி வட்டாரம் தெரிவித்தது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்டோரில் ஒரு தரப்பு, ரணில் விக்கிரமசிங்க கட்சித் தலைவராகவும், கரு ஜ்யசூரிய மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோர் பிரதித் தலைவர்களாகவும் இருக்கவேண்டும் என்று யோசனை தெரிவித்தது.

அதேவேளை, மறுதரப்பு ரணில் விக்கிரமசிங்க கட்சியின் சிரேஷ்ட தலைவராகவும், கரு ஜயசூரிய இடைக்காலத் தலைவராகவும் மற்றும் சஜித் பிரேமதாஸ பிரதித் தலைவராகவும் இருக்கவேண்டும் என்று யோசனை தெரிவித்தது

இக்கூட்டத்தில் ஐ.தே.கவின் தவிசாளர் காமினி ஜயவிக்கிரம பெரேரா, பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கபீர் காசிம், தயாசிறி ஜயசேகர, சஜித் பிரேமதாஸ, லக்ஷ்மன் செனவிரட்ண, தலதா அத்துகோரள மற்றும் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஓர் இணக்கம் எட்டப்படும்வரை இச்சந்திப்புகள் தொடர்ந்து இடம்பெறும் என்று கட்சி வட்டாரம் கூறியது. (ஒ-சி)

# அரச தரப்பில் நான்; எதிர்க் கட்சியுடன் மனோ இப்படியே அரசியல் செய்யலாம் என்கிறார் பிரபா

கொழும்பு, ஓக. 09

மக்களின் பிரச்சினைகள், அபிவிருத்திப் பணிகளில் நான் அரசுடன் இணைந்து செயற்படுவேன். இதற்கு ஜனநாயக மக்கள் முன்னணி அனுமதியளிக்கவேண்டும். அதேபோல் முன்னணித் தலைவர் மனோ கணேசன் எதிர்க்கட்சியுடன் தமது அரசியல் செயற்பாட்டை முன்னெடுக்கலாம். இதற்கு இடையூறாக நான் இருக்க மாட்டேன்'' என நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

எனது இந்தத் தகவலை முன்னணியின் தலைவர் மனோ கணேசனுக்குக் கட்சி முக்கியஸ்தர்கள் மூலம் அறிவித்துள்ளேன்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருடன் பேச்சு நடத்த வருமாறு எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்தச் சந்திப்புக்கு நேற்றுக் காலை 10 மணிக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. நான் அரசுடன் இணைந்துள்ளதால் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்கும் தேவை எனக்கில்லை. சில இணையதளங்கள் ரணில் விக்கிரமசிங்கவை நான்சந்திக்கவுள்ளேன் என்று செய்தி வெளியிட்டிருந்தன. ஆனால் நான் அவரைச் சந்திக்கப் போவதில்லை. - இப்படி அவர் தெரிவித்தார். (ஒ-சி)

# சோமாலிய கடற்கொள்ளையர்கள் கடத்திய இலங்கையர்களை விடுவிக்க அரசு முயற்சி

கொழும்பு, ஓக. 09

சோமாலியக் கடற்கொள்ளையர்களினால் தடுத்துவைக்கப்பட்டுள்ள சவூதி அரேபிய கப்பலில் பணியாற்றிவரும் 14 இலங்கையர்களையும் விடுவிப்பது தொடர்பில் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்நிலையில், அரசு கொழும்பில் உள்ள சவூதி அரேபிய தூதரகத்துடனும் ரியாத்தில் உள்ள வெளிவிவகார அமைச்சுடனும் தொடர்புகொண்டுள்ளது எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கையர்களுக்குத் தாம் பாதிப்பை ஏற்படுத்தப் போகின்றனர் எனக் கொள்ளையர்கள் அச்சுறுத்தியுள்ளனர் என்று தகவல் வெளியானதை அடுத்தே இந்த நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த அதிகாரியொருவரின் கூற்றுக்கமைய, சவூதி அரேபிய இராஜதந்திரிகளுடன் அமைச்சு அடுத்த வாரம் பேச்சுகளை ஆரம்பிக்க உள்ளது.

ரியாத்தில் உள்ள சவூதி அரேபிய உள்துறை அமைச்சரைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு கோரப்பட்டுள்ளது எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னர், கொள்ளையர்களினால் கோரப்பட்ட 30 லட்சம் அமெரிக்க டொலர் கப்பப்பணத்தை வழங்க கப்பல் நிறுவனம் முன்வந்தபோதிலும், அதனை சவூதி அரேபிய உள்துறை அமைச்சு தடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

# மட்டு. சிறையிலுள்ள அம்பாறை மாணவன் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி

மட்டக்களப்பு, ஓக. 9

மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் மாணவனான அ.சுகிர்தன் என்பவரை ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற தற்போது அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அம்பாறையைச் சேர்ந்த இந்த மாணவன் வர்த்தகப் பிரிவில் கல்வி கற்று வந்தவர் ஆவார். இவர் கடந்த வருடம் புலிகளுக்கு ''சிம்'' காட் பெற்றுக்கொடுத்ததாகச் சந்தேகத்தின் பேரில் கைதாகி சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

நீதிமன்றம் இவரைப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி மறுத்திருந்தபோதும், சிறைச்சாலை ஆணையாளர் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் தொடர்பு கொண்டு உத்தரவாதம் அளித்ததை அடுத்து பரீட்சைக்குத் தோற்ற தற்போது அனுமதி கிடைத்துள்ளது.

பிரஸ்தாப மாணவன் ஏற்கனவே பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பித்திருந்தால், அனுமதி அ[illegible] பரீட்சைத் திணைக்களத்தால் வழங்கப்படவில்லை. (ஒ-[illegible])

# மேர்வின் எதிர்ப்புப் போராட்டம் தொடரும் சமுர்த்தி முகாமையாளர்கள் அறிவிப்பு
## கண்டியில் இன்று ஆர்ப்பாட்டம்

அமைச்சர் மேர்வின் சில்வா மன்னிப்புக் கேட்கும் வரையிலும், சமுர்த்தி ஊழியரை மரத்தில் கட்டி வைத்தது தொடர்பான நிலைப்பாட்டை அரசு தெளிவுபடுத்தும் வரையிலும் சமுர்த்தி தொழிற்சங்கங்கள் போராட்டங்களை முன்னெடுக்கப் போகின்றன என அகில இலங்கை சமுர்த்தி முகாமையாளர் சங்க ஏற்பாட்டாளர் டி.ஏ. எஸ்.எதிரிசிங்க தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ சமுர்த்தி ஊழியர் சங்க முக்கியஸ்தர்களுடன் பேச்சு நடத்தியமையை அடுத்து போராட்டங்கள் கைவிடப் [illegible] என்று வெளிவந்த செய்திகள் குறித்து எதிரிசிங்கவிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிரான ஆர்ப்பாட்டமொன்று இன்று திங்கட்கிழமை கண்டியில் நடைபெறும் எனவும் அவர் சொன்னார்.

இதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் மேர்வின் சில்வாவை அழைத்து எச்சரிக்கை செய்தார் எனவும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ சமுர்த்தி ஊழியர் சங்க முக்கியஸ்தர்களிடம் இதுபற்றித் தெரிவித்தார் எனவும் ஊடகங்கள் நேற்று செய்தி வெளியிட்டிருந்தன. (ஒ-சி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சீனாவில் கடும் மழையால் மண்சரிவுகள் 80 பேர் பலி; 2 ஆயிரம் பேரைக் காணவில்லை

பீஜிங், ஒக. 09

வட-மேற்கு சீனாவில் இடைவிடாது பெய்துவரும் கன மழையால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஆங்காங்கு ஏற் பட்ட மண் சரிவுகளுக்கு 80 பேர் பலியாகி யுள்ளனர். இரண்டாயிரம் பேர் வரை காணா மற் போயுள்ளனர்.

திபெத்திய கன்ஸு மாகாணத்திலேயே அதிகளவில் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. ஜோகு பிராந்தியத்தில் அநேக வீடுகள் மண்சரிவுகளுக்குள் புதையுண்டுள்ளன. நதி ஒன்று தடைபட்டுள்ளது. இந்நதி நீரால் குடியிருப்புப் பகுதிகள் பாதிப்புக்குள் ளாகி வருகின்றன.

வெள்ள அனர்த்தங்களில் சிக்குண்ட வர்களை மீட்கும் பணியில் இராணுவச் சிப்பாய்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். தடைப்பட்டுள்ள நதிப் பிராந்தியத்தைச் சேர்ந்த ஏறத்தாழ 19 ஆயிரம் பேர் வெளி யேற்றப்பட்டுள்ளார்கள் என பிரதமர் வென்ஜியா பாவோ தெரிவித்துள்ளார்.

சனிக்கிழமை கடும் மழை பெய்தது. இதனால் பல இடங்களில் மண்சரிவுகள் ஏற்பட்டன. நீர் மின் உற்பத்தி நிலைய மொன்றும் மண்சரிவால் நிர்மூலமாக்கப் பட்டுவிட்டது என உத்தியோகபூர்வ சின் குவா செய்தி நிறுவனம் தெரிவித்தது.

பாய்லோங் நதியே மண் சரிவால் தடைப்பட்டுள்ளது. இந்நீர் குடியிருப்புப் பகுதிகளைச் சூழ்ந்துள்ளது. அத்துடன், நீர்மட்டமும் உயர்வடைந்து வருகிறது. பெருவாரியான மக்கள் இப்பகுதியில் சிக் குண்டுள்ளனர் என சிரேஷ்ட அதிகாரி ஒருவர் சின்குவா செய்தி நிறுவனத்துக் குத் தெரிவித்துள்ளார்.

மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்கு சகதிக் குவியல்கள் தடையாக உள்ளன. மக்களால் நடக்க முடியாது. வாகனங்களா லும் செல்ல இயலாது என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

# தங்கச் சுரங்கத்தில் தீ; 16 பேர் பலி

பீஜிங், ஒக. 09

சீன தங்கச் சுரங்கத்தில் ஏற்பட்ட பயங் கர தீ விபத்தில், 16 தொழிலாளர்கள் பலியாயினர். சுரங்கத்தில் சிக்கியுள்ள மேலும் ஏழு தொழிலாளர்களை மீட்கும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது.

சீனாவின் ஷான்டோங் மாகாணம் சாவோயுவான் நகரில், லியுசோன் தங்கச் சுரங்கம் அமைந்துள்ளது. இங்கு, வெள் ளிக்கிழமை இரவு திடீரென தீப்பிடித்தது.

அப்போது, சுரங்கத்தில் 300இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியில் இருந்தனர். தீப்பிடித்ததால், சுரங்கத்திற் குள் பயங்கரப் புகை மூட்டம் ஏற்பட்டது.

உடனடியாகத் தொழிலாளர்களால் வெளியேற முடியவில்லை. இதுகுறித்து தகவல் அறிந்த மீட்புப் படையினர் விரைந்து வந்து, சுரங்கத்திற்குள் சிக்கிய 300 தொழி லாளர்களை மீட்டனர்.

ஆனாலும், தீ விபத்தால் எழுந்த புகை யில் மூச்சுத் திணறி 16 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்; மேலும் 7 தொழிலாளர்கள் சுரங்கத்திற்குள் சிக்கியுள் ளனர். அவர்களை மீட்க தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# சர்ச்சைக்குரிய புதிய ஆவணங்களை வெளியிட 'விக்கிலீக்ஸ்' முடிவு

போஸின், ஒக. 09

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க இரா ணுவ நடவடிக்கை தொடர்பான இரகசிய ஆவணங்களை வெளியிட்டுப் பரபரப்பை ஏற்படுத்திய 'விக்கிலீக்ஸ்' இணையதளம், மேலும் சில சர்ச்சைக்குரிய இரகசிய ஆவ ணங்கள் வெளியிடப்படும் எனத் தெரி வித்துள்ளது.

'விக்கிலீக்ஸ்' இணையதள செய்தித் தொடர்பாளர் டேனியல் ஷிமிட், அசோசி யேட் பிரஸுக்கு சனிக்கிழமை தாம் அளித்த பேட்டியில் இதைத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே வெளியிடப்பட்ட இரா ணுவ இரகசிய ஆவணங்களைப் போன்று மேலும் சில சர்ச்சைக்குரிய ஆவணங்கள் வெளியிடப்படும் என அவர் தெரிவித் துள்ளார். ஆனால், எதனுடன் தொடர்பு டைய ஆவணங்கள் என்பதை அவர் குறிப் பிட்டுச் சொல்லவில்லை.

இவ்வாறு மேற்கொள்ளப்படும் இரக சிய ஆவணங்கள் வெளியீடு அரசு சிறப் பாகச் செயல்பட வழிவகுக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேல்-பலஸ்தீன அமைதிப் பேச்சுக்கு ஐ.நா. செயலர் பான் கீ - மூன் வலியுறுத்து

ஹிரோஷிமா, ஒக. 09

இஸ்ரேல், பலஸ்தீன பகுதியில் அமை தியை ஏற்படுத்துவதற்கான பேச்சுகளைத் தொடங்குமாறு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டனிடம் ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் நாயகம் பான் கீ-மூன் வலியுறுத்தியுள்ளார்.

ஜப்பானில் 65 ஆண்டுகளுக்கு முன் னர் அமெரிக்க இராணுவம் அணுகுண்டு போட்டது. இதில் பாதிக்கப்பட்டவர்களைப் பார்த்து ஆறுதல் கூறுவதற்கு பான் கீ-மூன் ஜப்பான் வந்துள்ளார்.

இங்கிருந்து தொலைபேசி மூலம் ஹிலாரி கிளிண்டனிடம் அவர் பேசியுள் ளார். மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் அதாவது இஸ்ரேல், பலஸ்தீனம் இடையே அமைதி பேச்சுகளை உடனே தொடங்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள் ளார்.

ஹிரோஷிமாவில் அணுகுண்டு வீச் சில் உயிரிழந்தோரின் நினைவிடத்தில் நடைபெற்ற ஆண்டு பிரார்த்தனைக் கூட் டத்திலும் பான் கீ-மூன் பங்கேற்றார். ஐக் கிய நாடுகள் சபையின் செயலாளர் நாய கம் இந்த நினைவிடத்துக்கு வருவது இதுவே முதல் முறையாகும்.

மத்திய கிழக்குப் பகுதியில் அமைதி பேச்சுகளுக்கு 2002ஆம் ஆண்டு அப்போ தைய ஸ்பெயின் பிரதமர் அஸ்னார் முயற்சி மேற்கொண்டார். ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ரஷ்யா ஆகியவை இணைந்து இப்பிரச்சி னைக்குத் தீர்வு காண்பது என அப்போது முடிவு செய்யப்பட்டது.

இரண்டு ஆண்டுகளில் அமைதி தீர்வு காண்பது என அப்போது இலக்கு நிர்ண யிக்கப்பட்டது. ஆனால் 8 ஆண்டுகளாகி யும் தீர்வு காணப்படவில்லை.

சம்பந்தப்பட்ட இரு நாடுகளும் இணைந்து பேச்சு நடத்த உடனடியாக முயற்சி மேற் கொள்ளவேண்டும் என்று பான் கீ-மூன் வலியுறுத்தியுள்ளார்.

இப்போது பலஸ்தீன ஆணைய அதி பர் மெஹ்மூத் அப்பாஸை நேரடி பேச்சு களில் ஈடுபடுமாறு அமெரிக்கா வற் புறுத்தி வருகிறது. அரபு லீக் அமைப்பு களும் நேரடி பேச்சுகளுக்கு முயற்சித்து வருகின்றன.

காஸா பகுதியில் இஸ்ரேல் விதித்துள்ள தடை, ஆக்கிரமிப்புப் பகுதியில் சட்ட விரோதமாகக் கட்டப்பட்ட கட்டடங்கள் ஆகியன இப்பிராந்தியத்தில் பதற்றத்தைத் தோற்றுவித்துள்ளன.

கடந்த வாரம் இப்பகுதியில் 9 குடும் பங்களை இஸ்ரேல் இராணுவம் வலுக்கட் டாயமாக வெளியேற்றியுள்ளது. இந்தக் கட்டடங்கள் அனைத்தும் கிழக்கு ஜெரு சலேம் பகுதியில் அமைந்தவையாகும்.

பலஸ்தீனத்துக்குச் சொந்தமான வர்த் தகக் கட்டடங்கள் பலவற்றை இஸ்ரேல் இராணுவம் தகர்த்துள்ளது என ஐக்கிய நாடுகள் சபை கடந்த வாரமே தெரிவித் தது. சுதந்திரம் பெற்ற பின்னர் கிழக்கு ஜெருசலேமை தங்கள் தலைநகராக மாற்ற பலஸ்தீனர்கள் முடிவு செய்துள்ளனர். இதற்குக் காரணமே யூதர்களுக்கு இந்தப் பகுதியை கடவுள் அளித்துள்ளார் என இவர்கள் உறுதியாக நம்புவதுதான்.

நேரடி பேச்சுகள் ஒன்றுதான் இப்பிரச் சினைக்கு நிரந்தரத் தீர்வாக அமையும் என்று மெஹ்மூத் அப்பாஸ் திட்டவட்ட மாகக் கூறியுள்ளார். புதிதாக அமையும் பலஸ்தீனத்துக்கு எல்லையை வரைய றுக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

சமீபத்தில்தான் அப்பாஸுக்கு அமெ ரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தாம் எழு திய கடிதத்தில் நேரடி பேச்சுகளைத் தொடங்குமாறு வலியுறுத்தியிருந்தார். இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன் யாஹூவும் எவ்வித முன் நிபந்தனையு மின்றி பேச்சுக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

காஸா பகுதியில் இஸ்ரேல் மேற் கொண்ட கட்டாய ஆக்கிரமிப்புக்கு சர்வ தேச அளவில் கடும் கண்டனம் எழுந் துள்ளது. இங்கு நடத்தப்பட்ட மூர்க்கத்தன மான தாக்குதலில் 9 துருக்கியர்கள் கடந்த மே மாதம் உயிரிழந்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை விசாரணைக்கு இஸ்ரேல் ஒப்புக்கொண்டது. குற்றவியல் விசாரணையாக இல்லாமல், உண்மை சம் பவம் குறித்தும் இஸ்ரேல், துருக்கி இடையே நடைபெறும் பிரச்சினை குறித்தும் இதன் மூலம் ஆராயப்பட்டது.

உலக அரங்கில்



கியூபாவில் நடைபெற்ற சிறப்பு நாடாளுமன்ற கூட்டத்தொடரில் முன்னாள் ஜனாதிபதி பிடல் கஸ்ட்ரோ பங்கேற்றுப் பேசுகிறார்.

# அமெ. தொலைக்காட்சித் தொடரில் பிரான்ஸ் ஜனாதிபதியின் மனைவி

லண்டன், ஒக. 09

பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலஸ் சர் கோஷியின் மனைவி கார்லா புரூனி அமெ ரிக்க தொலைக்காட்சித் தொடரில் நடித் தார்.

அமெரிக்காவில் ஒளிபரப்பாகி வரும் சிஎஸ்ஐ எனப்படும் குற்றவியல் தொடர் மிகவும் பிரபலமானது. இந்தத் தொடரில் நடிக்குமாறு இதன் தயாரிப்பாளர்கள், கார்லா புரூனிக்கு அழைப்பு விடுத்திருந் தனர். இதனை ஏற்றுக்கொண்டு அவர் கடிதம் எழுதியிருந்தார்.

அதில் தான் அந்தத் தொடரின் ரசிகை என்றும், அந்தத் தொடரில் நடிப்பதற்குச் சம்மதம் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இதையடுத்து இந்தத் தொலைக் காட்சித் தொடருக்காகப் பிரான்ஸ் தலை நகர் பரிஸில் அமைக்கப்பட்டுள்ள செட் டுக்கு கார்லா வந்தார். சுமார் 2 மணி நேரம் அவருக்கு மேக்அப் போடப்பட்டது.

அவர் எப்போதும் கேமராவைப் பார்த்தே வசனத்தைப் பேசியதால் பலமுறை படப் பிடிப்பு நேரம் நீடித்தது. சுமார் 5 மணிநேரம் போராடி 32 ரீடேக்குகளை வாங்கி ஒருவழி யாக நடித்து முடித்தார் பிரான்ஸ் ஜனாதிபதி யின் மனைவி.

இந்த தொலைக்காட்சித் தொடர், கொலைச் சம்பவங்களில் நுட்பமான ஆதாரங்களைச் சேகரித்து கொலையாளி களைக் கண்டுபிடிப்பது தொடர்பானது.

இந்தத் தொடரில் அருங்காட்சியக காப் பாளராக கார்லா புரூனி நடித்துள்ளார்.

# பிரிட்டனுடனான கருத்து வேறுபாடு நீங்கியது; பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி தெரிவிப்பு

லண்டன், ஒக. 09

பிரிட்டனுடனான அனைத்துக் கருத்து வேறுபாடுகளும் நீங்கிவிட்டன என பாகிஸ்தான் ஜனாதிபதி அஸிப்அலிசர்தாரிதெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்தியா வந்திருந்த பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கெமரூன், பாகிஸ்தானை மையமாகக்கொண்டு செயல் படும் ஜிகாதி அமைப்புகள் மூலம் ஆப்கானிஸ் தான், பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளுக்குத் தீவிரவாதம் பரவுகிறது எனக் குற்றஞ் சாட்டியிருந்தார். இந்தியாவுக்கு எதிரான தீவிரவாத நடவடிக்கைகளைப் பாகிஸ் தான் தடுத்து நிறுத்தவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

டேவிட் கெமரூனின் கருத்துகள் பாகிஸ் தான் அரசியல் வட்டாரத்தில் கடும் அதி ருப்தியை ஏற்படுத்தின. இருநாடுகளுக்கு இடையே இவ் விரிசல் ஏற்படும் நிலையும் உருவானது.

இந்நிலையில் ... பிரதமர் பெனாஸீர் பூட்டோ நினைவாக அவ ரது நண்பரான பிரிட்டிஷ் அமைச்சர் ஆலன் டன்கன், பிரின்சஸ் ரிஸ்பொரோ நகரில் வியாழக்கிழமை சிறப்புக் கூட்டம் நடத் தினார். இதில், பாகிஸ்தான் ஜனாதிபதி சர் தாரி, பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கெமரூன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந் நிகழ்ச்சியின்போது சர்தாரியும், டேவிட் கெமரூனும் சந்தித்து நீண்ட நேரம் பேசினர். இது குறித்து லண்டனி லிருந்து வெளியாகும் கார்டியன் நாளிதழுக்கு சர்தாரி அளித்த பேட்டியில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:-

பிரிட்டிஷ் பிரதமருடன் நேரடியாக மனம்விட்டுப் பேசினேன். இதன் மூலம் இருவரும் இப்போது நெருங்கிய நண்பர் களாகிவிட்டோம். பிரிட்டனும், பாகிஸ்தானும் இனிய, நெருங்கிய, நீண்டகால நட்பு நாடு கள். ஆப்கான் விவகாரம் தொடர்பாக பிரதமர் கெமரூனிடம் விரிவாக விளக்கமளித்துள் ளேன். அதை அவர் புரிந்துகொண்டார்.

தீவிரவாதத்துக்கு எதிராக பாகிஸ்தான் தொடர்ந்து போரிட்டு வருகிறது. அந்தப் போரில் எனது மனைவி பெனாஸீர் பூட்டோ உட்பட 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை இழந்துள்ளோம்.

- இப்படி அவர் கூறியுள்ளார்.

பிரிட்டிஷ் அமைச்சர் ஆலன் டன்கனும், மறைந்த தலைவர் பெனாஸீர் பூட்டோவும் கல்லூரி நண்பர்கள். 1970இல் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் படித்தபோது இரு வரும் நண்பர்களாக இருந்தனர்.

தனது நட்புக்கு மரியாதை செலுத்தும் விதமாக பெனாஸீர் பூட்டோ நினைவு நிகழ்ச்சியை அமைச்சர் ஆலன் டன்கன், பிரின்சஸ் ரிஸ்பொரா நகரில் வியாழக் கிழமை நடத்தினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலித்தூண்டல் அன்னம்மாள் தேவாலய திருவிழா திருப்பலி



வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள புனித அன்னம்மாள் ஆலய வருடாந்த திருவிழா திருப்பலி நேற்றுக் காலை 8.30 மணிக்கு நடைபெற்றது. ஆலயத்தின் நூற்றி அறுபதாவது 'ஆண்டாக இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்கள் குடியேற அனுமதிக்கப்படாத வலித்தூண்டல் பகுதியில் இந்த தேவாலயம் அமைந்துள்ள போதிலும் படைத்தரப்பினரின் அனுமதி பெறப்பட்டு நேற்றையதினம் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியை அருட்தந்தை அருள்நேசன் அடிகளார் நிறைவேற்றினார். இவருடன் பங்குத் தந்தை ஞானேந்திரன், அருட்தந்தை அன்ரனிதாஸ், அருட்தந்தை ஜோர்ஜ், அருட்தந்தை ஜெயசீலன், அருட்தந்தை சதீஸ் ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.
நிகழ்வில் சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டதுடன் படையினரின் முன் அனுமதி பெற்றதன் காரணமாகத் தமது சொந்தப் பகுதியில் பிற்பகல் 3 மணிவரை தங்கிச்செல்வதற்கும் அனுமதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(படங்கள்: நேசன்)

## மாவைக் கந்தன் தேரில் ஆரோகணித்து அடியார்களுக்கு நேற்று அருள்காட்சி

யாழ்ப்பாணம், ஓக. 9

வரலாற்றுச்சிறப்பு மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் காம்யோற்சவத்தில் நேற்றுக்காலை ஷண்முகப்பெருமான் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள்காட்சி வழங்கினார்.

அங்கு கூடியிருந்த 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்களின் அரோஹரா கோஷத்துடன் முருகப் பெருமான் வீதி வலம் வந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

பக்தர்கள் கற்பூரச்சட்டி ஏந்தியும் அங்கப் பிரதட்சணம் செய்தும் நேர்த்திகளைப் பூர்த்தி செய்தனர்.

காலை 7 மணி முதல் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று 10 மணிக்கு தேரில் முருகப் பெருமான் ஆரோகணித்தார்.

ஆலயத்துக்கு பக்தர்கள் வருவதற்கு வசதியாக விசேட பஸ் சேவைகள் சகல பகுதிகளிலும் இருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

வழமைபோல் ஆலய தெற்கு வீதியில் அமைந்துள்ள மடத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது.

வடக்கு வீதியில் அமைந்துள்ள காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களின் மடத்திலும் நேற்று அன்னதானம் இடம்பெற்றது. தாகசாந்திக்காக குளிர் பானங்களும் வழங்கப்பட்டன.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகம் அம்புலன்ஸ் வசதியுடன் செயற்பட்டது. (ஒ-ஐ-86)

## வடபகுதிக்கு புள்ளிவிவர உத்தியோகத்தர்கள் நியமனம்

நாவற்குழி, ஓக. 9


குடித்தொகை மதிப்பு புள்ளிவிவரத் திணைக்களம் யாழ்.மாவட்டத்துக்கு உதவி புள்ளிவிவர உத்தியோகத்தராக வீரசிங்கம் திவ்வியநாதன் என்பவரை அண்மையில் நியமித்துள்ளது.

இதைப்போன்று முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கும் தலா இரண்டு உத்தியோகத்தர்கள் வீதம் நியமிக்க திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அடுத்த ஆண்டு நாடளாவிய ரீதியில் குடித் தொகை மதிப்பு நடவடிக்கைகள் இடம்பெற உள்ளது குறிப்பிடத்தக்கது. (க- 121)

## செல்வச் சந்நிதி ஆலயப் பெருந்திருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பம்

### நகைகளை அணிந்து வராதீர்கள் என அறிவுறுத்து



யாழ்ப்பாணம், ஓக.9

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தின் பெருந்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

18ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் 19ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு கைலாச வாகனமும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பரத் திருவிழாவும் -

23ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தேர்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை மௌனத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

தினமும் காலை 8 மணிக்கும் மாலை 4 மணிக்கும் திருவிழா நடைபெறும். ஆலயத்திற்கு வரும் பக்தர்களை நகைகள் அணிந்து வரவேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ஒ-6)

## கடல்வான் ஆழமாக்க அமைச்சர் டக்ளஸ் நிதியுதவி

யாழ்ப்பாணம், ஓக 09

வடமராட்சி கடற்றொழிலாளரின் நீண்ட நாள் கோரிக்கையான கடல்வான் ஆழமாக்கும் பணிகளுக்கு உதவியமைக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அவர்கள் பாராட்டியுள்ளனர்.

கடல்வான் ஆழமாக்கும் பணிகளுக்கு முதல் கட்டமாக ஒருலட்சத்துக 20 ஆயிரம் ரூபாவை அமைச்சர் வழங்கியிருந்தார். இந்த நிதிமூலம் தொண்டைமானறு முதல் கற்கோவளம் வரையான கடல்பிரதேசத்தில் கடல்வான் ஆழமாக்கும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

இந்நிலையில் கடந்த மூன்றாம் திகதி அங்கு நேரடியாக விஜயம் மேற்கொண்ட அமைச்சர் கடல்வான் ஆழமாக்கும் பணிகளையும் பார்வையிட்டார். அப்போது பருத்தித்துறை பிரதேச செயலர் தி.வரதீஸ்வரன், யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தர்மலிங்கம், வடமராட்சி கடற்றொழில் சமாசத் தலைவர் எமிலியாம்பிள்ளை, ஈ.பி.டி.பி வடமராட்சி அமைப்பாளர் ஐ.ரங்கேஸ்வரன், பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி அவலசமரசிங்க ஆகியோரும் கடற்றொழிலாளர் குடும்பத்தினரும் கலந்துகொண்டனர். (க)

## கோப்பாய் - கைதடி வீதியில் தற்போது கல்லுடைக்கும் ஆலைகள் மும்முரம்

நாவற்குழி, ஓக. 9

கோப்பாய் - கைதடி வீதிப்பிரதேசத்தில் கல் உடைக்கும் ஆலைகள் மூன்று மிக மும்முரமாகப் பணிகளை மேற்கொள்கின்றன. அங்கு மற்றொரு புதிய கல்லுடைக்கும் ஆலையை அமைப்பதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன.

சென்ற வருட ஆரம்பத்தில் இப்பாதை மீளப் பொதுமக்களின் போக்குவரத்துக்காகத் திறந்து விடப்பட்டபோதும் அண்மைக்காலத்தில்தான் கல் உடைக்கும் ஆலைகள் மீள இயங்கத் தொடங்கி உள்ளன.

கட்டட நிர்மாண வேலைகள் குடாநாட்டில் சுறுசுறுப்பாக நடைபெறுவதால் கல்லுடைக்கும் தொழிலும் சிறப்பாக நடைபெறுவதைக் காணமுடிகிறது.

(ஒ-க-121)

## தமிழக அரசியல் வாதிகள் இலங்கை வந்து உண்மை நிலையை அறியத் தடையில்லை

### தூதுவர் பிரசாத் காரியவசம் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 09

தமிழ் நாட்டு அரசியல்வாதிகளில் அநேக மானவர்கள் நல்லவர்கள். அவர்கள் எப்போது வேண்டுமானாலும் இலங்கை வந்து உண்மை நிலைவரங்களை நேரில் அறிந்து கொள்ள முடியும். அதற்குத் தடையில்லை - என்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் தெரிவித்தார்.

யுத்த வெற்றியை சொந்தமாக்கி கொள்கின்றமையின் பின்னணியில்தான் ஜனாதிபதிக்கும் பொன்சேகாவுக்குமிடையில் தனிப்பட்டப் பிரச்சினை நிலவுகின்றது என்பது அப்பட்டமான பொய்யாகும். பொன்சேகாவுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் உள்ளன. அவை தொடர்பாக நீதிமன்றங்கள் சட்டத்துக்கு இணங்க விசாரணை நடத்துகின்றன.

இலங்கை - இந்தியா உறவுகள் மிகவும் நெருக்கமடைந்துள்ளன. ஜனாதிபதி மஹிந்த கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைந்த பிற்பாடு இரு தடவைகள் இந்தியா வந்துள்ளார்.

அதன் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் சகலதுறைகளிலும் செழுமை அடைந்துள்ளன.

தமிழ் நாட்டு அரசியல்வாதிகளில் அநேகமானவர்கள் நல்லவர்கள்தான். ஆனால் சிலர் புலி ஆதரவாளர்களான புலம் பெயர் தமிழர்களின் பாதிப்புக்கு உள்ளாகி விட்டார்கள்.

இந்த அரசியல்வாதிகள் யதார்த்தத்தை அறியாமல் இருக்கின்றார்கள். அவர்கள் எப்போது வேண்டுமானாலும் இலங்கை வந்து உண்மை நிலைவரங்களை நேரில் அறிந்து கொள்ள முடியும். அதற்குத் தடையில்லை.

- இப்படி அவர் தெரிவித்துள்ளார்.

## அரசுடன்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசதரப்புக்கு இரண்டு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கட்சிமாறியதன் காரணமாக உடனடிப் பாதிப்புக்குள்ளாகியிருப்பது ஐக்கிய மக்கள் சுதந்திக் கூட்டமைப்புக்கும் - ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையில் நடைபெற்று வந்த அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளாகும்.

ஐ.தே.க. வின் காமினி ஜய விக்கிரம பெரேரா உடனடியாக வெளியிட்ட கருத்தில் பின்வருமாறு தெரிவித்துள் ளார். பேச்சுவார்த்தைகளைத் தொடர் வதற்கான காரணம் எதனையும் ஐ.தே. கட்சி காணவில்லை.

நாடாளுமன்றில் பூச்சிக் கொல்லிகள் தொடர்பான விவாதத்தில் அவர் பேசிய போது மேலும் கூறியதாவது,

நானும் ஜோசப் மைக்கல் பெரேராவும் ஜனாதிபதியைச் சந்திக்கச் சென்றிருந்தோம். இங்கே இருக்கும் அமைச்சர் சிறிபால டி சில்வாவும் அங்கிருந்தார். அவரும் அதற்கு ஒரு சாட்சியாவார்.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை ஒழிப்பதில் உண்மையிலேயே அக்கறை கொண்டிருக்கிறீர்களா வென்று நான் அவரிடம் கேட்டேன். ஆம் என்று கூறியவர் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்க விரும்புவதே காரணம் என்றார். கடந்த முறை நாம் அவருடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டதன் பின்னரே ஐ.தே.கவிலிருந்து 17 உறுப்பினர்களைத் தம்பக்கத்துக்கு எடுத்துக்கொண்டார். இனிமேல் ஐ.தே.கவிலிருந்து ஓர் உறுப்பினரையும் தாம் எடுக்கமாட்டார் என்று எம்மிடம் கூறியிருந்தார். ஆனால் இப்பொழுது எம் பக்கத்திலிருந்து இரண்டு பேரை எடுத்துக் கொண்டுவிட்டார். வாக்குறுதியை அவர் மீறிவிட்டார். அவருடன் எதிர் காலத்தில் நாம் எதுவித பேச்சு வார்த்தையும் நடத்த வேண்டியதில்லையென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் என்றார்.

அரசதரப்பினர் 'நாங்கள் அவர்களை எடுக்கவில்லை, அவர்களே வந்தால் நாங்கள் என்ன செய்வது' என்று கூச்சலிட்டனர்.

பெரேரா: அப்படிக் கூறாதீர்கள். அவர்களின் பைகள் எல்லாம் நிரப்பப் பட்டு விட்டதும் தாமாகவே அந்தப் பக்கம் வந்து விடுவார்கள். அவர்களின் பொக்கட்டுகளை நிரப்பி அந்தப் பக்கம் எடுத்துக் கொள்ளுங்கள். இந்த நாட்டை நாசமாக்கப் போகிறீர்கள்.

அவர் மேலும் பேசுகையில் எம்மத்தியில் இன்னும் சிலர் இருக்கிறார்கள். அவர்களின் பொக்கெட்டுக்கள் நிரப்பப் பட்டால் அவர்களும் போவார்கள் என்றார். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களவை கட்சியில் சேர்த்ததால் ஐ.தே.கவில் முரண்பாடு வலுத்தது

கொழும்பு ஓக. 9

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்த வந்த உட்பூசல்கள் பூதாகாரமாகி உள்ளன என உள்வீட்டுச் செய்திகள் கூறுகின்றன. சிறிலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவுத் தலைவர் மங்கள சமரவீர ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்ததைத் தொடர்ந்தே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் மறுசீரமைப்புப் பணிகளை தலைவர் ரணில் விக்கிரமசிங்க தாமதப்படுத்தி வருவதை அடுத்து கட்சிக்குள் இருக்கும் அதிருப்திக் குழுவினர் கொந்தளித்துப் போயுள்ளனர். இந்த அரசை எதிர்க்கக்கூடிய பலம் வாய்ந்த நிலைக்கு கட்சியைக் கொண்டு வரவேண்டுமாயின் கட்சிக்காகத் தொண்டாற்றியவர்களுக்குப் பதவிகள் வழங்கப்பட வேண்டும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

நீண்ட காலமாகக் கட்சிக்காகப் பாடுபட்டவர்களைப் புறந்தள்ளிவிட்டு மங்கள போன்ற மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு கட்சியில் உயர் பதவிகள் தரப்படுவது இந்தத்தரப்பினருக்கு ஆத்திரத்தைக் கிளப்பி உள்ளது.

இதனை அடுத்து அதிருப்தியாளர்கள் குழுவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அரசுப் பக்கம் தாவலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏற்கனவே ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவான பிரபா கணேசன் மற்றும் திகாம்பரம் ஆகியோர் அரசுப் பக்கம் தாவி உள்ள நிலையில் மேலும் மூன்று அதிருப்தியாளர்களும் அரசுப் பக்கம் தாவுவதற்குத் தயாராக உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவதற்கு இன்னும் நான்கு உறுப்பினர்களின் ஆதரவே அரசுக்குத் தேவைப்படும் நிலையில் ஐ.தே.கவுக்குள் ஏற்பட்டுள்ள குழப்பம் அதற்குச் சாதகமாக அமைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.


## புலமைச் சுடர் நடத்தும் தரம் 5 கருத்தரங்குத் தொடர் - 2010

இன்றைய தினம் 13, 14ஆம் பக்கத்தில் வெளிவந்த முதலாவது கருத்தரங்குத் தொடரில் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட முன்னணி ஆசிரியர் யு.எல். எம். சாஜித் வளவாளராகப் பங்குபற்றுகிறார். நாளைய தினம் இடம்பெறும் இரண்டாவது கருத்தரங்குத் தொடரில் வவுனியா மாவட்ட முன்னணி ஆசிரியர் எஸ்.தீபன் வளவாளராகப் பங்குபற்றுவார்.


## இன்று ஆரம்ப.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்பாளர்கள் தெரிவித்தனர்.

பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன என்றும் பரீட்சைக்கான முதல் மூன்று நாள்களுக்குரிய வினாத்தாள்கள் வந்து சேர்ந்துள்ளன என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை -

இந்தப் பரீட்சைக்கு நாடுமுழுவதும் 268,933 மாணவர்கள் தோற்றவுள்ளனர். இவர்களுள் 214,239 பேர் பாடசாலைப் பரீட்சார்த்திகள் ஆவர்.

இப் பரீட்சையினை நடத்துவதற்காக நாடுமுழுவதும் 1,931 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்காக 292 இணைப்பு நிலையங்களும் 33 ஒருங்கிணைப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. (ஒ-ஐ-405)

## அரசமைப்புத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் முறை மறுசீரமைப்பு குறித்து இரு தரப்புகளுக்கு இடையிலும் இரு சுற்றுப் பேச்சுகள் நடைபெற்றன.

இரண்டாம் சுற்றுப் பேச்சுகளில் கலந்துகொண்ட ஐ.தே.கட்சித் தவிசாளர் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி ஜயவிக்ரம பெரேரா ஜனாதிபதியிடம் இனிமேல் ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசில் இணைத்துக்கொள்ளமாட்டேன் என்ற உறுதிமொழியையும் பெற்றுக்கொண்டார்.

இந்த நிலையில், ஐ.தே.கட்சிப் பட்டியலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற பிரபா கணேசன், பீ.திகாம்பரம் ஆகியோர் திடீரென அரசின் பக்கம் தாவினர். இதையடுத்து, ஐ.தே.கட்சி தவிசாளர் காமினி ஜயவிக்ரம பெரேரா இனிமேல் அரசுடன் பேச்சு நடத்தப்போவதில்லை என நாடாளுமன்றில் திட்டவட்டமாக அறிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தச் சூழ்நிலையை அடுத்தே ஐ.தே.க. புதிய நிலைப்பாட்டை எடுத்துள்ளது என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-சி)

## அமெரிக்க நாட்டு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தருணத்தில் இந்தக் கப்பல் தொடர்பில் தாம் நடவடிக்கை எடுக்க இருக்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சன்-சீ கப்பல் தொடர்பிலான தகவல்கள் அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்குத் தெரிந்தபோதும் அதனை வெளியிட அவர்கள் மறுப்புத் தெரிவிக்கின்றனர் என அமெரிக்க இணைய தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமது பெயரைக் குறிப்பிட விரும்பாத இலங்கைத் தமிழர் ஒருவர் அந்தக் கப்பல் குறித்த தகவல் பற்றி அறிந்திருக்கிறார் எனவும், எனினும் தமது உறவினர் எவரும் அதில் இல்லை என அவர் தெரிவித்துள்ளார் என்றும் மேலும் கூறப்படுகின்றது.

இதேவேளை, அந்தக் கப்பலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் வந்தாலும் கூட ஒருவரும் அதனை உறுதிப்படுத்த மாட்டார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (சி)

## சட்டவிரோதக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீட்கப்பட்டனர் என மெக்ஸிக்கோ சட்டமா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றையடுத்து இவர்கள் மீட்கப்பட்டுள்ளனர். உடலில் நீர்வற்றிய நிலையில், ஆபத்தான நிலையில் அவர்கள் இருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. மூன்று மீற்றர் நீளம் கொண்ட கொள்கலனில் இந்த 76 பேரும் தங்கியிருந்துள்ளனர்.

மீட்கப்பட்டவர்கள் இலங்கை, கௌதமாலா, ஹொண்டுராஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்கள் மெக்ஸிக்கோவில் சட்டபூர்வமாகத் தங்கியிருப்பதற்கான ஆவணங்களைக் கொண்டிருக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் மெக்ஸிக்கோ தேசிய குடிவரவு அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் எத்தனை ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் என்ற விவரம் வெளியிடப்படவில்லை.

இந்த சட்டவிரோத குடியேற்றவாசிகளை அநாதரவாக நெடுஞ்சாலைக்கு அருகே கைவிட்டுச் சென்றது யார் என்பதைக் கண்டறியும் விசாரணைகள் நடைபெறுவதாகக் குடிவரவு அலுவலகம் தெரிவித்துள்ளது. (அ-சி)

## கொஹன்ன......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறுதிப் போர் நடைபெற்ற போது சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் மீறப்பட்டன எனக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தனக்கு ஆலோசனை தரவென ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் அமைத்த குழுவிற்கு உரிய முறையில் எதிர்பார்ப்பைத் தெரிவிக்காத காரணத்தாலும் அந்தக் குழுவைத் தடுத்து நிறுத்த உரிய இராஜதந்திர நடவடிக்கைகளை எடுக்காததன் காரணத்தாலுமே பாலிதவின் பதவி பறிக்கப்பட உள்ளது என வெளிவிகார அமைச்சு வட்டாரத் தகவல்கள் கூறுகின்றன.

ஐ.நாவிற்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாக இருந்த றொகான் குணரத்ன திருப்பி அழைக்கப்பட்டதை அடுத்து அந்த இடத்திற்கு கடந்த ஒரு வருடத்திற்கு முன்பே பாலித நியமிக்கப்பட்டிருந்தார்.

திருப்பி அழைக்கப்படும் கோஹன்ன அவர் முன்னர் வகித்து வந்த பதவியான வெளிவிகார அமைச்சின் செயலாளர் பதவிக்கோ வெளிநாட்டுத் தூதவராகவோ நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


பாடசாலை மாணவர்களுக்கான ... விசேட பயிற்சி நெறிகள்
ஆரம்பம் 09, 14.08.2010

DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE
DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING
ICT, GIT
DIPLOMA IN DESKTOP PUBLISHING
DIPLOMA IN INTERNET E-MAIL
DIPLOMA IN VISUAL BASIC
KIDS PROGRAMMING

Softview Computer College
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna.
T.P: 021 2225170


# மிக விரைவில் ஐ.தே.கவுக்கு பெரு வெற்றி காத்திருக்கிறது

## மங்கள சமரவீர நம்பிக்கை

கொழும்பு, ஓக. 09

ஐக்கிய தேசியக் கட்சிக்கு மிகப்பெரிய வெற்றி ஒன்று விரைவில் கிடைக்கும் - என்று கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐ.தே.கட்சி ஆட்சிப் பீடமேறவேண்டும் என்ற நோக்கத்திலேயே தாம், 16 வருடங்களாக இருந்த சிறிலங்கா சுதந்திர கட்சியில் இருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

1977 ஆம் ஆண்டு பெற்ற வெற்றியைப் போல, ஐ.தே.கட்சிக்கு மிகப்பெரிய வெற்றி ஒன்று விரைவில் கிடைக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மிகச்சிறந்த உறுப்பினர்களைக் கொண்டுள்ள ஐக்கிய தேசிய கட்சி வெகு விரைவில் ஆட்சிக்கு வரும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# மக்களின் நம்பிக்கையை இழந்து விடக் கூடாது!

## அரச எம்.பிக்களுக்கு ஜனாதிபதி அறிவுரை

கொழும்பு, ஓக. 09

அரசின் செயற்பாடுகள் மீதான மக்களின் நம்பிக்கையை எந்தக் காரணத்தைக் கொண்டும் இழந்துவிடக் கூடாது - என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரச நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான இரண்டு நாள் செயலமர்வின் இறுதித் தினத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்பொது அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசின் மீது போது மக்கள் முழுமையான நம்பிக்கை வைத்திருக்கின்ற போதும், அதை வலுவிழக்க விட்டுவிடக் கூடாது என்றும் அவர் அரச நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

எதிர்காலத்தில் அனைவரும் ஒன்று திரண்டு, அரசின் மக்கள் தொடர்பான பணிகளில் ஐக்கியமாகச் செயற்பட வேண்டிய தருணம் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் பொருட்டு, அரசின் அனைத்து அங்கங்களும், புதிய நெரியாழ்கையுடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கனகாம்பிகை ஆலயத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுகின்றது.

- இவ்வாறு ஆதங்கத்தோடு கருத்து வெளியிட்டுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

கிளிநொச்சி கனகாம்பிகை குள அம்மன் ஆலயப் பகுதிக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எஸ்.சிறிதரன் ஆகியோர் விஜயம் செய்து நிலைமைகளை அவதானித்தனர். இதன் பின்னரே மேற்கண்டவாறு சரா எம்.பி தெரிவித்தார்.



இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கனகாம்பிகை குள அம்மன் கோயிலின் தேர் இழுக்கும் வீதியில் அரைவாசிக்கும் அதிகமான நிலப்பரப்பில் முட்கம்பி வேலி இட்டு இராணுவ முகாம் அமைப்பதற்காகப் படையினர் கையகப்படுத்தியுள்ளனர். இதனால் குறித்த ஆலயத்தின் ஆகம வழிபாட்டுமுறை பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. கிளிநொச்சி மக்களின் வாழ்வியலோடும், வரலாற்றோடும் நெருங்கிய தொடர்புடைய இந்த ஆலயத்தின் தேர் இழுக்கும் வீதியைப் படையினர் இவ்வாறு கையகப்படுத்தி இருப்பதன் மூலம் எதிர்காலத்தில் மத ரீதியான முரண்பாட்டுநிலை ஒன்று தோன்றிவிடுமோ என்ற சந்தேகம் எழுகின்றது.

வன்னியில் அரச மரங்களும், புத்தர் சிலைகளும், விகாரைகளும் புதிதாக முளைத்து வரும் சூழலில் பாரம்பரியமாக இந்த மண்ணில் மக்களின் ஆன்மீக வழிபாட்டுக்கு வழி சமைத்த இந்து ஆலயங்கள் சிதைக்கப்பட்டிருப்பதும், அவற்றின் வழிபாட்டு முறைமைகள் தடுக்கப்பட்டிருப்பதும் ஆலயப் பகுதிகள் இராணுவமயப்படுத்தப்பட்டு வருவதும் தமிழ் மக்களின் மனங்களை வேதனையில் ஆழ்த்தியுள்ளன. காலப்போக்கில் இன ரீதியான வேறுபாடு, மதம் சார்ந்த யுத்தமாக உருவெடுத்துவிடுமோ என்ற அச்சம் கனகாம்பிகை குளம் அம்மன் ஆலயச் சூழலை பார்க்கின்ற போது எழுகின்றது - என்றார்.

இது குறித்து சிறிதரன் எம்.பி தெரிவிக்கையில் -

தமிழ் மக்களின் பொருளாதார நிலையோடு நெருங்கிய தொடர்புடையது கனகாம்பிகைக் குளம் அம்மன் ஆலயம். கிளிநொச்சி ஒரு விவசாயப் பிரதேசமாக எழுச்சி பெறுவதற்கு கனகாம்பிகை குளம் பிரதான காரணமாகும். இந்தக் குளத்தின் பாதுகாப்புக்கும் அமோகமான விவசாய விளைச்சலுக்கும் கனகாம்பிகைக் குளம் அம்மனே காரணம் என்ற ஐதீகம் இன்றுவரை எம் மக்களிடம் தொடர்ந்தும் நிலவிவருகின்றது. இவ்வாறு மக்களோடு நெருங்கிய தொடர்புடைய ஆலயச்சூழலை இராணுவமயப்படுத்துவது என்பது ஒட்டுமொத்த மக்களினதும் மனங்களை நோகடிக்கும் செயலாகும். இது எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளப்படமுடியாததாகும் - என்றார்.

நேற்றைய விஜயத்தின் போது குறித்த கோயிலுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்து பார்வையிட்ட இரு எம்.பிக்களும் கோயில் அறங்காவல் சபை ஒன்றுகூடலிலும் அன்னதான நிகழ்விலும் கலந்து கொண்டனர். இதேவேளை கனகாம்பிகை அம்மன் ஆலயத் திருப்பணிக்கென சரவணபவன் 2 லட்சம் ரூபாவை நேற்றைய தினம் வழங்கினார். (ஒ-சி)


N.E.W - ஆனைப்பந்தி
2011 A/L - புலங்கள், வெப்பவியல்
2012 A/L - பொறியியல் (நீர்நிலையியல்)
By M. கருணாநிதி
ஆரம்பம் : 09-08-2010
ஆங்கிலம், தமிழ் மொழிமூலம்

2010 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான விசேடகருத்தரங்கு
உங்கள் பிரதேசங்களில் 10.08.2010 இலிருந்து 12.08.2010 வரை நடைபெறும்
★ கட்டணம் 350/= (கையேடுகள் இலவசம்)
★ உயர்கலைக் கல்லூரி (மீசாலைச் சந்தி) — 8.30-10.30
★ கிறிஸ்டல் (நெல்லியடி) — 11.00-1.30
★ D.M.I (ஆரியகுளச்சந்தி) — 2.30- 5.00
★ கப்றா (சித்தங்கேணி) — 5.30- 8.00
உளச்சார்பு கணிதம் தொடர்பான யாழ்.முன்னணி ஆசிரியர் த.தவசேகர் கருத்துக்கள் வழங்குவார்.

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
CHEMISTRY

| 2012 A/L | 2011 A/L |
|---|---|
| ஒட்சியேற்றம் தாழ்தல் | சேதன இரசாயனம் |
| ஆரம்பம்: 10.08.2010 | ஆரம்பம்: 11.08.2010 |
| Tue Thu 6.30 - 7.30 a.m | Mon, Wed, Fri (6.30 - 7.30 a.m) |

BY: RAJAH


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org